Registered as a Newspaper

பக்கம் -20 விலை 12/=

# தமிழ் அலை

வாரமலர்

TAMILALAI

அலை -01 ஞாயிற்றுக்கிழமை, 01-02-2004 ஓசை -43



வாசக நேயர்களுக்கு !

புனித ஹஜ்ஜுப் பெருநாள் வாழ்த்துக்கள்





## சிங்கள தேசம் மீது அழுத்தம் வேண்டும்

## ஆறுமுகம் மறுப்பு!

## தப்பும் வழி என்ன சந்திரிகா மேடம் ?

## எலிக்காய்ச்சல் எச்சரிக் கை!

வாரமலர் தமிழ்அலை Tamilalai

பிரதான வீதி,
கொக்கட்டிச்சோலை.
தொ. பே, தொலைநகல் 065.2226110
E-MAIL. tamilalai32@yahoo.com.
www.tamilalai.net
01.02.2004

## சிங்கள தலைமைகளிடம் புரிந்துணர்வு வேண்டும்

சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதானால் ஜனாதிபதி பறித்தெடுத்த மூன்று அமைச்சு பொறுப்புக்களையும் மீள அரசாங்கத்திடம் கையளிக்க வேண்டும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை செம்மையாக அமுல்படுத்தப்படும் பட்சத்தில் மாத்திரம் தான் விடுதலைப் புலிகளும், அரசாங்கமும் சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முடியும். இதில் விடுதலைப்புலிகள் உறுதியாக இருக்கின்றனர். சிறிலங்கா சுதந்திரக்கட்சி, பேரினவாதக் கட்சியான ஜே. வி. பி செய்து கொண்ட உடன்படிக்கை சமாதானத்தை ஏற்படுத்துவதில் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதை விடுதலைப்புலிகளும் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தனர்.

நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய ஒரு புறச் சூழ் நிலை உருவாகும். நிலையில் தான் சிறிலங்கா அரசுடனான சமாதானப் பேச்சுக்களைத் தொடரலாம். என்பது விடுதலைப் புலிகளின் நிலைப்பாடாகும்.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் இழுபறி நிலையில் தீர்வு காண வேண்டிய பொறுப்பு ஜனாதிபதி கைகளில் தான் தொக்கி நிற்கிறது என்பது அரசாங்கத்தின் குற்றச்சாட்டாகும்.

மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை ஜனாதிபதி பறித்தெடுத்து அரசுக்கு ஒரு சிக்கல் நிலையை உருவாக்கிய சூழ் நிலையில் தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி -ஜே. வி. பி உடன்படிக்கை யைச் சாத்திடப்பட்டது.

மேற்படி உடன்படிக்கை நீடித்து நிற்க வேண்டுமானால் ஜனாதிபதி ஐக்கிய தேசிய முன்னணிக்கு ஏதாவது ஒரு வழியிலாவது தொல்லை கொடுக்க வேண்டும் என்பது ஜே.வி.பி நிலைப்பாடு இவ்வாறான ஒரு சூழ் நிலையில் அமைச்சுப் பொறுப்புக்களை சர்வதேச அழுத்தம்காரணமாக ஜனாதிபதி மீள ஒப்படைக்க நினைத்தால் சுதந்திர மக்கள் முன்னணியைக் கேள்விக் குறியாக்கி வரும்

எனவே அரசோ அல்லது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியோ புரிந்துணர்வுடன் தமது அரசியல் அதிகாரங்களைப் பரிமாறும் சூழ்நிலையை உருவாக்குவது அவசியம். இல்லாவிட்டால் இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியில் தீர்வு காண்பது கேள்விக்குறியாய் போய் விடும்.

### இன்றைய நாள்

சூரி: காலை 06.36- மாலை 06.12
ராகு: பி.ப. 04.44- மாலை 06.11
எம: ந.ப. 12.23- பி.ப. 01.50
தெய்-முகூ: மு.ப. 11.25- ந.ப. 12.23
நசஷ-தியா: மு.ப. 10.13- மு.ப. 11.58
பி.இ: 01.16- பி.இ. 03.01

திதி: காலை 07.36 வரை தசமி
நசஷ: மு.இ. 07.04 வரை ரோகிணி
சு-யோகம்: முழுவதும் சித்தம்
சிராத்தம்: தைமாத பூ-ஏகாதசி
பிறந்ததின வழிபாடு: ரோகிணி

# சமாதானக் கதவை மூடும் தென்னிலங்கை காய் நகர்த்தல்கள்

**ஜி.நடேசன்**

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான பேச்சுவார்த்தைகளை தமிழீழ விடுதலைப்புலிகள் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் இடைநிறுத்தியதுடன் இடைக்கால நிர்வாக சபைநிறுவி மக்களின் இயல்பு வாழ்க்கையை உறுதிப்படுத்தினாலேயே சமாதான பேச்சுவார்த்தைகளை



மீண்டும் தொடர முடியுமென வலியுறுத்தினர். இதன் பிரகாரம் ஸ்ரீலங்கா அரசாங்கம் தயாரித்துக் கொடுத்த இரண்டு வரைபுகளை நிராகரித்த புலிகள் பலதரப்பினரது கலந்தாலோசனையின் பின்னர் பதில் வரைபை தயாரித்து வழங்கி அது தொடர்பான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்ப டாமலேயே இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

கடந்த வருடம் நவம்பரில் ஜனாதிபதி பாதுகாப்பு ஊடகத்துறை, உட்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தப்பினோம் பிழைத்தோமென்று வாய்ப்பைப் பயன்படுத்தி பேச்சுவார்த்தை கடப்பாட்டிலிருந்து விலகியிருக்கிறார். இந்த இக்கட்டான நிலைமை காரணமாக நோர்வே அரசாங்கமும் அனுசரணையாளர் கடப்பாட்டிலிருந்து தற்காலிகமாக தன்னை விடுவித்துள்ளது.

இந்த நிலையிலும் பயங்கர வாத அமைப்பாக ஸ்ரீலங்கா அரசாங்கத்தினால் சர்வதேச சமுகத்திற்குக் கட்டுப்படும் தமிழீழ விடுதலைப்புலிகள் மிகவும் பொறுமையோடும் பற்றுறுதியோடும் போர் நிறுத்த ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வருகிறார்கள். இன்று போர் நிறுத்தத்தின் பலாபலன்களை சிங்கள தேசம் அனுபவித்துவரும் நிலையில் தமிழர் தேசம் போர் நெருக்குவாரங்கள், இராணுவ அழுத்தங்களுக்கு மத்தியில் மட்டுமல்ல உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் சொந்த இடங்களுக்குச் செல்ல முடியாதவர்களாக போர் நிறுத்த சூழலை எதிர் கொண்டு வருகிறார்கள்.

எனினும் சிங்கள தேசத்து அரசியற் கட்சிகளின் தலைவர்கள் போர் ஓய்ந்த சூழலைப் பயன்படுத்தி தமிழர்களுக்கு எதிராகப் பேரணிகள், பொதுக் கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடாத்தி இனவாதத்தை சிங்கள மக்களுக்கு ஊட்டி வருகிறார்கள் குறிப்பாக ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக் கூட்டணியோ அல்லது ஜனாதிபதி பிரதமர் அதிகார இழுபறியோ போர்ச் சூழலில் ஏற்பட்டிருக்க வாய்ப்புக்கள் மிகமிகக் குறைவென்றே குறிப்பிடலாம்.

ஐம்பத்தாறாவது வருடத்தை எதிர் வரும் புதன்கிழமை சுதந்திர ஸ்ரீலங்கா எட்டவுள்ளது. சாத்வீகப் போராட்டத்தில் ஆரம்பித்து கடந்த 21வருடங்களாக ஆயுதப் போராட்டமாக விஸ்வரூபமெடுத்துள்ள இனப்பிரச்சினையின் நீள அகல ஆழங்களை புரியாதவர்களைப்போல ஒப்பந்தங்களையும், கொள்கைத் திட்டங்களையும் சிங்களக் கட்சிகள் வகுத்து வருகின்றன. அதேபோல அயல்நாடான இந்தியாவும் கருத்துக்களை தெரிவித்து வருகின்றது.

ஜே.வி.பி. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கூட்டமைப்பான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒப்பந்தத்தில் இலங்கையின் ஆள் புல ஒருமைப்பாடு, இறைமை மற்றும் தன்னாதிக்கத்தைப் பாதுகாப்பதுடன் இவைகளுக்கிடையில் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புதல் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் ஆரம்ப முயற்சிகளில் ஒன்றாகக் குறிப்பிட்ட பிரச்சினையுடன் சம்மந்தப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் உட்பட சகல தரப்பினருடனும் நியாயமான நிபந்த னைகளுடன் பேச்சுவார்த்தை நடாத்துதல் பிரிவினை வாத இயக்கத்தை தோல்வியடையச் செய்தல் என்ற அடிப்படையில் ஒருமைப்பட்டுள்ளன.

அத்தோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மகாணமட்ட அதிகாரப் பரவலாக்கல்களையும், ஜே.வி.பி. உள்ளூராட்சி மன்றங்களின் மட்டத்தில் அதிகாரப் பன்முகப்படுத்தலை தீர்வாக முன்வைத்துள்ளன.

இந்திய அரசு வெளியிட்ட குடியரசு தினச் செய்தியில் சகல சமூகங்களின் இணக்கப்பாட்டுடன் இலங்கையின் இறைமை, ஐக்கியம் என்பவற்றின் அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை 'புலி'கள் சமர்ப்பித்த இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான வரைபை தனி ஈழத்திற்கான அடிப்படை என ஜே.வி.பி குறிப்பிடுகிறது. இந்த நிலையில் இலங்கையின் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான எதிர்காலம் எப்படி அமையப் போகிறது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.



வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு அமைய தமிழர் தன்னாட்சி இறைமை என்பற்றின் அடிப்படையில் தமிழ் ஈழத்திற்காக போராடும் புலிகளுடன் ஐக்கிய இலங்கை, ஆள்புல ஒருமைப்பாடு இறைமை என்பவற்றின் அடிப்படையில் சிங்கள தேசம் எப்படி கருத்தொருமித்துக் காணப்போகிறது. அத்தோடு இந்தியா அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் 'கொண்டுள்ள நிலைப்பாடு காரணமாக முன்னைய வெளியுறவுக் கொள்கையையே கடைப்பிடித்து வருகிறது என்பதையே குடியரசு தினச் செய்தி புலப்படுகிறது.

தற்போதைய போர் நிறுத்த சூழல் ஏற்படுவதற்கு முழுமுதற்காரணமாக இருக்கும் இராணுவ சமபலத்தைக் குறைப்பதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கமும், சிங்களக் கட்சிகளும், சமாதான விரோத அன்னியச் சக்திகளும் முயன்று வருகின்றன.

சிங்கள தேசம் சமாதானம் என்பது புலிகளை எப்படியாவது சமரசப்படுத்தி போரிடாமல் செய்வது அல்லது புலிகளின் இராணுவ சமபலத்தை (போர்ச் சூழலில் குலைக்க முடியாவிட்டாலும்) போர் நிறுத்த சூழலில் குலைக்க திரைமறைவிலும் வெளிப்படையாகவும் நடவடிக்கை எடுப்பதிலேயே குறியாக உள்ளது.

இலங்கையில் அமைதி வழியில் போரை முடிவுக்குக் கொண்டு வர வேண்டுமாயின் சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டத்தின் பின்னணியை உணர்ந்து சிங்கள கட்சிகளுக்கும் அரசாங்கத்திற்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

அதேவேளை தமிழ் மக்கள் தமது இராணுவ சமபலத்தினை தமிழீழ விடுதலைப்புலிகளூடாக தக்க வைப்பதற்கு இயன்ற பங்களிப்பை வழங்க வேண்டும்.

ஸ்ரீலங்காவின் தற்போதைய அரசியல் களநிலவரங்கள் இனப்பிரச்சினைகளை அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னோடியான இடைக்காலசபையை உருவாக்குவதற்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க கூட சாதகமற்றதாகவே உள்ளன. பிரதான கட்சிகள் எந்த தேர்தல் முதலில் வரும் அதனை எதிர் கொள்வதற்கான அஞ்சல் ஓடங்களில் ஈடுபட்டு வருகின்றன.

இனப்பிரச்சினை, நாட்டின் பொருளாதாரம் என்பன பற்றிய கவலையே இன்றி செயற்பட்டு வருகின்றன.

எனினும் வர்த்தக சமுகம், நிர்வாக அதிகாரிகளும் கொடுத்து வரும் அழுத்தம் காரணமாக தற்காலிக சுமுகநிலை ஏற்படுவதற்கான அறிகுறிகள் தென்பட்டு வருகின்றன. அது கூட பெப்ரவரி 17ம் திகதி நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் கூட்டத்தில் கலந்து கொள்ளும் நாடுகளின் கண்களில் மண்ணைத் தூவவே யாகும்.

இலங்கை அரசாங்கம் இனப்பிரச்சினை விடயத்தில் மட்டுமே இறைமையை தூக்கிப்பிடிக்கிறது. ஆனால் போரை முடிவுக்குக் கொண்டு வர இறைமையைத் தாரைவார்த்து வருகிறது. ஏன் ஜே.வி.பி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒப்பந்தம் கூட மூலதன முதலீட்டை ஆகக் கூடியளவில் திரட்ட இலங்கையை உலகிற்கு திறந்து விடவும். இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இறைமை என்பது இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மட்டும் இறுக்கமாக்கப்பட்டுள்ளது.

இலங்கையை புலிகள் பிளவுபடுத்தப் போவதாக சிங்கள மக்களுக்கு பூச்சாண்டி காட்டும் சக்திகளாலேயே இந்த நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. புலிகள் இப்போது காட்டிவரும் பொறுமையை இனிமேல் ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது. தமிழ் மக்களும் அனுமதிக்க மாட்டார்கள்.

தற்போது தென்னிலங்கையில் நடைபெற்றுவரும் அரசியற் காய் நகர்த்தல்கள் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை மூடுவதாகவே உள்ளது.




# சு.ப.தமிழ்ச்செல்வன் குழு ஐரோப்பிய நாடுகளுக்கு விஜயம்

## சமாதானத்தில் கொண்டுள்ள நம்பிக்கை குறித்து விளக்கம்



தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் தலைமையிலான குழுவினர் ஐரோபிய நாடுகளுக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கு மிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுள்ள நிலையில் அவரது ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் முக்கிய இடத்தை வகிக்கிறது.

ஜனாதிபதி பொதுஜன ஐக்கிய முன்னணி அரசிடம் இருந்த மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைத் தன்வயப்படுத்தியதைத் தொடர்ந்து அரசியல் தலைமைகளிடம் அதிகார இழுபறித்தன்மை காணப்படுகிறது.

அதிகாரத்தை ரணில் அரசுக்கு வழங்கி விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை மீள ஆரம்பிக்கும் சூழ்நிலையில் ஜனாதிபதி இல்லை. விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களில் இருந்து நழுவல் போக்கை பிரதமர் கடைப்பிடித்து வருகிறார்.

எனினும் விடுதலைப்புலிகள் சமாதானத்தில் பற்றுறுதியுடன் இருப்பதை சர்வதேச சமுகத்துக்கு உணர்த்தியுள்ளனர்.

இவ்விடயத்தை ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றுள்ள தமிழ்ச் செல்வன் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

# அதிகார இழுபறி குறித்து ஐ.நா.செயலர் கவலை



இலங்கை அரசியல் நிலவரம் குறித்து ஐ.நா. செயலாளர் நாயகம் கொபி அனான் கவலை தெரிவித்துள்ளார்.

இலங்கையில் விரைவில் சமாதானம் ஏற்பட வேண்டும் எனவும் அதற்கான ஒரு சூழலை ஏற்படுத்த வேண்டும் எனவும் கொபிஅனான் தெரிவித்துள்ளதாக ஐ.நா. சபையின் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

சிறிலங்கா அரசியல் தலைமைகள் தமது அதிகார இழுபறியை முடிவுக்குக் கொண்டு வந்து சமாதானப் பேச்சுக்களைத் தொடருமாறு கொபி அனான் செய்தியில் குறிப்பிட்டள்ளார்.

# சர்வதேச சமூகம் — அழுத்தம் கொடுக்க வேண்டும்.

## நோர்வே தூதுவரிடம் கருணாஅம்மான் வலியுறுத்தல்



சர்வதேச சமுகம் சிறிலங்கா அரசுக்கு பேச்சுவார்த்தைகளைத் தொடர அழுத்தம் கொடுக்க வேண்டும் என கிழக்கு மாகாண மூத்த தளபதி கேணல் கருணாஅம்மான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கைக்கான நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஜனவரி 26ம் திகதி காலை கரடியனாறு தேனகத்தில் கருணாஅம்மானைச் சந்தித்து கலந்துரையாடிய போது இந்த வேண்டுகோளை விடுத்தார்.

விடுதலைப்புலிகள் இதயசுத்தியுடன் போர் நிறுத்தத்தை கடைப்பிடித்து வருகின்றனர். சிங்கள தேசம் சமாதானப் பேச்சுக்களில் அக்கறையின்றி காலத்தை இழுத்தடித்து வருகின்றது.

இச் சூழ்நிலையில் சர்வதேச சமுகம் சமாதானப் பேச்சுக்களைத் தொடர இறுக்கமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என குறிப்பிட்டார்.

நோர்வே தூதரக பொறுப்பாளர் ரோட்குற்றுட், நோர்வே தூதரக சமுகமேம்பாட்டு ஆலோசகர் எல். விஜயதாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கொடைவழங்கும் நாடுகள் உதவிவழங்குவதில் தயக்கம்

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதி நிதிகள் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

ஜப்பானிய இலங்கைக்கான விசேட சமாதான தூதுவர் ஜசூசிஅகாசி தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கொடை வழங்கும் நாடுகள் பிரதிநிதிகள் கவலைதெரிவித்துள்ளனர். விடுதலைப்புலிகள் சமாதானத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் நிலையில் சிறிலங்கா அரசியல் தலைமைகள் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணாது தமது அதிகாரம் குறித்து இழுபறிப்பட்டுக் கொண்டு நிற்கின்றன. பேரினவாத கட்சிகள் போர்ப் பதற்றமான ஒரு போக்கை கடைப்பிடிக்கின்றனர். இத்தகைய சூழ்நிலையில் கொடை வழங்கும் நாடுகள் தீர்மானித்தது போன்றுஇப்போது நிதிஉதவி வழங்கமுடியாது என அப்பிரதிநிதி கவலை தெரிவித்துள்ளனர்.

# வோஷிங்டன் மாநாட்டில் முக்கிய தீர்மானம் எட்டப்படலாம்

இலங்கைக்கு கொடை வழங்கும் நாடுகள் பிரதிநிதிகள் கூட்டம் எதிர்வரும் பெப்ரவரி 17ம் திகதி அமெரிக்காவில் நடைபெறவுள்ளது.

கொடைவழங்கும் நாடுகள் பிரதிநிதிகள் சர்வதேச நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் சிறிலங்கா அரச தரப்பு பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் இம்மாநாட்டில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படலாம் என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். சிறிலங்கா ஜனாதிபதி அரசிடம் அதிகாரங்களைப் பகிர்ந்து கொடுக்காது கடினமான போக்கைக் கடைப்பிடிப்பதுடன் போர் பதற்றமான ஒரு சூழலை உருவாக்கினால் அவர் மீது சர்வதேச ரீதியான அழுத்தம் பிரயோகிக்கப்படும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

அத்துடன் சமாதானத்தின் மீதான நம்பகத்தன்மையைப் பொறுத்தே கொடை வழங்கும் நாடுகள் உதவி இலங்கைககு கிடைக்கும்.

# தமிழ்க்கட்சிகள் ஓரணியாக போட்டியிட ஆறுமுகம் மறுப்பு



சிறுபான்மை தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஒரே அணியாக நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் யோசனைக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமான் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து பலத்தை அதிகரிக்க வேண்டும். இந்த வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து மலையக தமிழ்க் கட்சிகளும் தேர்தலில் குதிக்க வேண்டும் என சந்திரசேகரன் கோரிக்கை விடுத்திருந்தார்.

ஆனால் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இந்த கோரிக்கையை நிராகரித்துள்ளதுடன் சிங்கள பெரும்பான்மை கட்சிகளுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட்டதால் தமது உரிமையை பெற முடியும் என குறிப்பிட்டுள்ளார்.

# சோமவம்ச கொலைக் கிரிமினல்

## கைது செய்ய அமைச்சர்கள் கோரிக்கை



ஜே.வி.பி.யின் தலைவர் சோமவம்ச கைதுசெய்யப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட வேண்டும் என அரச தரப்பிலிருந்து கோரிக்கைகள் எழுந்துள்ளன. அரசாங்க அமைச்சர் பலர் சோமவம்ச கைது செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதிக்குப் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவின் கணவரான விஜயகுமாரணதுங்கா கொலை செய்யப்பட்ட அன்றைய தினமே ஜே.வி.பி.கட்சியின் தலைவர் சோம்வம்ச நாட்டை விட்டு தப்பி ஓடினார். தற்போது ஜே.வி.பி.யும் சுதந்திரக் கட்சியும் செய்து கொண்ட உடன்படிக்கையை அடுத்து சோமவம்ச நாடுதிரும்பினார். சோமவம்ச கைது செய்யப்பட வேண்டும். அல்லது சட்ட ரீதியற்ற வகையில் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெறச் சென்றதாகக் கூறி சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள இளைஞர்க ள் விடுவிக்கப்பட வேண்டும் என அமைச்சர் மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

படைத்துறை, உள்துறை அமைச்சுப் பொறுப்புக்கள், மற்றும் குடிவரவு, குடிஅகல்வு திணைக்களத்தை ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ளமை போன்ற காரணங்களினால் கொலைக் குற்றவாழியான சோமவம்சவை சட்டத்தின் முன் நிறுத்த முடியாதுள்ளதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

## போடியார் பொறிவெடி

புலிகளுடன் ரணில் இரகசியமாக ஒப்பந்தம் செய்தமை போன்று நான் எவருடனும் இரகசியமாக எதையும் செய்யமாட்டேன்.-

-ஜனாதிபதி சந்திரிகா-



பதவிப்பிரமாணத்த படுக்க அறயில வச்சு எடுத்தது அது ரகசியம் இல்லப் போல.....

# "தமிழர்கள் கள்ளத் தோணிகள். அவர்கள் அனைவரையும் இந்தியாவுக்கு கலைக்க வேண்டும்"

கடந்தவாரக் கட்டுரையின் தொடர்ச்சி.....

தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் அகிம்சைவழியிலிருந்து ஆயுதப் போராட்டமாக மாறியபோது தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களுக்கு அச்சம் ஏற்பட்டது. ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த இளைஞர்களிடம் தமிழர் தலைமை சென்றுவிடுமோ என்று அமிர்தலிங்கம் போன்றவர்கள் அஞ்சினர்.

சென்றார். அவர் அங்கு சென்ற சில தினங்களில் ஒரே இரவில் 7 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள். சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட இளைஞர்கள் அங்குவைத்து சித்திரவதைக் குள்ளாக்கப்பட்டனர். தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டுசெல்லப்பட்ட விடயம் எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கம், பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரன் ஆகியோரின் கவனத்திற்கு உடனடியாகக் கொண்டுவரப்பட்டது. விடியட்டும் பார்ப்போம் என அமிர்தலிங்கம் கூறினார்.

விடிந்தபோது செம்மணியிலும் வேலணையிலும் சடலங்கள் கிடந்தன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பிரிகேடியர் வீரதுங்கா காட்ட ஆரம்பித்தார். யாழ்ப்பாணத்தில் தமிழ் இளைஞர்களுக்கு எதிரான கெடுபிடிகள் தொடர்ந்தன.

14.5.1976அன்று வட்டுக்கோட்டையில்



## அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்ட ஸ்ரீலங்கா படையினர் தமிழரின் அறிவு பொக்கிசத்தை அழித்தனர்

இதனாலேயே பயங்கரவாதத் தடைச்சட்டத் திற்கு அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக்கூட்டணியினர் மறைமுக ஆதரவை வழங்கினர். சாதாரண சட்டத்தின் கீழ் ஒருவரைக் கைது செய்வதாக இருந்தால் நீதிபதியின் உத்தரவைப் பெற்றிருக்கவேண்டும். அல்லது கைது செய்து 24மணி நேரத்தில் நீதிபதி முன் நிறுத்த வேண்டும். 24மணிநேரத்திற்கு மேல் பொலிஸ் நிலையத்தில் வைத்திருக்க முடியாது.

ஆனால் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 9ம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப்பெற்று 18மாதங்கள் வரை ஒருவரை பொலிஸாரின் தடுப்புக்காவலில் வைத்திருப்பதற்கு இடமுண்டு. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் 6ம் பிரிவின் கீழ் சந்தேகம் கொள்ளும் எவரையும் பொலிஸார் கைது செய்யலாம். இராணுவத்திற்குப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யும் அதிகாரம் இல்லை.

**~ இரா.துரைரத்தினம் ~**

ஆனால் அவசரகால சட்டத்தின் கீழ் இராணுவத்திற்கு கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் கீழ் மிக விந்தையான ஒருவிடயமும் இருந்தது. ஒருவர் எதிர்காலத்தில் குற்றம் செய்வார் என படையினர் சந்தேகித்தால் அவரையும் கைது செய்து தடுத்து வைத்து வழக்குத் தொடரலாம். குற்றம் ஒன்று புரியப்போகிறவர் ஒருவரைக் கண்டிருந்தால் அவர் பற்றிய தகவலைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கத் தவறும் ஒருவருக்கு 7 ஆண்டுகளுக்கு கூடாத சிறைத்தண்டனை வழங்கப்படும் எனப் பயங்கரவாதத் தடைச்சட்டம் கூறுகிறது.

தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகளைப் பிரயோகித்து வந்த படையினருக்கு 1979.7.19அன்று பயங்கரவாதத் தடைச்சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் அதிகூடிய அதிகாரங்கள் அவர்கள் கைகளுக்கு வழங்கப்பட்டன. ஆறுமாதத்தில் ஆயுதக்குழுக்களைப் பூண்டோடு அழிப்பேன் என மார்தட்டிய ஜே.ஆர். 11.11.1979அன்று வடபகுதி இராணுவத்தளபதியாக அவரது மைத்துனர் பிரிகேடியர் வீரதுங்காவை நியமித்து யாழ்ப்பாணத்திற்கு அனுப்பிவைத்தார். ஆறு மாதத்திற்குள் ஆயுதக் குழுக்களின் கதையை முடிக்கவேண்டும் என்ற நிபந்தனையுடன் பிரிகேடியர் வீரதுங்கா யாழ்ப்பாணம்



தமிழீழத்திற்கான தீர்மானத்தை எடுத்த தமிழர் விடுதலைக்கூட்டணியினர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுடன் நடத்திய வட்டமேசை மாநாட்டின் மூலம் அதிகாரம் எதுவும் அற்ற மாவட்டசபையை ஏற்றுக்கொண்டனர்.

மாவட்டசபைக்கான தேர்தல் திகதியும் அறிவிக்கப்பட்டது. தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஐக்கிய தேசியக்கட்சியுமே வடக்குக் கிழக்கில் உள்ள மாவட்ட சபைகளுக்கு போட்டியிட்டன. யாழ்.மாவட்ட சபையில் ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசார பணிகளுக்காக காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசநாயக்காவும், கைத்தொழில் விஞ்ஞானதுறை அமைச்சர் சிறில் மைத்தியூவும் யாழ்ப்பாணம் வந்து கிங்ஸ் விடுதியில் தங்கியிருந்தனர்.

அக்காலத்தில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் மிகமோசமான இனவாதம் பேசுபவராக சிறில் மைத்தியு விளங்கினார். தமிழர்கள் கள்ளத்தோணிகள். அவர்கள் அனைவரையும் இந்தியாவுக்குக் கலைக்க வேண்டும் என பாராளுமன்றத்தில் பேசிய சிறில் மைத்தியு எதிர்க்கட்சி தலைவர் அமிர்தலிங்கம் மீதான நம்பிக்கை இல்லாப்பிரேரணையில் அமிர்தலிங்கத்தைக் கழு மரத்தில் ஏற்றிக்கொல்ல வேண்டும் எனப் பேசினார். இனவாதத்தைக் கக்குவதற்கும் தமிழர்களை கொச்சைப்படுத்திக் கேவலப்படுத்தி பேசுவதற்கென்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவால் உருவாக்கப்பட்டவர்தான் சிறில் மைத்தியு. சிறில் மைத்தியுவும் காமினி திசநாயக்காவும் யாழ்ப்பாணத்தில் எப்படி மோசடி வாக்குகளைப்பெற்று மாவட்டசபையைக் கைப்பற்றலாம் எனத் திட்டமிட்டுக்கொண்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தின் கல்வி பொருளாதாரங்களை அழிக்கவில்லை என்றால் தமிழரை அடக்கமுடியாது என சிறில்மைத்தியூவும் காமினி திசநாயக்காவும் எண்ணினர். அதற்கான திட்டங்களையும் அவர்கள் தீட்டிக்கொண்டிருந்தனர். 1981 மே 31ம் திகதி யாழ். நாச்சிமார்கோவிலடியில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச்சபை பிரசாரக்கூட்டத்தில் நான்கு பொலிஸார் புளொட் இயக்க உறுப்பினர்களால் சுட்டுக்கொல்லப்பட்டனர். சம்பவத்

## பயங்கரவாதத் தடைச்சட்டம் தமிழினத்தின் யமதூதர்கள்


தைக் கேள்விப்பட்டதும் பிரிகேடியர் வீரதுங்கா, காமினி திசநாயக்கா, சிறில் மைத்தியு ஆகியோர் கிங்ஸ் விடுதியில் சந்தித்தனர். சிறிது நேரத்தில் இராணுவத்திற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தென்கிழக்காசியா விலேயே அதிக நூல்களையும் அரிய நூல்களையும் கொண்டு அதிசிறந்த அறிவுக்களஞ்சியமாகத் திகழ்ந்த யாழ். நூலகத்திற்கும், யாழ்.மக்களுக்குச் செய்திகளை வழங்கிக்கொண்டிருந்த ஈழநாடு பத்திரிகை காரியாலயம், யாழ். கூட்டுறவு விற்பனை நிலையம், யாழ். பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு ஆகியவற்றிற்கு இராணுவத்தினர் தீயிட்டனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் படையின ருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தினால் மிகமோசமான அழிவுகளை தமிழ் சமூகம் சந்தித்தது. 1981 ஜூன் முதலாம் திகதி அதிகாலையில் யாழ் நூலகம் எரிந்து சாம்பலான செய்தி கேட்டு தமிழ் உலகமே கண்ணீர்விட்டது. எத்தனை கோடி ரூபா கொடுத்தாலும் பெற முடியாத புத்தகங்கள், ஏடுகள், அத்தனையும் சாம்பலாகின.

தமிழரின் அறிவுப் பொக்கிசத்தை அழித்து விட்டோம். அவர்கள் இனி தலை நிமிரமுடியாது என சிங்கள பேரினவாதிகள் குதூகலித்தனர். மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தலில் பலமோசடிகளை ஐக்கிய தேசியக்கட்சி செய்த போதிலும் தமிழ் மக்கள் அவர்களுக்குச் சரியான பதிலடி கொடுத்தனர். மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலையடுத்து வடக்குக் கிழக்கில் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்தன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் இளைஞர்கள் பலர் கைது செய்யப்பட்டனர்.

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை உட்பட தமிழ் இளைஞர்கள் மீது பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்

### பயங்கரவாத தடைச்சட்டம் 2



கீழ் வழக்குகள் தொடரப்பட்டன. குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோருக்கு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மரணதண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் குற்றஒப்புதல் வாக்குமூலத்தைப் பிரதான தடயப்பொருட்களாகச் சமர்ப்பித்து அவர்கள் மீது வழக்குகள் சோடிக்கப்பட்டன. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் முதலாவது மரணதண்டனை தீர்ப்பும் அதுவாகத்தான் இருந்தது. மரணதண்டனை தீர்ப்பைப் பெற்ற குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை ஆகியோர் உட்பட 23பேர் 23.7.1983அன்று வெலிக்கடைச்சிறைச்சாலையில் வைத்து சிங்களக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்டனர்.

ஆறு மாதத்தில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் மூலம் ஆயுதக்குழுக்களை அடக்குவேன் என யாழ்ப்பாணம் சென்ற பிரிகேடியர் வீரதுங்கா ஆயிரக்கணக்கான அப்பாவி இளைஞர்களைக் கைது செய்து சித்திரவதை செய்யவும் படுகொலை செய்யவும் சிறைக்கு அனுப்பவும் தான் முடிந்தது. விடுதலைப்போராட்ட இயக்கங்களின் வளர்ச்சியை வீரதுங்காவால் அழிக்க முடியவில்லை.

தடைச்சட்டம் தொடரும்.....

சிங்கள ஆட்சித் தலைமைகளின் அதிகாரப் போட்டி பூசல்கள் பேரின வாதக் கட்சிகளின் சமாதானத்திற்கு எதிரான கோசம். என்பன மீண்டும் சிங்கள

நம்பிக்கையை சர்வதேச சமூகத்தின் மத்தியில் எற்படுத்தி உள்ளது.

ராஜதந்திர் ரீதியாக இலங்கைக்கு கொடைவழங்கும் நாடுகள் சிறிலங்கா தலைமைகளை அணுகி ஜனாதிபதியும் பிரதமரும்

புலிகளுடனான சமாதானப் பேச்சுக்கள் தொடங்கும் பட்சத்தில் இலங்கைக்கு வளங்குவதாக தீர்மானிக்கப்பட்ட உதவித் தொகை கிடைக்கும் என்பதையும் அகாசி வளியுறுத்திக் கூறியுள்ளார்.

இதே வேளை எதிர்வரும் உயர் மட்டத்திடம் சமர்ப்பித்துள்ளதாக அறியப்படுகிறது. அமெரிக்காவில் எதிர்வரும் 17ம் திகதி இலங்கைக்கான கொடைவழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக

# தப்பும் வழி என்ன? சந்திரிகாமெடம்

ஆட்சியாளர்களால் போர் திணிக்கப்படுமா என்ற பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கும். அதேவேளை சமாதானப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதில் விடுதலைப்புலிகள் பற்றுறுதியுடன் இருப்பது சர்வதேச சமூகத்தில் விடுதலைப்புலிகளுக்கு என்றுமில்லாத நற்பெயரை ஏற்படுத்தியுள்ளது.



மாறாக பண்டார நாயக்கா குடும்பத்திற்கு மாத்திரமல்ல. சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களின் உரிமைகளை வழங்காது இழுத்தடித்து வருகின்றனர் என்பதை சர்வதேச சமூகம் நன்கு உணர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இருபது வருடகால போரை முடிவுக்குக் கொண்டுவந்து நோர்வேயின் அனுசரணையுடன் கடைப்பிடிக்கப்பட்ட வந்த புரிந்துணர்வு உடன்படிக்கையை



இனவாதத் தீயில்எரித்து சம்பலாக்க ஜனாதிபதி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜே.வி.பி கூட்டு உடன்படிக்கை வழிவகுத்து விடுமோ என்ற அச்சம் சமாதானத்தை விரும்பும் மக்களிடம் பீதியை ஏற்படுத்துகின்ற போதும் விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து போர் திணிக்கப்படும் வரை வலிந்து போரைத் தொடரமாட்டோம் என்ற உறுதிமொழி திடமான ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்திய போதும் சிங்களத் தலைமைகள் சிறுபான்மை இனமான தமிழ் மக்களின் உரிமைகளை வளங்க மறுப்புத் தெரிவித்து வருவதை நன்கு உணர்ந்துள்ளனர்.

கடந்தவாரம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான ஜப்பானிய விசேட சமாதானத் தூதுவர் பிரதமரையும் ஜனாதிபதியையும் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளரையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

வன்னி சென்ற அகாசி விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்த போது சமாதான பேச்சுக்கள் ஆரம்பிக்க வேண்டும் என்பதில் புலிகள் தரப்பு கொண்டுள்ள அக்கறையைத் தெளிவு படுத்தியிருந்தார். ஆனால் சிங்கள தலைமைகளுடன் நடத்திய பேச்சுக்களில் பிரதமர் ஜனாதிபதி பறித்தெடுத்த அமைச்சுப் பொறுப்புக்களை மீள ஒப்படைக்காத பட்சத்தில் சமாதானப் பேச்சுக்களை முன்னேடுத்துச் செல்ல முடியாது என்பதை மீள வலியுறுத்தினார் இதே வேளை அகாசி ஜனாதிபதியைச் சந்தித்த போது சமாதான பேச்சுக்கள் தடைப்பட்டிருப்பதால் கொடைவழங்கும் நாடுகளின் நிதி-உதவி நின்று போகும் அபாயத்தைத் தெளிவுபடுத்தினார்.

''அரசாங்கம் இருக்கிறது. பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் விடுதலைப்புலிகளின் தலைவரும் ஒப்பந்தத்தில் கைச்சாதிட்டனர். இப்போதும் உடன்படிக்கை

**வேணிதன்**

அமுலில் உள்ளது. நான் உடன்படிக்கைக்கு தடையாக நிற்கப்போவதில்லை" என்பதை ஜனாதிபதி அகாசியிடம் தெளிவுபடுத்தினார்.

இவ்வாறு ஜனாதிபதியும் பிரதமரும் ஆளுக்காள் முரண்பட்ட கருத்தைத் தெரிவித்துக் கொண்டிருந்தால் மட்டும் போதாது சமாதான வண்டியை ஓட்டுவது யார் என்ற கேள்வியை எழுப்பிய அகாசி தலைமையில் கொடைவழங்கும் நாடுகள் பிரதிநிதிகள் கூட்டம் கொழும்பில் நடைபெற்றது.

சிறிலங்கா அரசியலின் இன்றைய நிலவரத்தை அலசி ஆராய்ந்த கொடைவழங்கும் நாடுகள் பிரதிநிதிகள் கவலை வெளியிட்டுள்ளனர். இலங்கை அரசியல் நெருக்கடி நிலமை ஒரு முடிவுக்கு வந்து விடுதலைப் பெப்ரவரி 17ம் திகதி அமெரிக்காவில் இலங்கைக்கு கொடைவழங்கும் நாடுகளின் பிரதி நிதிகள் கூட்டம் இடம் பெறவுள்ளது.

இக்கூட்டம் மிகமுக்கியத்துவம் வாய்ந்தது. சிறிலங்கா அரசு அல்லது ஜனாதிபதி இக்கூட்டத்திற்கு முன்னதாக சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான இலகு படுத்தலில் ஈடுபடுவார்களா? எனினும் கொடைவழங்கும் நாடுகளின் உதவி அடியோடு கைநழுவிப் போகும் ஆபத்தை எதிர் நோக்கியுள்ளதாக அவதானிகள் கருதுகின்றனர்.

இவை ஒரு புறமிருக்க சந்திரிகா ரணில் இழுபறிக்கு முற்றுப்புள்ளிவைக்கும் வகையில் அமெரிக்க உயர்மட்ட இராஜங்க குழு ஒன்று விரைவில் சிறிலங்காவுக்கு வருகை தரவுள்ளனர்.

ஏற்கனவே அமெரிக்க பிரதி ராஜங்க அமைச்சர் ஆர்மிரேஜ். ராஜாங்க அமைச்சர் கொலின் பவல் ஆகியோர் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் கடிதங்களை அனுப்பியிருந்தனர்.

அரசியல் இழுபறிக்கு முற்றுபுள்ளி வைத்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுக்களைத் தொடருமாறு அக்கடிதங்களில் வலியுறுத்தப்பட்டிருந்தது. எனினும் எது விதசாதகமான தன்மையை இரு தலைவர்களும் காட்டாத நிலையில் இலங்கை நிலவரம் தொடர்பாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அறிக்கை ஒன்றினை தயாரித்து அமெரிக்க அமெரிக்க உயர்மட்டக் குழு இலங்கை வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியுடன் உடன்படிக்கை செய்துள்ள சுதந்திரக்கட்சியின் தலைவியான ஜனாதிபதி தாம் பொறுப்பேற்ற



மூன்று அமைச்சுக்களை மீள ஐக்கிய தேசிய முன்னணி அரசிடம் கையளிக்க வேண்டும். அதற்கு உடன்படிக்கை செய்துள்ள ஜே.வி.பி. விரும்பமாட்டாது. இன் நிலையில் அரசியல் இழுபறி தொடர்கதையாவதுடன் உலக நாடுகளின் மிகக்கூடுதலான கண்டனத்தையும் எதிர்ப்பையும் ஜனாதிபதி சந்திக்க வேண்டி வரும் என்பது உறுதி. இந்நிலையில் ஜனாதிபதி எடுக்கப்போகும் நடவடிக்கை என்ன? மறுபுறம் சார்வதேச ரீதியாக விடுதலைப் புலிகள் நற்பெயரைத் தேடிக் கொள்வர் என்பது உறுதி.

## சொன்னாலும் குற்றம்



மீன்பாடும் தேனாட்டு மாவட்டத்தில் போன பெரிய எலக்சனில் ''சுரண்டல் டிக்கட்டில்'' அதிஸ்டம் கிடைத்ததைப் போன்று தெரிவான ஒருவர், பெயர்-தங்தம், செயல்- பங்கம், தொழில் நாடாளுமன்ற நாற்காலிக்குப் பால் கொடுத்தல், பொழுது போக்கு-ஆலயங்களில் மணி ஆட்டுதல், பிடித்தமான உணவு-வெளிநாட்டு உள்நாட்டு தண்ணீர். இவரை மாவட்டத்தில் ஆறு மாதமாக காணவில்லை.

பகலில் சாமியாகவும், இரவில் ஆச்சாமியாகவும், நடிக்கும் இந்த மனிசனை இறுதியாக வைத்தியசாலை தீவிர சிகிச்சைப் பிரிவில் சில ஆதரவாளர்கள் பார்த்துள்ளனர்.

''மனைவி, மக்கள் என்று அல்லுத் தொல்லுகள் எனக்கில்லை. அல்லும் பகலும் அலுக்காமல் பணி புரிவேன்'' எனத் தேர்தல் மேடைகளில் ஊது குழலால் பிரசாரம் செய்து வெற்றியீட்டிய வேலவன் இப்போது பெரும்குடி மகனாக தேனாட்டை மறந்து வீண் நாட்டில் சீவியம் நடத்துகின்றாராம்.

இவரை தேர்தலில் நிறுத்திய கட்சி ஆக்கள் ''உன்னைச் சொல்லிக் குற்றமில்லை. என்னைச் சொல்லிக் குற்றமில்லை தேசம் செய்த கோலமடி வேசம் செய்த குற்றமடி'' என்று பாடிக்கொண்டே இருக்கிறார்கள்.

அடுத்த தேர்தல் வந்தால் இந்த மாதிரியானவர்கள் எங்கிருந் தாலும் விண்ணப்பிக்கும் படி வாக்காளப் பெருமக்கள் வாய்விட்டுச் சொல்கிறார்கள். இது தேசியம் பேசுவோரின் சிந்தனைக்கு..........

# தமிழ் மொழியும் சிங்களமும்

எலுவின் பரிணாமவளர்ச்சியின் முடிவு தமிழ் மொழியாகும். ஏனெனில் அன்று "எலு"மொழியைப் பேசிய திராவிடர்களில் பெரும்பான்மையோர் இன்று பேசும் மொழி தமிழாகும்.

எலு மொழிக் காலத்தில் ஏற்பட்ட கடற்கோளின் பாதிப்பில் தப்பிய எலு மொழிபேசிய மக்கள் கூட்டம் ஒன்று தென்னிந்தியா சென்று கோதாவரிக்கும், யமுனை நதிக்கும் இடைப்பட்ட சமவெளியில் குடியேறி ஈழவர் என்ற பெயரோடு வாழ்ந்தார்கள். அப்பிரதேசம் கதம்ப மரங்கள் அடர்த்தியாக வளர்ந்த காட்டுப்பிரதேசம். அக்காடுகளில் சிங்கம் கூடுதலாக வாழ்ந்தது. இதனால் இந்த "எலு"மொழிபேசிய மக்களின் குலவிருதாக சிங்கம் இடம் பெற்றது. அங்கே சென்ற ஆரம்பக்கட்டத்தில் இவர்கட்குத் தகுந்த தொழில் வாய்ப்புக் கிடைக்காததால் ஜீவனத்தைக் கொண்டு நடத்தது தெரியமுடிந்தது. அதாவது இலங்கையில் எப்பகுதியிலும் வாழும் தமிழர்களும் பேசும் மொழி தமிழாக இருந்ததாலும், வடபகுதி, கிழக்குப்பகுதி மலைநாட்டுப்பகுதி, வாழ்தமிழர்கள் பேசும் தமிழ் மொழியில் சிற்சில வேறுபாடுகள் தென்படுகிறது போலவே வந்தவர்கள் பேசிய "எலு"மொழிக்கும் இருந்தவர்கள் பேசிய "எலு"மொழிக்கும் ஏற்பட்ட வேறுபாட்டை அடையாளப்படுத்த வந்தவர்களின் குலவிருதான சிங்கத்தை மொழியோடு சேர்த்து "சிங்களஎலு"என்றார்கள். அந்த மொழியைப் பேசியவர்களைச் சிங்களஎலுவினர் என்றார்கள். அதுவே சிங்களம் என்ற மொழியாகவும், சிங்களவர் என்ற புதிய இனமாகவும் உருமாறியது என்பது ஏற்கக்கூடிய கருத்தாகும்.

இக்கருத்தை சிங்கள "புத்தசமயம் ஏற்படுத்திய முதல்மையான செல்வாக்கினால் ஈழம் சம்மந்தமான புலமை சார்ந்த ஆய்வு நீண்ட காலமாகப் பௌத்த இலக்கியமும் மொழியும் பற்றிய ஆய்வாகவும் அவற்றுக்கான பொருள் தேடலிலுமே கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதனால் சாசன தொல்லியல் சான்றுகள் போன்ற இரத சான்றுகள் இலக்கியக் கண்ணோட்டத்தில் அணுகப்பட்டன. அல்லது முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டன. இத்தகைய அணுகு முறையின் பயனாகவே வரலாற்று ஆசிரியர்கள் ஆதி வரலாற்றைப் பெரும்பாலும் முழுமையாகத் தீபவம்சம் -மகாவம்சம் போன்ற பாளி, இலக்கியங்களின் ஊடாகப்படைத்துள்ளனர். இவ்விலக்கியங்கள் எத்தகைய, பயனுடையதாக இருப்பினும் மிகப் பழைய வரலாற்றை அணுகும் போது ஐதீகப் பாங்குடைய வாகவே இருக்கின்றன என்கிறார். மேலே தந்த அறிஞர் பெருமக்களின் ஆய்வுகளையும் கருத்துக்களையும் மையமாக வைத்து ஆய்வு செய்தால் சிங்கள மொழி தமிழ் மொழியில் ஒரு கிளைமொழி என்பது உறுதியாகும் இதை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த மானிடயியலாளரான திரு.கேர்க "விஜயன் புலம் பெயர்ந்து வந்த இடங்கள் என நம்பப்படும் வடமேற்கு வடகிழக்கு இந்தியாவில் வாழும் மக்களின் இரத்தத்தையும் தற்காலம் இலங்கையில் வாழும் சிங்களவரின் இரத்தத்தையும் ஒப்பிட்டு ஆராய்ந்த போது வட இந்திய வாசிகளின் இரத்தத்திற்கும் சிங்களவரின் இரதத்திற்கும் ஒற்றுமை ஏற்படாது வேறுபட்டது. ஆனால் வங்காளிகளினதும் தென்னிந்தியத் தமிழர்களின் இரத்தத்தோடு ஒத்திருப்பதாக உறுதி கூறியுள்ளார். வங்காளிகள் ஆரிய கலாசாரத்திற்கு அப்பால்பட்ட திராவிடர் மானிட வியலாளரான கேர்க்கின் கூற்றை கலாநிதி விஜயசுந்திரா ஏற்றுள்ளார்.

இதுவரை நடந்து முடிந்த மரபணு ஆய்வுகளின் படி சிங்கள இனம் ஆரியஇனமல்ல திராவிட இனம் தான் எனச் சிங்களப் பௌத்த அறிஞரான எட்டப்ளியூ குணவர்த்தன உறுதியாகக் கூறியுள்ளார்.

கலாநிதி டபிள்யூ -எஸ் குணத்திலகா அவர்கள் "TAMIL IN FLUAECE ON THE SCULPTURES OF SINHALA LANGUAGE"எனக் கூறியுள்ளார். "சிங்கள மொழியமைப்பில் தமிழ் மொழியின் செல்வாக்கும் பெருமளவில் உண்டு"என Proceding of the I.A.T.R conferance in 1974 P.P 151-152.

"சிங்கள மொழி திராவிட மொழியினத்தைச் சேர்ந்தது" என்கிறார் அறிஞர் ராஸ்க் "சிங்கள மொழியின் மூலமே திராவிட மொழிதான்" என்கிறார் அறிஞர் எப்மூலர் "'சிங்கள மொழியின் வளர்சியில் தமிழ் கூடுதலான பங்கை வழங்கியுள்ளது" என்கிறார் ஜேர்மனியைச் சேர்ந்த அறிஞர் ஹஸ்

சிங்கள மொழியில் திராவிட மொழி எவ்வளவு செல்வாக்கைச் செலுத்தியிருந்தாலும் சிங்கள மொழி ஆரிய மொழி என்கிறார் கலாநிதி நந்த தேவ விஜயசேகர

மாக்ஸ்மில்லர், கைகர், ரீன் டேவிட் பி.ஈ.ஆர் பர்னான், எல்.எல் பாஷம் போன்றோர் சிங்கள மொழி ஆரிய மொழி என்கிறார்கள்.

கதம்பமரங்களில் ஏறிக் கள்ளிறக்கி விற்று அதன் மூலம் கிடைப்பதைக் கொண்டு காலத்தைக் கடத்தி வந்தனர். இது அவர்களின் குலத் தொழிலல்ல. குமுறும் கும்பியைக் குளிரவைக்க ஈழம் என்றால்கள் என்றும், ஈழவர் என்றால் கள்ளிறக்கும் தொழிலாளர் என்றும் காரணப்பெயர் அங்கே வழங்கும் வழக்கமாகிவிட்டது. ஆனால் ஈழமென்ற வார்த்தை பொன் -ஒளி என்ற பொருள்களையும் தருகிறது. எனவே ஈழம் என்றால் பொன்னாட்டார் -ஒளிநாட்டார் என்பது உறுதி. ஈழம் என்பது தமிழ் வார்த்தை என பரோ என்ற மொழி அறிஞர் கூறியுள்ளார். இந்த அடிப்படையை வைத்துத் தான் சமீபத்தில் அறிஞர் அந்தோணிசில் "எலு"என்றொரு மொழி தவறான மொழிப் பிரயோகம் "ஈழு"என்பதே சரியானது எனக்கூறியுள்ளார்.இதே கருத்தை நல்ல ஆய்வு அறிஞரான சுவாமி ஞானப் பிரகாசத்தாரும் ஏற்கனவே கூறியுள்ளார். எல்லம்-ஈழம் என்றும் இலங்கையின் ஆரம்பப் பெயர்கள் இரண்டும் ஒரே பொருளைத் தரும் சொற்கள். ஆனால் இச் சொற்களில் ஆரம்பத்தில் ஏற்பட்ட பெயர் எல்லமாக இருந்ததாலும் இக்காலத்தில் இம் மொழி ஆரம்பமானதாகையால் "எலு" ஈழத்தை முந்திய . சொல் என்பது புரிகிறது. காரணம் ஆரம்பகால வரலாற்று ஆசிரியர்கள் அனைவரும் திராவிடரின் அதுவும் இலங்கையின் ஆரம்ப மொழி "எலு"என்றே கூறியுள்ளார்கள். எனவே "எலு" "ஈழு" என்பன இலங்கையின் ஆரம்ப மொழிக்கு வழங்கப்பட்ட பெயர் கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்.

### சிங்கள மொழியின் பிறப்பு

முன்னொரு காலத்தில் குமரியில் ஏற்பட்ட கடற் கோள்களால் பாதிக்கப்பட்டு நாடு கடந்த கோதாவரிக்கும் யமுனைக்கும் இடையில் உள்ள சமவெளியில் குடியேறி வாழ்ந்த ஈழத்திராவிடர் அப்பகுதியில் போதிய தொழில் வாய்ப்பின்மையால் மீண்டும் தங்கள் தாயகம் திரும்பினார்கள். வந்தவர்கள் கழனி கங்கைக் கரையோரம் குடியேறினார்கள். இவர்கள் குடியமர்ந்த காரணத்தால் அந்த நதிக்கு கதம்ப நதி எனப் பெயர் சூட்டப்பட்டது. இவர்கள் பேசிய மொழி "எலு" மொழிக்கும், இருந்தவர்கள் பேசிய "எலு" அப்பகுதியில் அன்று வாழ்ந்த மக்கள் பேசிய மொழியும் "எலு" தான். ஆனால் வந்தவர் பேசிய "எலு" மொழிக்குமிடையில் சிற்சில வேறுபாடுகள், மாறுபாடுகள் தென்பட்

அறிஞர் B.A.L.N குணவர்த்தன தானெழுதிய "THE PEOPLE OF LION "எனும் நூலில் "சிங்களத்தைச் சேர்ந்த மக்கள் சிங்களம் என்றசொல் தென்னிந் தியாவில் வாழ்ந்த ஒரு குழுவையே குறித்தது. அங்கே வசித்த எல்லோரையும் குறிக்கவில்லை "எனக்கூறியுள்ளார். இக்கூற்றுக்கும், மேலே நான் தந்த ஜமுனா நதிக்கும், கோதாவரிக்கும் இடையிலுள்ள சமவெளியில் சிங்கக்குல விருதுடன் வாழ்ந்த எலு மொழி பேசியோரான ஈழவரையே குறித்துள்ளார். இவர்களின் வரவு இன்று இனவெறிக்கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்புக்கு வெளிநாடுகளுக்குச் சென்று இன்றையச் சமாதானச் சூழ்நிலையில் நாடு திரும்புவது போலாகும். இந்த ஈழவரின் மீள் குடியேற்றம் தான் மகாநாமனின் மகாவம்ச விஜயன் கதையின் மூலக்கருவூலமாகும். வந்தவர்களின் குலவிருதான சிங்கத்தைத் தான் மகாநாமன் தன் கதையில் சிங்கத்தின் வாரிசுகள் எனக் கொண்டார். இப்போது பௌத்த புத்தி ஜீவிகள் அக்கதை கட்டுக்கதை என்கின்றார்கள். "தொல்லியல் நோக்கில் மகாவம்சம்

**பூ.ம.செல்லத்துரை**

கூறும் விஜயன் கதையை ஆராய்ந்த சேனாரத்தின" வட நாட்டிலிருந்து சிங்கள இனம் இடம் பெயர்ந்ததற்கு எவ்வித சான்றுமில்லை என்றார். இக்கருத்தை கேம்பிரிஜ் பல்கலைக்கழக பேராசிரியரான கொன்னிங்காமின் "சிங்களமயமாக்கும் சித்தாந்தத்தின் நோக்கில் தென்னிந்திய அரசர்கள் ஈழத்தின் கலாசாரத்தை திராவிட மயமாக்கும் முயற்சிகளைத் தட்டிக் கழித்து ஈழத்தின் தனித்தன்மையை உருவாக்க பௌத்த சங்கத்தினர் வட இந்திய பௌத்த கலாசாரத்தை நாடி வலியுறுத்தி இருந்தாலும் அவை மரவணு ஆய்வாளர்களின் முடிவின் படி பார்க்கையில் சிங்கள மக்கள் வட இந்தியாவில் வாழும் மக்களையும் பார்க்கத் தென்னிந்திய மக்களுடன் தான் மரவணுரீதியில் மிக நெருக்கமாகவுள்ளார். எனக் குறித்துள்ளார். பிரித்தானியரான ஜி.சி.மெண்டிஸ் விஞ்சன்"சிகள, சிம்கள என்று அழைக்கப்பட்ட நாட்டுப் பெயர்களும் பௌத்த ஜாதகங்களும் புனைந்து வழங்கப் பட்ட ஐதிகக் கதைகளாகும் எனக்கூறியுள்ளார். இக்கூற்றை மானிடவியாலாளரான எஸ்.பி.எல்.சேனாரத்தின இவற்றை நிரூபிக்க சான்றுகளில்லை என்கின்றார். இவர்கள் கூற்றனைத்தையும் 1970ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இலங்கை வந்த தொல்பொருள் ஆய்வாளரான விமல பேக்லே"

தொடரும்............

# இலங்கையில் எலிகள் பரப்பும் அபாயக் காய்ச்சல்

இலங்கையில் பல விதமான காய்ச்சல் பரவிக் கொண்டிருக்கிறது. அவற்றில் ஒன்றான எலியினால் பரப்பப்படும் எலிக் காய்ச்சல் தற்போது ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. எலியினால் பரப்பப்படும் இக் காய்ச்சலானது ரெட் பீவர் (Rat fever) ஒரு வகையான பற்றீரியாவினால் (bacteria) மனிதர்கட்கு எலியூடாக தொற்றை ஏற்படுத்துகின்றது. பற்றீரியா கிருமியை (Bacteria) லெப்டோபிரோசிஸ் (leptopirosis bacteria) என அழைக்கப்படுகிறது.

இக் கிருமியானது எலி, காட்டு மிருகங்கள், மற்றும் வீடுகளில் நாம் செல்லப்பிராணிகளாக வளர்க்கும் சில வளர்ப்பு மிருகங்கள்



ஊடாக அதாவது அவற்றின் மலம், சலம், என்பவற்றினால் மனிதர்களுக்கு பாரதூரமான ஆபத்தைத் தோற்றுவிக்கவல்லது என மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சந்தேகிக்கப்பட்ட 2000ற்கு மேற்பட்ட நேயாளிகள் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். இவர்களில் சிலர் கடுமையான தாக்கத்திற்குட்படுத்தப்பட்டு இறந்துள்ளனர் என்பது மிகவும் வேதனையான விடையமாகும். இக் காய்ச்சலானது ரெட் பீவர் (Rat fever) 1953 ஆம் ஆண்டு முதன்முதலாக இலங்கையில் மருத்துவ ஆய்வு மூலம் கண்டு பிடிக்கப்பட்டது.

ஆனால் இக் காய்ச்சலானது பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாடுகளில் கண்டறியப்பட்டது. இதில் ஒரு முக்கிய விடயம் வேறு

**செல்வக்குமார்**
**மருத்துவப் போராளி**

நாடுகளில் மிருகங்களால் பரப்பப்பட்டாலும் எமது நாட்டில் இது எலியினால் தான் அனேகமாகப் பரப்பப்படுவதை மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. கடந்த 2003ம் ஆண்டு 2152 பேர் எலிக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டார்கள். அதில் அதி கூடிய எண்ணிக்கையானோர் கொழும்பில் பதிவு செய்யப்பட்டனர். இரண்டாவதாக களுத்துறையில் 341பேரும் , மூன்றாவதாக கம்பகாவில் 326பேரும் பதிவு செய்யப்பட்டனர்.

இக் காய்ச்சலைப் பரப்புகின்ற மிருகங்கள் சிலவற்றை நாம் அறிந்திருப்பது முக்கியமானதாகும். அவைகள் எலி, நரிநாய், பன்றி, குதிரை, புழுகுநாய், மாடுகள், நாய், செம்மறியாடு, மான், கழுதை போன்ற மிருகங்களாகும். இவை குளங்களில் அல்லது நீர் தேங்கியிருக்கும் இடங்களில் நீர் அருந்திவிட்டு அல்லது குளித்துவிட்டுச் செல்கின்றது. பின்னர் லெப்டோஸ்பிரசிஸ் (Leptopirosis) குளங்களில் பரப்பப்படுகின்றது. இதில் மனிதர்கள் குளிக்கும் போது அல்லது நீர் அருந்தும் போது அவர்களின் உடலில் உள்ள காயங்களின் ஊடாக பற்றீரியா கிருமி உடம்பினுள் புகுத்தப்படுகின்றது.

கடந்த ஆண்டு 2000ற்கு மேற்பட்ட நோயாளர்கள் இந் நோயினால் பீடிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டாலும் தற்போது இதன் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. இக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களில் அனேகமானோர் ஆண்களே எனவும் ஆய்வு மூலம் கண்டறியப்பட்டது. அதில் 20-60 வயதிற்குட்பட்டவர்களைத்தான் கூடுதலாகத் தாக்குகின்றது.

இந் நோய்த்தாக்கம் கண்டி, கொழும்பு கம்பகா, களுத்துறை, மாத்தறை, குருணாகல், காலி, கேகாலை, இரத்தினபுரி, பொலனறுவை, போன்ற இடங்களிலே மிக வேகமாகப் பரவி வருவதாக மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

மேலும் லெப்டோஸ்பிரோசிஸ் (Leptopir0sis) நோய்க் கிருமி தற்போது திருக்கோவிலில் ஒருவரிடம் கண்டறியப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இது மட்டு/அம்பாறை மாவட்டங்களிலும் காணப்படுகின்றது. என்பது கண்டறியப்பட்டுள்ளது. இக் கிருமி பாரதூரமான விளைவை ஏற்படுத்தினாலும் மனிதர்களில் இருந்து

(தொடர்ச்சி 19ம் பக்கம்)



கந்தர்:- என்ன மச்சான் எலக்சன் வரும் போல கிடக்கு............

கலந்தர்:- சண்டையும் வரும் போல கிடக்கு மச்சான்.....

கந்தர்:- என்ன வந்தாலும் எங்களுக்கு றெடிதான்......

கலந்தர்:- சமாதானப் பேச்சுப் பற்றி ஒரு கதயயும் காணல்ல

கந்தர்:-சமாதானம் இப்ப என்னத்துக்கு. எலக்சன் போஷ்டருக்கு மட்டும் தானே அது தேவ..........

கலந்தர்:- நமக்கு எந்த அரசாங்கம் வந்தாலும் சண்ட இல்லாம இருந்தா சரிதான்........

கந்தர்:- காத்தடிக்கிற பக்கம் சாயிற உங்கட அரசியல் வாதிகள் இருக்கும் மட்டும் உனக்கென்ன.........

# தமிழ் மண்ணை நனைத்த சிங்கள இரத்தம்

## இந்தியாவும் ஈழத்தமிழரும்

### இறந்தவர் உடல்களில் காயங்கள்?

குமரப்பா, புலேந்திரன் உட்பட 12 போராளிகள் மரணமடைந்த செய்தி மக்கள் மத்தியிலும், விடுதலைப் புலிப் போராளிகள் மத்தியிலும் பாரிய அதிர்வுகளை ஏற்படுத்தி யிருந்தது. ஒரு தொகுதி மக்கள் மத்தியில் சோகம், இயலாமை போன்ற உணர்வுகள் ஏற்பட்டிருந்த போதிலும், பெரும்பான்மையான தமிழ் மக்கள் மத்தியில் பயங்கரமான கோப உணர்வு ஏற்பட்டிருந்தது.

தமது போராளிகள் அநியாயமாக இறக்க நேரிட்டது பற்றி தமிழ் மக்கள் மிகுந்த அச்சம் கொண்டார்கள்.

அதேவேளை, சயனைட் உட்கொண்டு தம்மை மாய்த்துக் கொண்டதாகக் கூறப்பட்ட போராளிகள் சிலரது உடல்களில் காயங்கள் காணப்பட்டதாக வெளிவந்திருந்த செய்தியும் தமிழ் மக்களைக் கோபத்தின் உச்சத்திற்குக் கொண்டு சென்றிருந்தது.

குறிப்பாக புலேந்திரனின் உடலின் முதுகுப் புறத்திலும், பின் கழுத்திலும் கத்திக்குத்து காயங்கள் காணப்பட்டிருந்தன. துப்பாக்கி முனையில் பொருத்தப்படும் 'சயனைட்' என்ற கத்தியினால் புலேந்திரன்



குத்தப்பட்டதாக விடுதலைப் புலிப் போராளிகள் மிகுந்த சினத்துடன் தெரிவித்திருந்தார்கள். கைதுசெய்யப்பட்ட போராளிகளை உயிருடன் கொழும்புக்கு அழைத்துச் செல்லமுடியாத தமது இயலாமையை, ஸ்ரீலங்காப் படையினர் அவர்களின் உயிரற்ற உடல்களின் மீது காண்பித்திருந்தார்கள்.

மாவீரர்களின் இறுதி ஊர்வலத்தின் போதே, போராளிகளின் உடல்கள் ஸ்ரீலங்கா இராணுவ வீரர்களின் கத்திக்குத்துக்களுக்கு இலக்கான கதை பொதுமக்கள் மத்தியிலும், போராளிகளிடையேயும் பரவியிருந்தது. மரணச் சடங்குகள் முடிவடைந்ததும் மக்களினதும், சக போரளிகளினதும் சோகம் கோபமாக மாற ஆரம்பித்தது.

அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் வெளியான தினசரிகள் அனைத்துமே, மிக அண்மையில் திருமணமான குமரப்பா, புலேந்திரன் போன்றோரது திருமணப் புகைப்படங்களை முன்பக்கத்தில் வெளியிட்டி ருந்தன. இந்தப் புகைப்படங்களைப் பார்த்த

- நிராஜ் டேவிட் -

தமிழ் மக்களின் மனங்கள் ஏற்கனவே கணன்றுகொண்டிருந்தது. மரணமடைந்தவர் களது உடல்களில் வெட்டுக்காயங்கள் காணப்பட்ட செய்தி வெளியானதைத் தொடர்ந்து மக்கள் தமது கட்டுப்பாட்டை இழந்திருந்தார்கள். அடுத்த சில நாட்கள், வடக்கு-கிழக்கு இரத்தமயமாகக் காட்சிய ளித்தது.

### இரத்தம் தோய்ந்த நாட்கள்

வல்வெட்டித்துறையில், இறந்த 12 போராளி களினதும் மரணச் சடங்கு முடிந்து, மிகுந்த கோபத்துடன் வீடு திரும்பிக் கொண்டிருந்த சிலரது கண்களில் ஒரு சிங்கள இராணுவ வீரன் தென்பட்டான். மதுபானச் சாலை ஒன்றில் மது அருந்துவிட்டு நிறை போதையுடன் வெளிவந்த அந்தச் சிங்களப் படை வீரனைக் கண்டதும், ஏற்கனவே ஸ்ரீலங்காப் படையினர் மீது காழ்ப்புணர்வு கொண்டிருந்த அந்தக் கூட்டத்தினருக்கு மிகுந்த எரிச்சல் ஏற்பட்டது.


'சிங்கள நாய்கள்.. எங்கள் ஊருக்குள்ள வந்து எங்கட பொடியளிலையோ கைவைக் கிறியள்?..' என்று கேட்டபடி ஒரு பெரியவர் அந்த இராணுவ வீரரைத் தாக்க ஆரம்பித்தார். அந்தக் கூட்டத்தில் வந்தவர் களும் பெரியவருடன் சேர்ந்து கொண்டார்கள். சிறிது நேரத்தில் அந்த இராணுவ வீரன் உணச்சிவசப்பட்டிருந்த அந்தக் கூட்டத்தின் கோபத்திற்குப் பலியானான்.

விடுதலைப் புலி உறுப்பினர்களும் ஸ்ரீலங்காப் படையினர் மீது மிகுந்த கோபம் கொண்டிருந்தார்கள். தமது முக்கிய தளபதிகள் உட்பட 12 போராளிகளினதும் மரணங்களின் காரணமாக, அவர்களது உச்சக்கட்ட கோபம் ஸ்ரீலங்காப் படையினர் மீது திரும்பியிருந்தது.

### கொல்லப்பட்ட படையினர்

6ம் திகதி காலை யாழ் பஸ் நிலையத்தின் முன்னால் 8 ஸ்ரீலங்காப் படைவீரர்களின் உடல்கள் போடப்பட்டிருந்தன. அவர்களது உடல்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன. ஏற்கனவே சண்டை யொன்றின் போது புலிகளினால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டி ருந்த 8 ஸ்ரீலங்காப் படையினரின் உடல்களேஅவை. புலிகளின் எல்லை கடந்த கோபம் ஸ்ரீலங்காப் படையினரை நோக்கித் திரும்பியிருந்ததை அது வெளிப்படுத்தியது. அவலத்தைத் தந்தவனுக்கே அதனைத் திருப்பிக்கொடுக்கும் பாணியைப் புலிகள் கடைப்பிடிக்க ஆரம்பித்திருந்த காலம் அது. நியாயமான யுத்த முறைகள் எதனையும் ஸ்ரீலங்காப் படையினர் கடைப்பிடிக்க மறுத்ததுடன், நேர்மையான யுத்த வழிமுறைகள் எதனையும் பின்பற்றும் பக்குவத்தையும் ஸ்ரீலங்காப் படையினர் இழந்து, அக்காலத்தில் செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். அதனால் ஸ்ரீலங்காப் படையினரின் பாணியில் செயற்பட்டால் மட்டுமே புலிகளின் போராட்டத் தின் பாஷையை அவர்களுக்குப் புரியவைக்க முடியும் என்பதைப் புலிகள் உணர்ந்து கொண்டு, அந்த முறையிலேயே பதில் கொடுக்கவும் ஆரம்பித்திருந்த காலம் அது.

அந்தவகையில், 8 ஸ்ரீலங்காப் படை வீரர்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் மூலம் புலிகள் தமது கோபத்தை வெளிப்படுத்தியிரு ந்தார்கள். இது ஸ்ரீலங்காப் படையினருக்கு மிகுந்த அச்சத்தை ஏற்படுத்தியிருந்தது. ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு எதிராக நெல்லியடியில் புலிகள் தமது முதலாவது தற்கொலைக் குண்டுத் தாக்குதலை நடாத்தி



மூன்று மாதங்களே கடந்துவிட்டிருந்தது. புலிகளின் கோபம் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் வடிவத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ள ஸ்ரீலங்காப் படை முகாம்களின் மீது நடைபெற்றுவிடலாம் என்ற அச்சம் ஸ்ரீலங்காப் படைத்துறைத் தலைமையினிடையே ஏற்பட்டிருந்தது. புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதலின் விளைவு எப்படி இருக்கும் என்பதை ஸ்ரீலங்காப் படையினர் அனுபவவாயிலாக நன்றாகவே அறிந்திருந் தார்கள். எனவே தமது முகாம்களைப் புலிகளிடம் இருந்து பாதுகாப்பதற்கு இந்தியப்படையினரிடம் அவர்கள் உதவி கோரினார்கள். ஜே.ஆர். இன் வேண்டுகோளின்படி, ஸ்ரீலங்காப் படையினரின்

## துரோகங்களின் அத்தியாயங்கள் - 43

முகாம்களைப் பாதுகாக்கும் பணிப்புரை இந்திய ப்படைகளுக்கு தீட்ஷித்தினால் வழங்கப்பட்டது. இது விடுதலைப்புலிகளை மேலும் சினமூட்டியது.

தமது போராளிகளுக்குப் பாதுகாப்பு வழங்க மறுத்திருந்த இந்தியப்படை, ஸ்ரீலங்கா படையினருக்குப் பாதுகாப்பு வழங்க முன்வந் ததைக்கண்டு விடுதலைப் புலிகள் ஆத்திரத்தின் உச்சத்திற்குச் சென்றார்கள்.

அடுத்த சில தினங்களில் பொதுமக்களுடன் இணைந்து சில விடுதலைப் புலி உறுப்பினர்களும், தமது கோபத்தைச் சிங்களப் படையினருக்கும், சிங்கள மக்களுக்கும்



எதிராகத் வெளிப்படுத்த ஆரம்பித்தார்கள்.

### சிங்கள இரத்தத்தால் நனைந்த தமிழ் மண்

காங்கேசன்துறை சீமெந்து தொழிற் சாலையின் பொது முகாமையாளர் ஜெயமண்ண மற்றும் உதவி முகாமையாளர் கஜநாயக்க போறோர் விருந்தினர் விடுதி ஒன்றில் 'உற்சாக பானம்' அருந்திக கொண்டிருந்தார்கள். அவர்களுடன் உள்ளூர் பொறியியலாளர்களான சோதி லிங்கம், வேலாயுதம் போன்றோரும் இருந்தார்கள்.

தமிழ் தேசமே சோகத்தில் மூழ்கி இருக்கையில் இவர்கள் விருந்து உட்கொண்டு மகிழும் விடயம் சில இளைஞர்களுக்குச் சினத்தை ஏற்படுத்தி இருந்தது. 'புலேந்திரன் இறந்ததை, சில சிங்களவர்கள் விருந்து வைத்துக் கொண்டாடி மகிழ்வதாக' செய்தி பரவியதைத் தொடர்ந்து, ஆதிரம் கொண்ட ஒரு கூட்டம் விருந்தினர் விடுதியைச் சூழ்ந்துகொண்டது.

இரண்டு சிங்கள அதிகாரிகளும் வெளியில் இழுத்துச் செல்லப்பட்டு தாக்கப்பட்டார்கள். மறுநாள் அவர்களிருவரது உடல்களும் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சா லையின் முன்பாகக் கிடந்தன. அவர்களுடம் இணைந்து விருந்துண்ட தமிழ் பொறியிய லாளர்களும் கடுமையான தாக்குதல்களுக்கு உள்ளானார்கள்.

சுன்னாகத்திலும் இதுபோன்ற ஒரு சம்பவம் நடைபெற்றது. சுன்னாகத்தில் பேக்கரி வைத்திருந்த ஒரு சிங்கள முதலாளி, 'போராளிகளை ஸ்ரீலங்காப் படையினர் கைது செய்தது சரியே' என்று உள்ளூர்வாசிகளுடன் விவாதம் நடாத்திக்கொண்டிருந்தார். ஏற்கனவே பலவித உணர்ச்சிகளுடன் காணப்பட்டிருந்த இளைஞர்களுக்கு இது மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தி இருந்தது. வாய்த்தர்க்கம் வன்செயலாக வடிவெடுத்தது. இறுதியில் அந்த பேக்கரி உரிமையாளர் கொலை செய்யப்பட்டார்.

தமிழ் பிரதேசங்கள் முழுவதும் வன்முறை வெடித்தது. 83ம் ஆண்டு தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் தமிழ் மக்களின் மனங்களில் பல ஆண்டுகளாகக் கனன்றுகொண்டிருந்தது. அதற்குப் பதில் வழங்கச் சரியான ஒரு தருணம் இதுவென்று பல இளைஞர்கள் பேசிக்கொண்டார்கள். தமது போராளிகளை அனியாயமாகச் சாகடித்துவிட்ட சிங்களவர்களைப் பழிவாங்கவென்று மேலும் பல இளைஞர்கள் புறப்பட்டார்கள்.


அடுத்த சில தினங்கள், தமிழ் பிரதேசங்கள் எங்கும் இரத்த வெள்ளமாகக் காட்சிதந்தன. ஆனால், இம்முறை சிந்தப்பட்ட இரத்தம் தமிழருடையது அல்ல. காலாகாலமாகவே தமிழர்கள் சிந்திய குருதியினால் நனைந்து வந்த தமிழ் மண்ணை, முதல்முறையாக சிங்கள இரத்தம் செந்நிறமாக்கியது.

(துரோகம் தொடரும்)

# தமிழீழ காவல் துறையில் முஸ்லிம் இளைஞர்களும் இணைந்து சேவை ஆற்றலாம்

**பயணம் -05**

உதயன் பத்திரிகை நிறுவன கேட்போர் கூடத்திற்கு எம்மை அழைத்துச் சென்ற உதயன் ஆசிரியர் கான மயில்நாதன் எம்மை இரண்டாவது தடவையாகவும் பாராட்டி ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பரிசுப்



பொதிகளையும் அன்பளிப்புச் செய்தார். கற்பகத்தருவாகக் கருதப்படும் பனை ஓலைகளால் செய்யப்பட்ட கைப்பணிப் பொருட்கள் அடங்கிய பொதிகளை நாம் எல்லோருமே பெற்றுக் கொண்டோம்.

அவர்களின் அந்தப் பிரிவுபசாரத்துடன் இராப்பொழுதை உதயன் நிறுவனத்தாரின் விடுதிகளில் கழித்தோம்.

மறுநாள் டிசம்பர் 19ம் திகதி காலையில் எல்லோரும் வாகனத்தில் ஏறி யாழ் மண்ணில் இருந்து வன்னி நிலப்பரப்பை நோக்கி விரைந்தோம். காலையில் முகமாலையில் சிறிலங்கா படையினர் எம்மை சோதனை செய்தனர். அவர்களின் சோதனைச் சாவடிகளைக் கடந்து சென்றதும் விடுதலைப் புலிகளின் காவல்துறையினரின் சோதனை சாவடி இருந்தது.

அங்கு எம்மை எதிர்பார்த்த வண்ணம் வழிமேல் விழிவைத்து கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கத்தின் உபதலைவர்களில் ஒருவரான ஜி.நடேசனும் ‘பளை’ காவல் பணிமனை பொறுப்பாளர் மாதவன் மற்றும் ஏனைய உறுப்பினர்களான ரமேஸ், மகேந்திரன் ஆகியோரும் காவல்துறையினரின் நீலநிற பிக்காப் வாகனத்துடன் எம்மைக்கண்டதும் எமது பேருந்து வாகனத்திற்கு முன்னாக காவல்துறையினரின் வாகனம் வழித்துணையாக எம்மை அழைத்துச் சென்றனர்.

ஆனையிறவுத் தளத்தின் ஊடக பயணிக்கும் போது எம்முடன் வந்த ஊடகவியலாளர்கள் ஆனையிறவுத்தளத்தில் சிதைந்து கிடக்கும் சிறிலங்கா படையினரின் கனரக வாகனங்களையும் ஆனையிறவுத் தளத்தையும் பார்த்து படம் எடுக்க வேண்டுமெனக் கூறினர். அதன்படி ஆனையிறவில் நாம் எல்லோரும் இறங்கி நின்று சிதைந்து கிடக்கும் சிறிலங்காப் படையினரின் டாங்கி முன்நின்று படம் எடுத்தோம். ஆனையிறவு என எழுதப்பட்டிருந்த பெயர் சுவரில் ஏற்கனவே ஆனையிறவு இராணுவமுகாம் விடுதலைப் புலிகளினால், கைப்பற்றிய பின் ‘ஜெந்தன் படையணி’ என எழுதப்பட்டிருந்தது. ஆனால் தற்போது அந்தப்பெயர் சுவரில் அழிக்கப் பட்டிருந்ததை எம்மால் அவதானிக்க முடிந்தது.

ஆனையிறவு சமரில் ‘ஜெந்தன் படையணியின்’ பங்களிப்பு பாரிய இடத்தைப் பெற்றது. ‘‘எங்கும் செல்வோம், எதிலும் வெல்வோம்’’ என்ற தாரக மந்திரத்திற்கு அமைவாக களத்தில் சாதனை படைத்த ஜெந்தன் படையணியானது மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் முழுமையான போராளிகளையும் தளபதிகளையும் கொண்ட படையணி என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. இந்தப் படையணியின் பெயர் ஆனையிறவு பெயர் கல்லில் ஆனையிறவு வெற்றிச்சமரின் பின் ஜெந்தன் படையணியின் சில போராளிகளால் எழுதப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழீழ போராட்ட வரலாற்றில் இருந்து ஜெந்தன் படையணியின் சாதனையை அழிக்க முடியாது என்பதை நாம் உணர்ந்து கொண்டோம்.

ஆனையிறவுத் தளத்தைப் பார்த்து விட்டுத் திரும்பவும் நாம் பேருந்தில் ஏறி பளை காவல் துறைப்பணிமனைக்குச் சென்றோம். அன்று காலை உணவும் அளவற்ற உபசரிப்பும் பளை காவல் பணிமனையில் எமக்கு வழங்கப்பட்டது. எல்லோருமே திருப்தியுடன் காலை உணவை முடித்துக் கொண்டு கிளிநொச்சியை நோக்கி விரைந்தோம்.

கிளிநொச்சியில் உள்ள தமிழீழ காவல் துறை தலைமையத்தில் தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் மற்றும் அங்கு கடமைபுரியும் சகலரும் எம்மை அன்புடன் வரவேற்றனர். அங்கு தமிழீழ காவல்துறையின் தோற்றம், செயல்பாடு, முன்னேற்றம், ஒழுக்கம், நீதிச்சட்டம் தொடர்பான பூரண விளக்கத்தை காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் சந்தேகங்கள் இன்றி சந்தோஷமாக எடுத்துக் கூறினார்.

முஸ்லிம் ஊடகவியலாளர்கள் பலர் பல கேள்விகளைக் கேட்டு தமது சந்தேகங்களுக்கு முற்றுப் புள்ளிவைத்தனர்.

தமிழீழக் காவல்துறையில் முஸ்லிம் இளைஞர்களை இணைத்துக் கொள்வீர்களா? என ஒரு ஊடகவிலாளர் கேட்டபோது, ‘‘தமிமீழ காவல்துறை ஒரு இனத்திற்கான காவல்துறையில்லை. தமிழீழத்தில் நீதியும் சட்டமும் ஒழுக்கமும் ஒழுங்கை ஏற்படுத்தும் நோக்கில் எமது தேசியத் தலைவரினால் ஆரம்பிக்கப்பட்ட இக் காவல்துறையில் நிட்சயமாக முஸ்லிம் இளைஞர்களும் விரும்பிச் சேவைபுரிய வருவார் களானால் அவர்களைக் கட்டாயமாக இணைத்துக் கொள்வோம்’’ என்று சிரித்துக் கொண்டே பதில் வழங்கினார் காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன்.

இந்த இடத்தில் ஒன்றைக் கூற வேண்டும் மட்டக்களப்பு திருப்பழுகாமத்தில் இயங்கும் தமிழீழ காவல்துறைப் பணியகத்தில் பொறுப்பாளராகவுள்ள கங்கை அழகன் கடந்த வருடம் முஸ்லிம் இளைஞர்களும் காவல்துறையில் இணைந்து கொள்ளமுடியும் என பகிரங்கமாகவே வேண்டு கோள்விடுத்திருந்தார். இவரின் வேண்டுகோள். பல பத்திரிகைகளில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் இளைஞர்கள் தாம்விரும்பினால் தமிழீழ காவல்துறையில் கடமை புரிவதை தாம் வரவேற்பதாகவும், அவ்வாறு முஸ்லிம் இளைஞர்கள் கடமை புரிவதன்மூலம் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை இலகுவில் தீர்கமுடியும் என்ற உண்மையினையும் தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் ப.நடேசன் சுட்டிக் காட்டத்தவறவில்லை.

தமிழீழக் காவல்துறை உத்தியோகத்தர்களுடனும் குறிப்பாக பெண் உத்தியோகத்தர்களுடன் நின்று புகைப்படம் பிடிக்க முஸ்லிம் ஊடகவியலாளர்கள் சிலர் காவல் துறைப் பொறுப்பாளரிடம் அனுமதி கேட்டனர்.

**-பாத்திரன்-**

‘‘தாரளமாக புகைப்படம் பிடிக்கலாம்’’ என தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் அனுமதி



வழங்கினார். இதனை அடுத்து சில ஊடகவியளாளர்கள் காவல்துறை உத்தியோகஸ்தர்களுடன் நின்று புகைப்படங்களைப் எடுத்துக் கொண்டனர்.

காவல்துறைத் தலைமைச் செயலகத்தையும் சுற்றிப் பார்த்து விட்டு தமிழீழ நீதிநிர்வாகத் துறையைப் பார்க்கச் சென்றோம்.

தொடரும்........

---

பகிரங்கமடல்

அலைமகன் எழுதும் பகிரங்கமடல்.



## போதும் இனியும் பொல்லாப்பு செய்ய வேண்டாம்.

**ஈ.பி.டி.பி செயலாளர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு!**

கடந்த வாரம் கொழும்பில் சிங்களப் பேரினவாதக் கட்சிகள் கூடி ஒரு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட நிகழ்வில் நீங்களும் கலந்து கொண்டு தமிழினத்திற்கு துரோகமிளைத்து விட்டீர்கள். உங்களைப்பச்சைத் துரோகி என தமிழ் மக்கள் கூறும் அளவிற்கு செயற்பாடு அமைந்து விட்டது.

சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் செய்து கொண்ட ஒப்பந்தம் தமிழர்களுக்குச் சாவு மணி அடிக்கும் ஒரு அபசகுணமான சதி நாச வேலையாகும். இது தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளுக்கு பேரானந்தமாக இக்கலாம். தமிழ் மக்களுக்கு அபசகுணமான அந்த நிக்ழ்வில் தாங்கள் கலந்து கொண்டதை எந்த மானமுள்ள, வீரமுள்ள தமிழனும் ஏற்றுக் கொள்ள மாட்டான். எங்கள் தமிழினத்திற்குச் செய்த போக்கிரித்தனமான செயல் இது.

இப்போது நாடாளுமன்றம் கலைக்கப்பட்டால் உங்கள் கட்சி ஆதரவாளர்கள் அல்லது நீர் எங்கள் தமிழீழ மண்ணில் எப்படி ஐயா வந்து வாக்குப் போடுங்கள் என எங்கள் தமிழ் மக்களிடம் கேட்கப் போகின் றீர்கள்? உங்களுக்கு எப்படி ஆதரவு தருவார்கள்?

சிங்களப் பேரினவாதிகளுடன் கைகோர்த்துக் கொண்டு தமிழீழ விடுதலைப்புலிகளின் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு இன்னும் இன்னும் தமிழ் மக்களின் எதிர்ப்புக் களைத் தேடிக் கொள்ள வேண்டாம்.

சந்திரிகா ஆட்சியில் இந்து கலாசார அமைச்சராக இருந்த காலத்தில் அவசரகாலச் சட்டம் சிறிலங்கா நாடாளுமன்றத்தில் மாதம் ஒரு பிரேரணை நிறைவேறும். அதில் கை உயர்த்தி சலுகை பெற்ற நீங்கள் இன்னுமொரு தேர்தலுக்கு கங்கணம் கட்டி, வாக்குக் கேட்டு வந்தால் என்ன மரியாதை கொடுப்பார்களோ தமிழ் மக்கள்!

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப்புலிகளைப் பலப்படுத்த வேண்டிய பணியினை தமிழ்க் கூட்டமைப்பு சுமந்து நிற்கிறது. மலையகக் கட்சிகளும். அணி சேர ஆர்வம் காட்டும் நிலையில் பேரினவாதக் குகைக்குள் உலாவிக் கொண்டு நாடாளுமன்ற நாற்காலி தேடுவது தப்பு தப்புதான். காட்டிக் கொடுத்தான் பண்டார வன்னியனை காக்கை வன்னியன். ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒரு காக்கை வன்னியன் அல்ல. விதம் விதமான எட்டப்பர் கூட்டம் இப்போதும் உலாவுவது தமிழ் மக்களுக்கு ஊறு விளைவிப்பதற்குப் போம். இனியும் பொல்லாப்புச் செய்ய முயற்சிக்க வேண்டாம்.

*இங்ஙனம், அலைமகன்*




# பெண்கள் என்றும் அடிமையில்லை

சட்டங்கள் இயற்றி
சரித்திரம் படைத்து
சாதனை புரியும்
எம்பெண்கள்



அநியாயங்களையும்
அடக்குமுறைகளையும்
ஆணாதிக்கத்தையும்
அனுசரிப்பதால் தான்
அவனியிலே பெண்
என்றும் அடிமை என்று
அரங்கேற்றம் நடக்கின்றது.

சிந்தித்துப் பாருங்கள்!
விண்வெளி சென்று
விந்தைகள் புரிந்து
புயலைப் போல்
பொங்கி எழுந்து
போரட்டத்தில்
வியத்தகு பல
வெற்றிகள் கண்டு
வீரச் சாதனை படைக்கும்

எம் பெண்கள்
அவனியிலே என்றும்
அடிமையில்லை

திருமதி நிர்மலா யுவராஜ்

# தற்கொலை ஒரு சமுகப் பிரச்சினை

இன்றைய கால கட்டத்தில் அதிகமாக பெண்கள் தற் கொலை செய்து கொள்வது பெருகிக் கொண்டே வருகிறது. ஏன்? பெண்கள் தற்கொலை முயற்சிகளில் இறங்குகிறார்கள் என்று ஆராய்ந்து பார்த்தால் பல காரணங்கள் உண்டு குடிகார கணவனின் தொல்லை, காதல் தேல்வி, பர்ட்சைகளில் தோல்வி, பெற்றோ ரினால் பிரச்சினை, பிள்ளைகளால் பெற்றோருக்குப் பிரச்சினை, சமுதாயம் தன்னையும் ஒரு பெண்ணாக மதிக்கவி ல்லை யென்ற கவலை, ஏழையாக வாழ்வதால் சில பெண்கள் வாழ்க்கையை வெறுக்கும் நிலை, ச்தன கொடுமை, மாமியார் கொடுமை, பணமி ருந்தும் நிம்மதியில்லாத திணீ டாட்டம், சந்தேகம், கோபம், பொறாமை, லட்சியத்தை அடை ய முடியாத வெறி, அழகாக பிறந்து விட்டோமே என்ற ஏக்கம், அழகில்லையென்று இறப்பதற்கு முடிவு எடுக்கும் பெண்கள் வேறு கணவனோடு பிரச்சினை இப்படியாகப் பிரச்சினைகளை அடுக்கிக் கொண்டே போகலாம் இந்தப் பிரச்சினைக்கெல்லாம் பெண்கள் தற்கொலை தான் சரியான முடிவு என்று நினைக்கிறார்கள்.

இது முட்டாள்த் தனமான முடிவு. நாம் இறந்துவிட்டால் மட்டும் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியுமா? மகளீரே! உங்களுக்குள்ளே இந்தக் கேள்வியை நீங்களே கேட்டுப்பாருங்கள். வாழ்க்கையே போர்க்களம் வாழ்ந்துதான் பார்க்கணும். முட்கள் நிறைந்ததுதான் வாழ்க்கை. மீனுக்குள் முள் இருக்கிறது. இது முள் இருக்கும் மீன் வேண்டாம் என்று யாரும் சொல்வதில்லை. முள்ளை எடுத்து எறிந்துவிட்டு மீனை உணவில் சேர்த்துக் கொள்கின்றோம். அதுபோல் தான் வாழ்க்கையிலும் நாளாந்தம் பல துன்பங்கள் நம்மை வந்து சூழ்ந்து கொள்கின்றது. நாம் வீதியில் நடந்து செல்லும்போது நாய் ஒன்று நம்மை விரட்டி வருகின்றது. அந்த நாயைக் கண்டு நாம் பயந்து ஓடினால் மீண்டும் நம்மை நாடி கடிக்கக் கூட வந்துவிடும். நாய் நம்மை நாடிவருவதைக் கண்டு நாயை நாமும் விரட்ட முயற்சி செய்தால் நாய் இடம் தெரியாமல் ஓடிவிடும். வாழ்க்கையில் துன்பம் வரும்போது நாம் சோர்ந்து விடக் கூடாது. துணிந்து நின்றால் வரும் துன்பங்கூட தெரியாமல் ஓடிவிடும். கணவன் மனைவிக்கிடையில் பிரிவுவரு வதற்கு முக்கிய காரணத்தைப்




பார்த் தோமானால் கணவர் மதுவுக்கு அடிமையானவராக இருக்கலாம். அல்லது உங்கள் மீது சந்தேகம் கொண்டவரா? உங்கள் மீது அன்பு காட்டமறுக்கிறாரா? இல்லையெ ன்றால் உங்களை விட்டு வேறு யாரையாவது திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுகிறாரா? உங்கள் பிள்ளைகளை வெறுப்பாகப் பார்க்கிறாரா? இவற்றை முதலில் நீங்கள் ஆராய வேண்டும். மதுவுக்கு அடிமையாகிய கணவராக இருந்தால் முடிந்தளவு அன்பாகச் சொல்லிப் பாருங்கள் மதுப்பழக்கத்தைவிடும்படி உங்கள் கணவருடன் அன்புடன் நடந்து கொள்ளுங்கள் ஒருவருக்கொருவர் மனம்விட்டு பேசுங்கள் சந்தேக என்ற நோய் உங்கள் மனதிலிருந்தால் முதலில் அதை அகற்றி விடுங்கள். அவருக்கு நிறைய சுதந்திரம் கொடுங்கள். இப்படியெல்லாம் அன்பாக நடந்தும் கணவர் உங்களை மதிக்கா வில்லை யென்றால் கலங்கா தீர்கள்.

எஸ்.எஸ்
ஏறாவூர் –05

# கைக்குழந்தைகளுக்கு பார்வைக் குறைவு

குழந்தைகள் பிறந்த இரண்டு வாரங்களுக்குள் பெரிதளவில் தென்படும் பொருட்கள் மீது பார்வையைச் செலுத்தும் 08முதல் 10வாரத்துக்கள் பொருளை தொடர்ச்சியாகப் பார்த்து கண்காணிக்கும். இவ்வாறு பார்வை செலுத்தாத குழந்தைகளுக்கு ஒரு வேளை பார்வை குறைவு ஏதாவது இருக்கலாம். குறைப்பிரசவம், எடைகுறைவு, கர்ப்பப்பையில் இருக்கும் போதே ஏற்படும் தொற்று வேறு சில உயிரினங்களில் ஜீவன்களில் ஏற்படும் பிரச்சினைகள் போன்றவற்றால் பார்வை குறைவு ஏற்படும்.



தாய்ப்பாலூட்டும் போது குழந்தை தாயின் கண்களை நோக்காமல் இருந்தால் ஆறு வாரம் ஆகியும் பார்வையைப் பொருட்கள் மீது பதியாமல் இருந்தால் கருவிழியில் வெள்ளையாக புள்ளிகள் தோன்ற ஏதாவது தென்படும். பரம்பரை ரீதியாக யாருக்காவது பார்வைக் கோளாறு இருந்தால் உங்கள் குழந்தைகளின் கண்களின் மீது கவனம் செலுத்தி கண்டாக்டர்களிடம் ஆலோசனை பெறுங்கள்.

எஸ்.தமயந்தி
அம்பிளாந்துறை.

# பெண்களைப் பற்றி உலக நாடுகள்

01. ஆணுக்குப் போர் எப்படியோ அப்படியே பெண்ணுக்குப் பிரசவம்.
[இந்தியா]

02. பெண்கையில் கொடுத்த பணம் தங்காது. ஆண்கையில் கொடுத்த பிள்ளை வாழாது.
[இந்தியா]

03. பெண் இல்லாவீடு பேய்வீடு.
[இந்தியா]

04. கோபமுற்ற பெண் கரையில்லாத கடல்போன்றவள்.
[இத்தாலி]

05. வானத்தின் அழகு நட்சத்திரம் பெண்ணின் அழகு அவளது கூந்தல்.
[இத்தாலி]

06. ஒரு நல்ல பெண் இருக்கும் வீட்டில் ஆனந்தம் ஜன்னல் வழியாக சிரிக்கின்றது.
[போலந்து]

07. பெண் இல்லாத வீடு வாழியில்லாத கிணறு.
[பல்கேரியா]

08. பெண்தான் வீடு.
[நைஜீரியா]

09. பெண்ணின் மிகச்சிறிய சீதனம் அவள் அழகு
[ஜேர்மனி]

10. ஒரே சமயத்தில் பெண்ஒருத்திக்கு 77எண்ணங்கள் உண்டாகின்றன.



ரி.வி. ஆர்த்தி
தம்பலவத்தை.

# உடல் அழகு

பொதுவாக பெண்களின் உடல் உறுதிக்கும் அழகுக்கும் பல்வேறு மருத்துவக் குறிப்புகள் வழக்கில் உள்ளன.



*. தினமும் காலையில் சிறிதளவு தேனை வெறும் வயிற்றில் உண்டுவர உடல் எடைகுறைவதுடன் இரத்தம் சுத்தமாகி உடல் பளபளப்பு ஏற்படும்.

*. வெள்ளாட்டுப் பாலை தினமும் வெறும் வயிற்றில் குடித்துவர உடல் வலுப்பெற்று உடல் அழகு கூடும்.

*. பொன்னாங்கணிக் கீரையை தினமும் உணவுடன் சேர்த்துவர மேனி பொன் போல மிளிரும்

*. வல்லாரையுடன் சிறிது மிளகைச் சேர்த்து அரைத்து அல்ல துவையல் செய்து உணவுடன் உண்டு வந்தால் உடல் உறுதி பெறும்.

கு.காந்தினி

# முந்திரியம் பணியாரம்





**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| முந்திரிமா (வறுத்தது)– | 1கி.கிராம் |
| தேங்காய்– | 3 |
| சர்க்கரை– | 500கிராம் |
| சீனி– | 250கிராம் |
| ஏலம், உப்பு, மஞ்சள்– | தேவையான அளவு |
| கோதுமைமா– | 250கிராம் |
| அரிசிமா– | 200கிராம் |
| தேங்காய் எண்ணெய்– | 1போத்தல் |

**செய்முறை:–**

தேங்காய்பூவைப் பொன்னிறமாக வறுத்து மாவாக இடித்ததும் அதனுடன் சர்க்கரை, சீனியைச் சிறிது சிறிதாக இடித்து முந்திரியம் மாவையும் அதனுடன் சேர்த்துக் கலவையை ஒன்றாக்கவும் அதன் பின்னர் ஏலம் பொடி செய்து அளவிற்கு உப்பும் இட்டு, கொதி நீரைக் கொஞ்சம் கொஞ்சமாகக் சேர்த்துக் குழைத்ததும் விரும்பிய அளவிற்கு உருண்டைகளாக்கியதும். அரிசிமா, கோதுமைமா, சிறிதளவு உப்பு, மஞ்சள்தூள் இவற்றைச் சேர்த்துக் கரைக்கவும் பின்பு உருண்டைகளை மாக்கரைசலில் தோய்த்து கொதிக்க வைத்த எண்ணெய்யில் நன்றாகப் பொரிந்த பின்னர் தூய்மையான பாத்திரத்தில் இறக்கிவைத்து சூடாறியதும் பரிமாறலாம்.


# மருத்துவக்குறிப்பு

## தலைமுடி உதிர்வது தொற்றுநோயா?

தலைமுடி தொடர்பாகத் தோன்றுகின்ற குறைபாடுகள் அனைத்தும் ஏதோ நோய்த் தொற்று என்று அநேகர் எண்ணிக் கொள்கின்றார்கள். உடனே மருத்துவரை அணுகுகின்றார்கள் அவர் ஏதோ சொல்லி பணத்தைப் பிடுங்கிவிடுகின்றார். எங்கும் இது தான் நடந்து கொண்டிருக்கிறது. அது தவறு என்பதை இப்போதாவது தெரிந்து கொள்ளுங்கள்.

எப்பொழுதும் தலைமுடியைச் சுத்தமாக வைத்துக் கொண்டு சுத்தமான தேங்காய் எண்ணெய்யோ அல்லது தயாரித்த தைலத்தையோ தடவிக் கொண்டு வந்தால் தலைமுடிக் கோளாறு ஏற்படாது.

இது தொற்றுநோயாக இருக்குமோ என்று சந்தேகம்பட வேண்டாம். உங்கள் கவனக்குறைவு தான் அதற்குக் காரணமாகும் என்பதை நம்புங்கள் இந்த அறியாமையை இளைஞர்களும், யுவதிகளும் முதலில் அகற்றிக் கொள்ள வேண்டும் தலைமுடியைச் செழுமைப் படுத்திக் கொள்ள நீங்கள் கொஞ்சமேனும் சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உங்களது எண்ணம் கைகூடும்.



திரை பிம்பங்கள்

# வன்முறை குறித்த விவாதம்


## நாடோடி மன்னன் முதல் காக்க காக்க வரை



வன்முறையென்பதை நாம் உடல் சார்ந்த நேரடி வாயிலான வன்முறை மற்றும், உளம் சார்ந்த வன்முறை எனப் பிரித்துக் கொள்வது நன்று. ஏனெனில் உடல் சார்ந்த வன்முறை உடலுக்கு ஊனத்தையும் செயல் முடக்கத்தையும் உடலுக்கு நிரந்தர அழிவையும் ஏற்படுத்தும் நோக்கத்தில் ஏற்படுவதாகும். இதன் உச்சம் மனித கொலை பண்பாட்டு ரீதியான வன்முறைகள் உளவியல் ரீதியானவை. மனிதனுடைய ஆளுமையையும் அவனுடைய பெருமிதத்தையும் அழித்து அவமானத்தை குறிப்பிட்டவர் மீது ஏற்றும் நோக்கம் கொண்டவை. இத்தகைய வன்முறைகள் சாதியைத் தீண்டாமை மற்றும் பெண்களின் மீதான நிந்தனைச் சொற்கள் போன்றவற்றின் வழி வெளிப்படுகின்றது. இவ்வகையான வன்முறைகள் எம்.ஜி. ராமச்சந்திரனை நாம் விவாதம் தொடக்கமாக எடுத்துக் கொள்ளக் காரணம் 1930 களில் தொடங்கிய தமிழ் சினிமாத் தயாரிப்பில் அவருக்கு முன்பாகச் சித்தரிககப்பட்ட தமிழ்ச் சினிமா வன்முறை என்பது மல்யுத்தம் அல்லது வாள் வீச்சு சார்ந்த சரித்திரப் படங்களிலேயே இருந்து வந்திருக்கிறது. ரஞ்சன், ஆனந்தன் போன்றவர்களின் தொடர்ச்சியாகவே தமிழ் வீரத்தின் அங்கமாகவே இத்தகைய வன்முறைகள் இருந்து வருகின்றன. நவீன ஆயுதங்கள் திரட்டிக் கொள்ளப்பட்ட ஆயுதக் குழுவின் வன்முறை மதசாதிய அரசியல் ரீதியான உடல் அழிப்பு சார்ந்த வன்முறைகளை அதற்கு முன்பாக கால கட்டங்களில் சித்தரிக்கப்பட்டிருக்க வாய்ப்புக்கள் குறைவு. மன்னர்களுக்கிடையிலான போர்கள் சதிச் செயல்கள் கடற் கொள்ளையர்களின் சண்டைகள் மலைக்கள்ளர்களின் சாகசம்,போன்றனவே உடல்சார்ந்த வன் முறைகளாக இடம்பெற்று வந்திருக்கின்றன.ஆனால் மதம் சார்ந்த பெண்கள் சார்ந்த உளவியல் வன்முறை மௌமாக பிம்பங்களாக தொடர்ந்து இருந்து வந்திருக்க வேண்டும். ஏனெனில் பண்பாட்டில் அம்சமாக சமூகத்தின் சகல அம்சங்களில் உறைந்திருந்ததான வன்முறையே இது.

எம்.ஜி.ராமச்சந்திரனைத் தொடக்கப் புள்ளியாகக் கொண்டு நாம் தமிழ் சினிமாவில் வன்முறைச் சித்தரிப்பின் கையினங்கள் குறித்து அவதானிப்போம் என்றால், வன்முறையின் தன்மையினை அவதானித்து விட முடியும்.

1. பதினைந்து பேரை தனிநபராக வீழ்த்திய சாகசம்.
2. தேசபக்த பொலிஸ் மற்றும் படைத்துறை உளவுச்சாகசம் (குடியிருந்த கோயில் மற்றும் ரகசியப் பொலிஸ் 115)சார்ந்த படங்கள்
3. விளிம்பு நிலைமக்களின் தலைவனாக தலைமையேற்றுச் செய்யும் சாகசம் (ஆயிரத்திலொருவன், நம்நாடுமற்றும் படகோட்டி)



போன்றவற்றின் வழி வராதபடங்களில் வன்முறை என்பது இடம் பெற்றது. எம்.ஜி.ராமச்சந்திரனின் படங்களில் இடம் பெற்ற வன்முறைகள் இரண்டு விதமான அரசியல் பண்புகளைக் கொண்டவை. முதலாவதாக சட்டம் நீதியைப் பாதுகாக்கிற பொலிஸ் வன்முறையை, படையினர் வன்முறையை அவரது படங்கள் நீதியானவை எனப் பற்றி நிற்கின்றன. இரண்டாவதான மதசாதிய அம்சங்களின் ஒடுக்குமுறை உள்ளனவர்களின் பக்கம் நின்று ஒடுக்கப்படுபவர்களுக்கு எதிரான வன்முறையின் நியாயத்தைப்பற்றி நிற்கின்றன. என்றாலும் வன்முறை குறித்த இறுதிப் பார்வையில் சமரச உபதேசமே அவரது சமூக நோக்காக இருந்தது (3) பெண்களைப் பொறுத்து இன்று வரையிலான திராவிட அரசியல் கட்சிகளின் பார்வையான நிலப்பிரவுத்துவ பாலுறவு அறிவியல்களையே (விவசாயி, எங்கள் தங்கம் மற்றும் கன்னித் தாய் ) போதித்து வந்ததன் வழி பெண்ணின் மீதான உளவியல் வன்முறையை எம்.ஜி.ராமச்சந்திரனின் படங்கள் கொண்டிருந்தது.

கடந்த முப்பது ஆண்டுகளில் தமிழ் சினிமாவில் பிரதானமாக வளர்ந்து வந்திருக்கின்ற வன்முறை வகையினங்கள் என்ன எனப் பார்த்தோமானால் கடந்த பத்தாண்டுகளில் வளர்ந்து வருகிற மத சாதிய வன்முறைகளின் நேரடியான நிலைநாட்டல் களை நாம் புரிந்து கொள்ள முடியும்.


(1). பதினைந்து பேரை வீழ்த்துகிற நாயகன் ரஜனியில் இருந்து தனுஷ் வரை அப்படியே இருக்கிறார்கள்.

(2). எதிரிகளின் சமூக அடிப்படையும் அரசியல் அடிப்படைகளும் மாறிவிட்டாலும் கூட பொலிஸ் மற்றும் படையினரின் வன்முறை நீதியான வன்முறை எனப் போதிக்கும் படங்கள் அப்படியே இருக்கிறது.

(3). சிறை வன்முறை தொடர்பாக மட்டுமே விமர்சன ரீதியில் (மகாநதி மற்றும் பிதாமகன்) சில படங்கள் வந்திருக்கின்றன.

(4). சாதி வன்முறை மண்வாசனை படங்களின் வழி நேரடியாகச் சித்தரிக்கப்படலாயிற்று. இப்படிச் சித்தரிக்கப்பட்ட வன்முறை வரலாற்றுச்சம்பவங்களை அடிப்படையாகக் கொள்ளாதாலும் ஆதிக்கச் சாதிகளைமையமாகக் கொண்டிருந்தாலும் (தேவர் மகன் மற்றும் பாரதி கண்ணம்மா) முரண்கள் நேரடியாகச் சித்தரிக்கப்படாமல் யதார்த்தத் தன்மை கொண்டதாகவே இருந்தது.

கடந்த பத்தாண்டுகளில் இந்துத்துவாவென்பது இந்தியாவின் அரசியல் பண்பாட்டுத் தளங்களில் ஒரு அதிகார சக்தியாக வேர் கொண்டதையடுத்து மதம் சார்ந்த வன்முறையென்பது வெளிப்படையாகச் கூச்சநாச்சமின்றி இந்திய தேசபக்தி எனும் அடிப்படையில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறது. அர்ஜுனுடைய படங்களில் வில்லன்கள் பாகிஸ்தானிய இஸ்லாமியத் தீவிர வாதிகள் ஆகிறார்கள். விஜயகாந்தின் படங்களில் உள்ளூர் இஸ்லாமியர்கள் பாகிஸ்தான் பயங்கர வாதிகளோடு சேர்ந்து இந்தியாவின் நாச வேலைகளில் ஈடுபடுகிறார்கள். பாரதிராஜாவின் ஈரநிலம் போன்று கார்கில் யுத்தத்தை மையமாக வைத்து இந்தியப் படைத்துறை ஆதரவுப் படங்கள் தமிழில் வெளிவரத் தொடங்குகின்றன. இஸ்லாமிய மக்கள் மீதான வன்முறைக்கான அரசியல் இவ்வாறாக தமிழ் சினிமாவில் நேரடியாக வேரோடி வளர்கிறது.



தாராளவாத அரசியலும் பகுத்தறிவுக் கொள்கையும் மதச்சார்பற்ற தன்மையும் கொண்டிருந்த திராவிட இயக்கங்களின் சமூகப்பார்வையின் விளைவாக தலித் மக்களுக்கு எதிரான நேரடியான வன்முறைகள் என்பது தமிழ் சினிமாவில் இடம் பெறவில்லை. காரணமாக தமிழ் சமூகத்தில் நேரடியாக அம்மக்களின் மீது உடல் சார்ந்த வன்முறையில் ஈடுபட்டு வந்த இடைநிலைச் சாதியினரின் கருத்தியல் சட்டமாகவே தமிழ் சினிமா இருந்தது. யார் அந்த மக்களின் மீது வன்முறை செய்தார்களோ அவர்களின் பால்பரிவு கொண்டவர்களாகவும் அவர்களுக்காக போராடுகிற தலைவர்களாகவும் (சின்னக்கவுண்டர், மறுமலர்ச்சி, மற்றும் சேனாதிபதி)போலியாகப் படங்களில் சித்தரிக்கப் பட்டார்கள் இந்தப் படங்களிலும் தலித் மக்கள் குறித்த சித்தரிப்பென்பது பூடகமாகவும் கூடார்த்தமாகவுமே சத்தரிக்கப்பட்டது.

---

# வாசகர் இதயம்

### என் மனம் புகுந்த தமிழ் அலையே:

உன் வரவால் எனதுள்ளம் நிரம்பிவிட்டது. காரணம் தமிழ் மக்களுக்காய் நீ பருவானில் இருந்து ஓசை எழுப்புகின்றாய். ஆனால் எழுவானில் உள்ளவர்களும் மகிழ்வடைய கடலலையைவிட தமிழலைதான் என நினைக்கையில் உன் சேவையை நினைத்து மெய் சிலிர்க்கின்றேன். உனது ஆக்கங்கள் ரொம்ப ரொம்ப பிரமாதம் கடலாழம் கண்டாலும் உனது ஆக்கங்களின் ஆழத்தை யாராலும் கண்டறிய முடியாது வாழ்க வளர்க உன் பணி!

சி.யோகேஸ்வரன்
பெரியபோரதீவு.

### அன்பின் தமிழ்லையே:

உனது படைப்புக்கள் அனைத்தும் தரம். அதில் என்னை மிகவும் கவர்ந்தது துரோகங்களின் அத்தியாயம், மாவீரர் வரலாறு, காத்திரன் பதில், சிறுகதை என்பவை மேலும் அனைத்து ஆக்கங்களும் தரத்திலும் தரம். உனது வளர்ச்சி கண்ட நான் பூரிப்படைகின்றேன் மேலும் மேலும் நீ வளர எனது வாழ்த்துக்கள்.

கா.பத்மாவதி
களுவன்கேணி வீதி
பலாச்சோலை

### அலையே

அலையேதமிழ் அலையே
பொங்கி எழும் தமிழ்அலையே
எமக்காய் எழுந்த தமிழ் அலையே
தமிழுக்கு உயிர் கொடுத்த அலையே
அறியட்டும் உன் வலிமை நீ
அலையா தமிழினத்தின் உணர்வா
என்பதனை அறிய வைப்பாய். தன்
மானம் காத்த தமிழ் அலையே.

கா.ஜெயா
மயிலம்பாவெளி

### அன்புடன் தமிழ் அலைக்கு என் வந்தனங்கள்

தமிழர் மனங்களில் தவழும் உன்னை எனக்கும் உன் மேல் ஒரு விருப்பு காத்திரன் கோள்வி பதில், காலத்தால் அழியாத மாவீரர் வரலாறு, அரிவையர் அலை, சிறுவர் சிகரம் என்று பல கருத்துக்களை உள்ளடக்கி நீ வலம் வருகின்றாய். ஆனால் உன்னில் ஒரு குறை என்னவென்றால் நான் காத்திரன் கோள்வி பதிலில் கலந்து கொள்வதற்கு ஒரு கேள்வியை வடித்து அனுப்பினேன். இன்னும் பிரசுக்கவில்லை இதே போன்ற குறைகளை நிவர்த்தி செய்யவும் நீ வாழ்க என்றும்.


தா. வாமதேவன்
கன்னன்குடா

### எட்டுத் திக்கும் அலை பாயும் தமிழ் அலையே வணக்கம்!

அலையே நீ சுமந்து வரும் ஆக்கங்கள் யாவும் தரமானவை அதிலும் காத்திரன் பதில், கவிதைக் களம், சிறுவர் சிகரம், மாவீரர் வரலாறு என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. நீ வையகம் எங்கும் அலை பாய என் இனிய வாழ்த்துக்கள்.

நாகமணி மஞ்சு
மண் சேனை -02
சங்கமன் கண்டி

## வண்ணாத்துப் பூச்சி



வண்ண வண்ணப் பூச்சி
வண்ணாத்துப் பூச்சி
சின்னச் சின்ன இறகில்
சிந்தை கவரும் பூச்சி

பூ இதழில் அமர்ந்து
தேன் பருகும் பூச்சி
பூக்களோடு பூக்களாகி
புதுமை காட்டும் பூச்சி



பஞ்ச வர்ண அழகை
பக்குவமாய்ச் சுமந்து
பஞ்சு மெத்தை உடலில்
பள பளக்கும் பூச்சி

எங்கள் வீட்டுத் தோட்டத்தில்
எழில் ததும்பும் வடிவில்
எப்போதும் சுற்றி வரும்
என்னைக் கவர்ந்த பூச்சி.

அகிலேஸ்வரன்- சுகேசனா
தரம்-3J
மட்/கோட்டமுனை க.வி

## வாழ்வியல் பற்றிய வைர வரிகள்

*. புரட்சியும், புதுமையும் அற்ற வாழ்வு பிரயோசனம் அற்றது.
*. 'விடியல்' என்பது பணக்காரனுக்கு மட்டுமல்ல ; அது ஏழைக்குமாகவும் தான்.
*. மற்றவருடைய உரிமைகளை, சுதந்திரங்களை சுரண்டுவதில் சுகம் காண்பவன் மனிதருக்குள் முதலாவது துரோகியாவான்.
*. எவனொருவன் பிறருக்காக வாழ்கின்றானோ அவன் தான் மனிதருக்குள் தெய்வமாவான்.
*. நீ நினைத்த காரியம் ஒன்று நிறைவேறாமல் போய் விட்டதற்காக ஏங்காதே. நீ நினைக்காமலேயே வேறொரு காரியம் நிறைவேறிவிடும்.
*. வாழ்க்கை என்பது மனிதன் புனிதனாவதற்குரிய ஒரு புனித நிலையம். இங்கே ஒவ்வொருவரும் தம்மைத்தாமே புனிதமாக்கிக் கொள்ள வேண்டும்.

வெல்லதிபதியான்
எருவில்

## சிறுவர் சித்திரம்



## கெடுவான் கேடு நினைப்பான்

ஓர் ஊரை அடுத்திருந்த காட்டில் துறவி ஒருவர் நீண்ட காலமாகத் தங்கி இருந்தார். அவருக்கு ஏராளமான சீடர்கள் இருந்தனர். அவரைக் கண்டு ஆசி பெறுவதற்காகப் பல ஊர்களில் இருந்தும் மக்கள் அங்கே வருவார்கள். சில சமயம் அவரும் மக்களைக் காண ஊர்ப் பக்கம் வருவது உண்டு.

ஒரு சமயம் அவர் ஒரு ஊருக்கு வந்தார். வணிகனின் மகள் ஒருத்தியைக் கண்டார். அவளின் அழகு அவரை மயக்கியது. எப்படியாவது அவளை அடைய வேண்டுமென்று நினைத்தார்.

வணிகனின் வீட்டிற்குள் நுழைந்தார். துறவியாரைச் சிறப்பாக வரவேற்று அவர், திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான் அந்த வணிகன்.



தன் முகத்தைச் சோகமாக வைத்துக் கொண்டார் அவர். ''அன்பனே! எழுந்திரு! உன் குடும்பத்திற்குப் பெருந்தீங்கு நிகழவுள்ளது. அதைச் சொல்லவே வந்தேன்'' என்றார்.

பதறிப்போன அவன் ''துறவியரே! நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று அழுதான்.

''உன் மகளை நீ இழக்கத் துணிய வேண்டும். அப்பொழுது தான் நீயும் உன் குடும்பத்திலுள்ள மற்றவர்களும் பிழைக்க முடியும். இல்லையேல் மற்றவரும் அழிந்து விடுவீர்கள்'' என்றார் அவர்.

துறவியாரே! எங்களுக்கு வழிகாட்டிய நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அப்படியே செய்கின்றேன். என் மகளை இழக்க என் மனம் ஒப்புக் கொள்ளவில்லை எனக்கு. வேறு வழியில்லையே என்றான் அவன்.

''நான் சொல்வதைக் கவனமாகக் கேள். ஒரு பெரிய பெட்டியில் உன் மகளைப் போட்டு மூடு. அந்தப் பெட்டியை ஆற்றில் விட்டுவிடு. அது மிதந்து கொண்டே செல்லும், அது செல்லச் செல்ல உன் குடும்பத்தைப் பிடித்த தீங்கும் உன்னை விட்டு நீங்கி விட்டதென்று பொருள்படும்'' என்றார் அவர். துறவி

''அப்படியே செய்கிறேன்'' என்றான் அவன். மகிழ்ச்சியோடு தன் இருப்பிடத்திற்கு வந்தார்.

சீடர்களை அழைத்து ''ஆற்றில் ஒரு பெரிய பெட்டி மிதந்து வரும். அந்தப் பெட்டியை திறந்து விடாதீர்கள். அதற்குள் கொடிய பிசாசு உள்ளது. உங்களை அது கொன்றுவிடும்'' என்று எச்சரித்து அனுப்பினார்.

சீடர்களும் ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். வணிகன் தன் மகளை ஒரு பெரிய பெட்டியினுள் வைத்து பூட்டினான். அந்தப் பெட்டியை ஆற்றில் விட்டான். அது மிதந்து கொண்டே சென்றது. வேட்டையாட வந்த அரசன் பெட்டியைத் திறந்தான். அழகான பெண் ஒருத்தி இருந்தாள். யார் இவளை பெட்டிக்குள் வைத்து ஆற்றில் மிதக்க விட்டிருப்பார்கள்? ஏதோ சூழ்ச்சி நடக்கிறது என்பது அவனுக்குப் புரிந்தது. வீரர்களைப் பார்த்து நாம் உயிரோடு பிடித்த கொடிய புலியை இந்தப் பெட்டிக்குள் போட்டு மூடி ஆற்றில் விட்டுவிடுங்கள்'' என்றான்.

ஏன் இன்னும் பெட்டி வரவில்லை? என்று பரபரப்புடன் உலாவிக் கொண்டிருந்தார் துறவி.

ஆற்றில்மிதந்து வந்த பெட்டியைச் சீடர்கள் சுமந்து கொண்டு துறவியிடம் கொடுத்தார்கள்.

''நீங்கள் அனைவரும் அறைக் கதவைத் தாளிட்டு விட்டு வெளியே செல்லுங்கள். உள்ளே என்ன சத்தம் கேட்டாலும் கதவைத் திறக்காதீர்கள். இந்த பிசாசு யார் குரலில் வேண்டுமானாலும் பேசலாம். பெண் குரலில் அழும். ஏமாந்து விடாதீர்கள் எச்சரிக்கையாக இருங்கள்'' என்றார் அவர். சீடர்களும் அவர் சொன்னபடியே செய்து விட்டு வெளியே காத்திருந்தார்கள்.

தன் எண்ணம் நிறைவேறப் போகிறது. என்று மகிழ்ந்தார் அவர். பெட்டியின் அருகே சென்று , அன்பே! உனக்காக எவ்வளவு ஆவலுடன் காத்திருக்கிறேன். தெரியுமா? உன்னை முதன் முதலில் பார்த்தவுடனே என் உள்ளத்தைப் பறி கொடுத்து விட்டேன். உன் ஆசைகள் எல்லாவற்றையும் நிறைவேற்றுவேன்'' என்று சொல்லிக் கொண்டே பெட்டியைத் திறந்தார்.

பசியுடன் அடைபட்டுக்கிடந்த புலி கோபத்துடன் அவர் மீது பாய்ந்தது.

உயிருக்குப் போராடிய அவர் கதவைத் தட்டினார். ''சீடர்களே! கதவைத் திறந்து என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று கெஞ்சினார். வெளியே இருந்த சீடர்கள், பிசாசே எங்கள் குருவின் குரலில் பேசினால் ஏமாந்து விடுவோமா? நீ என்ன சொல்லிக் கெஞ்சினாலும் திறக்க மாட்டோம்'' என்றனர். தப்பிக்க வழியில்லாத அவரை புலி அடித்துக் கொன்றது.

## விஞ்ஞான விளக்கம்

01.வாகனங்களின் ரேடியற்றர்களை குளிரச் செய்ய நீர் ஊற்றுவதன் நோக்கம் ஏன்?
நீரின் வெப்பம் கொள்ளளவு ஏனைய பொருட்களை விடக் கூடியது . அத்துடன் நீர் இலகுவில் கிடைக்கும் பொருள் ஆகும்.

02. புல் இனங்களை ஒட்டுதல் மூலம் விருத்தி செய்ய முடியாது ஏன்?
இரு வித்திலைத் தாவரங்களில் கலன்கட்டுக்கள் ஒழுங்காக அடுக்கப்பட்டுக் காணப்படுவது போல் ஒரு வித்திலைத் தாவரத்தின் கலன்கட்டுக்கள் காணப்படுவதில்லை.அதாவது ஒட்டும் போது கான் உரியம் என்பன கண்டபடி காணப்படும். ஒட்டும் போது அவைகளை சரியாகப் பொருந்துவது சாத்தியமில்லை. இதனால் புல் இனங்களை ஒட்டுதல் மூலம் விருத்தி செய்ய முடியாது.

03. ஒரு சிறுவன் மரவள்ளிக் கிழங்கின் ஒரு துண்டை நீண்ட நேரமாகச் சப்பியதன் பின்னர் இனிப்புச் சுவையானதாக இருப்பதாகச் சொன்னான். காரணம் என்ன?
கிழங்கில் உள்ள மாப்பொருள் உமிழ் நீரில் உள்ள நயவினால் வெல்லமாக மாற்றப்பட்டதனால் இனிப்புச் சுவையாக இருந்தது.

04. முட்டை பழுதடைந்துள்ளதா என்பதைக் கண்டு பிடிப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?
முட்டையை நீரில் இட்டு அவதானிக்கும் போது பழுதடைந்த முட்டைகள் மிதக்கும். பழுதடையாத முட்டைகள் அமிழும். பழுதடைந்த முட்டைகளில் உள்ள பதார்த்தங்கள் வாயுவாக ஒட்டி சிறு துவாரங்களின் வழியாக வெளியேறுவதனால் முட்டையின் பாரம் குறைகிறது. இதனால் பழுடைந்துள்ள முட்டையை கண்டு பிடிக்கலாம்.

05. ஆகாய விமானத்தில் இருந்து குதிப்பவர்கள் விழும் போது ஏற்படும் வேகத்தைக் குறைக்க பரசூட் உபயோகிப்பர் ஏன்?
பரசூட் குடை போன்று விரியக் கூடியது இறங்கும் போது விழுகை வேகத்திற்கு ஏற்ப வளி அமுக்கம் எதிராகத் தாக்குவதால் வேகம் குறைக்கப்பட்டு மெதுவாக வந்து இறங்குகின்றனர்.

டிலோசனா
தரம்-9A
மட்/அரசடித்தீவு வி.வி

## கல்வி

கல்வி கரை காணமுடியாதது.
காலத்தால் அழியாதது.
எள்ளி நகைப்போரையும்
எழுந்து வணங்க வைப்பது
அதுவே எமது அழியாச்
சொத்து. அறிவீர் என் சக
தோழர்களே!

வி.வை. டொறின் நயில்ஸ்
தரம்-11
கிளி/இராமநாதபுரம். ம.வி



ஆர்.புவனராஜா
தரம்- 05
கமு/தம்பிலுவில்
அருணோதய வித்தியாலயம்

## விடுகதைகளும் விடைகளும்

1. தத்தக்க பித்தக்க நாலுகால், தானே நடந்தால் இரண்டு கால், முற்றிப் பழுத்தால் மூன்று கால், முதுகாடு போவது எட்டுக்கால் அது என்ன ?
2. செக்கே செவந்திருக்கு செவ்வாழை பூத்திருக்கு வாலும் முளைச்சிருக்கு வந்திருக்கு சந்தைக்கு அது என்ன?
3. பந்திக்கு முந்தும் படைக்குப் பிந்தும் அது என்ன?
4. தொப்பி கழன்றால் தொப்பென்று விழுவான் அவன் யார்?
5. செம்பு நிறைய சென் நிற முத்துக்கள் அது என்ன?
6. ஆடுவார் ஓடுவார் கந்தப்பர் ஒற்றைக் காலில் நிற்பார் கந்தப்பர் அவர் யார்?
7. ஆடிவருவாள் பாடி வருவாள் வந்த இடம் தெரியாமல் ஓடிவிடுவாள் அவள் யார்?
8. ஏறு ஏறு சங்கிலி இறங்கு இறங்கு சங்கிலி எட்டாத கொப்பெல்லாம் தொட்டுவா சங்கிலி அது என்ன?
9. சொண்டு சிகப்பானார் சுண்டெலி வாலனார் தூங்குவார் பறக்க மாட்டார். அவர் யார்?

விடைகள்.
1. மனிதன்.
2. செத்தல் மிளகாய்.
3. வலது கை.
4. பனம் பழம்.
5. மாதுளம் பழம்.
6. கதவு.
7. கடல் அலை.
8. முசுறு.
9. கிண்ணம்பழம்.

நா.சுதர்சன்
மட்/பெரியபோரதீவு
பாரதி வித்தியாலயம்

# 5ம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான வினாக்களும் விடைகளும்

## வினாத்தாள்- 1
## பகுதி -1

**மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

**1. பின்வருவனவற்றுள் செடி, கொடி வகைக்குள் அடங்குபவை?**
(1). தூதுவிளா, வெற்றிலை
(11). புகையிலை, மிளகு
(111). வாழை, முடக்கொத்தான்.

**2. எள்ளில் இருந்து தயாரிக்கப்படும் எண்ணெய்?**
(1). நல்லெண்ணெய்
(11).விளக் கெண்ணெய்
(111). இலுப்பெண்ணெய்

**3. கொள்ளு வித்தை பிரதானமாக விரும்பி உண்ணும் பிராணி?**
(1). யானை
(11). குதிரை
(111). பன்றி


**4.**  **இக்கால் அமைப்பைக் கொண்ட பறவை?**
(1). கோழி
(11). தச்சன்குருவி
(111). வௌவால்

**5. தனது மீசையை உணர் கொம்பாகப் பயன்படுத்தி சூழலைப் பற்றி அறியும் மிருகம்?**
(1). பூனை
(11). எலி
(111). பன்றி

**6. சூழலுக்கு ஏற்ப தனது உடலை மாற்றிக்கொள்ளும் பச்சோந்தி என்பது?**
(1). ஒருவகைப் பறவை இனம்
(11). ஒருவகை ஊர்வன இனம்
(111). ஒருவகை மிருக இனம்


**7.**  **இந்த முக அமைப்பைக் கொண்ட பறவை?**
(1). கோழி
(11). உள்ளான்
(111). கொண்டலாந்தி

**8.**  **இவ்வமைப்பைக் கொண்ட மூலிகைத் தாவரம்?**
(1). திப்பிலி
(11). மிளகு
(111). துத்தி





**9. இவர்யார்?**
(1). வீதிப் பாதுகாப்பு அதிகாரி
(11). தீயணைப்பு படைவீரர்
(111). விமானி

**10. வெள்ளைக் கடிதம், திறந்த கடிதத்தைக் காட்டும் அமைப்பு?**




11. yyy இவ்வாறான தையல் அமைப்புக் குறிப்பது?
yyy 1.சங்கிலித் தையல்
yyy 11.சோம்அல்லது விஸ்வம் தையல்
yyy 111.மீன் முள்ளுத் தையல்

**12. நீர் வட்டச் செயற்பாட்டை காட்டும் சரியான விடை?**


(1).
(11).
(111).

**13.**  **இவ்வாறு கால் குழம்பு காணப்படும் மிருகம்?**
(1). ஆடு
(11). குதிரை
(111). பூனை

**14. விசர் நாய் கடிப்பதால் ஏற்படும் நோய்?**
(1). நீர் வெறுப்பு நோய்
(11). சாள்ஸ் நோய்
(111). மார் படைப்பு

**15. இவ் உயிரினம் தாவும் போது உடலை சமப்படுத்தும் உறுப்பு?**

(1). தலை
(11). உடல்
(111). வால்

**16. உலகின் மிகப் பெரிய கப்பலின் பெயர்?**
(1). டைற்றானிக்
(11). குயின் மேரி- 2
(111). பிரான்ஸ்- x

**17. குமார் கீழ் கண்டவாறு பரிசோதனை ஒன்றைச் செய்தான்.**




**இதில் முளைத் துளிர் வரக்கூடிய விதை?**
(1). A (11). B (111). C

**18. பின்வரும் குறியீடு குறிப்பது?**



(1). நீர் வழங்கல் தடை
(11). நீர் இல்லை
(111). நீர் அதிகளவு வராது

**19. ஒரு முழுப் போத்தல் கொள்ளும் நீரின் அளவு?**
(1). 750l
(11). 750ml
(111). 750mg

**20. இலங்கையில் முதன் முதலில் அமைக்கப் பட்ட நீர் மின் உற்பத்தி நிலையம்?**
(1). லக்சபானா
(11). கொத்மலை
(111). களனி திஸ்ஸ

### விடைகள்

1. (11)
2. (1)
3. (11)
4. (111)
5. (1)
6. (11)
7. (111)
8. (111)
9. (11)
10.(111)
11. (111)
12. (11)
13. (11)
14. (1)
15. (111)
16. (11)
17. (11)
18. (1)
19. (11)
20. (1)

ச. ஜெயாகரன்
பழுகாமம்.

# ஒளித் தொகுப்பு

**1. சூரியன் ஒளியுள்ள போது தாவரங்களின் பச்சையப் பகுதிகளில் காபனீரொட்சைட்டையும் நீரையும் கொண்டு தாவரங்கள் உணவைத் தயாரித்தல் ஒளித் தொகுப்பு எனப்படும்.**
ஆகவே ஒளித்தொகுப்பின் காரணியாவன
* .சூரிய ஒளி, பச்சையம், காபனீரொட்சைட்டு, நீர் என்பனவாகும்.

இவற்றுள்
அகக்காரணிகள்
பச்சையம், நீர்
புறக்காரணிகள்
காபனீரொட்சைட் சூரியஒளி

**எனவே தாவரங்கள் உணவைத் தயாரிப்பதற்குத் தேவையான மூலப் பொருட்கள்**
காபனீரொட்சைட், நீர்
சூரிய ஒளி- சக்தி

**பச்சையம் தயாரிக்கப்படும் இடம்**
விளைபொருள்- குளுக்கோசு($C_6H_{12}O_6$)
பக்க விளைபொருள்- ஒட்சிசன்

**11. ஒளித் தொகுப்பு நடைபெறும் முக்கிய இடம் இலையாகும்.** பச்சை நிறத் தண்டுகளிலும் உணவு தயாரிக்கப் படுகிறது. ஒளித் தொகுப்பு பரிசோதனை செய்யும் போது கவனிக்க வேண்டியவை:-
* .செழிப்பாக வளர்ந்த சட்டித் தாவரம் ஒன்றைத் தெரிவு செய்யவும்.
* .இச் சட்டித் தாவரத்தை இருட்டறையில் இரண்டு மூன்று நாட்களுக்கு வைக்க வேண்டும்.
* .அவ்வாறு வைக்கப்படும் போது இலையில் தயாரிக்கப்பட்டிருந்த உணவு மற்றைய பகுதிகளுக்குக் கடத்தப்படுகிறது.
* .பரிசோதனைக்கு முன் இலைகளில் ஒன்றைக் கொய்து கொதி நீரில் அவிக்கவும். அப்போது இலையில் உள்ள கலங்கள் இறக்கின்றன.
* .பின்னர் 70வீதம் செறிவான அற்ககோலை இந் நீரினுள் சேர்த்து வெப்பமேற்றவும்.
* .இவ்வாறு வெப்பமேற்றப்படும் போது இலையில் உள்ள பச்சையம் கரைந்து அகற்றப்படுகின்றது.
* .பின்னர் அயடினை சேர்க்கவும். மாப்பொருள் இருப்பின் நீல நிறமாகும் ஆனால் இருட்டறையில் வைக்கப்பட்ட இலைகளில் நீல நிறம் தோன்றமாட்டாது.

அ. சுபாஜினி
தரம்-11
மட்/ களுதாவளை ம.வி

# விஞ்ஞான விளக்கம்

**01. வாழை பயிரிடுவோர் நீல நிறப் பொலித்தீன் தாளினால் வாழைக் குலையை மூடிவைப்பர்.**

நீலநிறப் பொலித்தீன் தாள் வெள்ளொளியிலுள்ள நீல நிறத்தை மாத்திரம் தனக்கூடாகச் செல்லவிடும். பச்சையம் நீல நிற ஒளியை நன்கு உறிஞ்சும். எனவே கூடுதலாக ஒளித் தொகுப்பு நடைபெறுவதால் பெரிய பழங்களைப் பெறலாம்.

**02. நீர் யானைகள் தரையில் நடமாடுவதை விட நீரில் வாழ்வதை விரும்புகின்றன.**


நீர் யானைகள் அதிக நிறையுடையன. தரையில் அவை தமது நிறையைத் தாங்கிக் கொள்ள கஷ்டமுறும். நீரில் நீர் யானையின் மீது நீரினால் ஏற்படும் மேலுதைப்பு காரணமாக அவை குறைந்த நிறையையே உணரும்.

**03. தற்காலச் சமையல்களில் நுண்ணலைகள் (MICRO WAVES) பயன்படுத்தப்படுகின்றன.**

நுண்ணங்கிகளினால் பிறப்பிக்கப்படும் வெப்பத்தால் உணவு வேக வைக்கப்படும். இம்முறையால் குறைந்த நேரத்தில் குறைந்த போசனை இழப்புடனும், அதிக வினைத் திறனுடனும், மிகவும் சுத்தமாகவும் உணவைப் பதப்படுத்தலாம்.

ந.யசோதா
தரம்- 11
மட்/ கன்னன்குடா ம.வி.

## சிறுகதை




காளிகோயில் வாசலில் காத்திருந்தாள் இந்து. சாயங்காலச் சூரியன் மேற்குத் திசையில் ஓய்வெடுக்க மறைந்து கொண்டிருந்தான்.

இந்துவுக்கு நிமிடங்கள் யுகங்களாக கடந்து கொண்டிருந்தன. எப்போது ரமேஷ் வருவான் என்று மனசு படபடத்துக் கொண்டிருந்தது.

நேற்று ரமேஷ் பேசியது மனதிற்குள் நிழலாடியது.

“இந்து ..... எனக்கு எங்கப்பா கல்யாண ஏற்பாடு பண்ணிட்டாரு. அவரோட பிசினஸ் பாட்னர் சிவசுந்தரத்தோட பொண்ணை எனக்குப் பேசி முடிச்சிட்டாரு. அடுத்தவாரம் எனக்குக் கல்யாணம். நாம்ம காதல் விவகாரம் அப்பாவுக்குத் தெரிஞ்சதால இந்த அவசர முடிவு.”

“ரமேஷ்..... இப்ப என்ன பண்ணுறது.....”

“இந்து.... கவலைப் படாதே. எத்தனை தடங்கல் வந்தாலும் நம்ம காதலை யாராலும் அழிக்க முடியாது. நம்ம காதலுக்கு ஆயுள் கெட்டி. நாளைக்குச் சாயங்காலம் நீயும் நானும் கொழும்புக்குப் போறோம். அங்கே நம்ம கல்யாணம். இதுக்கு என்னோட நண்பன் சுரேஷ் உதவியாக இருப்பான். சுரேஷ் கொழும்பில் ஒரு பெரிய கம்பனியில மனேஜர்”

“ரமேஷ் .... எப்படி ரமேஷ்.....? எனக்கு ரொம்ப பயமா இருக்கு. உங்க அப்பா பெரிய பிஸினஸ் மேன். அவருக்கு இந்த விசயம் தெரிஞ்சா... அவ்வளவுதான்.”

“இங்க பார் இந்து. காதும் காதும் வெச்ச மாதிரி காரியத்தை முடிக்கிறோம்..... யாருக்கும் தெரியாது. நீ நாளைக்கு கோயிலுக்கு வாற மாதிரி வந்திரு. காளி கோவில் வாசலில் சரியா ஆறரை மணிக்கு தயாரா இரு... இந்து கையில எதுவும் எடுத்துட்டுவர வேண்டாம். கட்டின சாறியோட வந்தாப் போதும்.”

‘ரமேஷ்... என்னைக் கைவிட்டுவிட மாட்டீங்களே...? நீங்க இல்லாம என்னால உயிர் வாழ முடியாது.’

“என்ன இந்து இது? அசடு மாதிரி அழுதுக்கிட்டு இங்க பார். நீ இல்லாத வாழ்க்கையை என்னால கற்பனை கூட செஞ்சு பார்க்க முடியலே. நீ நாளைக்கு கோவில் வாசலிலே காத்திரு. ஓ.கே... பை...”

மணி ஆறரை ஆகிவிட்டிருந்தது. ரமேஷ் இன்னும் காணோம். இந்து பொறுமை இழந்து போனாள்.

மணி ஆறே முக்காலை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்துவின் மனதுக்குள் ஒருவித பய உணர்வு தலை தூக்க ஆரம்பித்து விட்டது.

“என்ன இந்து இங்க நின்னுக்கிட்டிருக்கே..?”

திடுக்கிட்டு இந்து நிமிர்ந்தாள். இந்துவின் பக்கத்து வீட்டுப் பெண் நின்று கொண்டிருந்தாள்.

“அ... அக்கா.... சாமி கும்பிட வந்தேன்... என்னோட பிரண்ட் அர்ச்சனா இல்லே... அவள் வர்றேன்னு சொன்னாள். அவளுக்காக வெயிட் பண்ணிட்டு இருக்கிறேன்.”

இந்து ஒரு வழியாகப் பதில் சொல்லிச் சமாளித்தாள்.

“ஓ... அப்படியா? சரி வீட்டுக்குப்போறன்...” என்று கூறி விட்டு அந்தப் பெண் சென்றாள்.

இந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டாள். மனதிற்குள் ரமேஷைத் திட்டினாள். அவள் சிவந்த முகம் கோபத்தால் மேலும் சிகப்பாகிக் கொண்டிருந்த நேரத்தில் ரமேஷ் வந்தான்.

“என்ன ரமேஷ் இது இப்படியா லேட்டா வர்றது...?” இந்து கோபத்தில் வெடித்தாள்.

“ஸாரி...ஸாரி... இந்து... கிளம்புற நேரத்தில் ஒரு சிக்கல். எப்படியோ தப்பிச்சு வந்திட்டேன்.”

“நான் ரொம்ப பயந்து போயிட்டேன் தெரியுமா...?”

“சரி வா... போகலாம்...”

நடந்தார்கள்.

“இந்து.... ரெயில்டிக்கெட் வாங்கியாச்சு. பணத்துக்குப் பிரச்சினை இல்லே... ஏ.டி.எம். கார்டு இருக்கு. அப்புறம் வேலைக்குப் பிரச்சினை இல்லே. சுரேஸின் கம்பெனியில வேலை காலியா இருக்கு...”

“யப்பா... எனக்கு எவ்வளவு சந்தோஷமா இருக்குது தெரியுதுங்களா...?” என்றாள் இந்து மகிழ்ச்சி நிறைந்த குரலில்.

ரெயில் நிலையத்தை அடைந்தார்கள்.

“ரமேஷ்.... ரெயில் எத்தனை மணிக்கு புறப்படும்...” இந்து கேட்டாள்.

“ஏழே காலுக்கு... இன்னும் பதினைந்து நிமிசங்கள் இருக்கு....”

அப்போது ரமேஷின் செல்போன் ஒலித்தது. செல்போனில் எண்களைப் பார்த்தான்.

“மைகாட்...” என்றான்.

“என்னங்க...?” என்றாள்.

“வீட்டில் இருந்து போன்...!”

“ஏதாவது பேசி சமாளியுங்க...”

“ஹலோ..” என்றான், ரமேஷ்.

செல்போனில் இருந்து வந்த

**முனையூர் யோகராஜா**

செய்தியைக் கேட்ட ரமேஷின் முகம் மாறியது. கண்களில் அதிர்ச்சி படர உறைந்து போய் நின்றான்.

இந்து அவனைத் தொட்டாள்.

“என்னாச்சுங்க..?” என்று கேட்டாள்.

“இந்து...என்னத்தைச் சொல்லிறது....? அப்பாவுக்கு ஹார்ட் அட்டாக்...”

“மைகாட்...” அலறினாள் இந்து.

“இந்து.... ரொம்ப சீரியஸான நிலமையில இருக்கிறாராம். எந்த ஒரு அதிர்ச்சியான செய்தியையும் தாங்கிக் கக்கூடிய நிலையில அவர் இல்லையாம்.”

“இப்ப..இப்ப என்ன செய்யறதுங்க...?”

“எனக்கு ஒண்ணும் புரியலே இந்து...”

இந்து முடிவெடுத்தாள். அவனைத் தெளிவாகப் பார்த்தாள்.

“ரமேஷ் நீங்க உடனே வீட்டுக்கு கிளம்புங்க...’ என்றாள்.

“என்ன இந்து சொல்றே...?”

ரமேஷ் அதிர்ச்சியோடு கேட்டான்.

“ரமேஷ்... உங்க அப்பாவோட உயிர் முக்கியம். இந்த நேரத்தில நீங்க அவர் பக்கத்தில இருக்கணும்.உங்க உதவி தேவை.”

“இந்து... நாளைக்கு நாம கொழும்பில் இருக்கணும்...”

“அது தேவையில்லே. நீங்க இப்ப கிளம்புங்க’ என்றாள் அழுத்தமாக.

“அப்ப நம்ம காதல்...?”

“அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தா பார்க்கலாம். இப்ப நீங்க உங்கட அப்பா சொல்ற பொண்ணையே கல்யாணம் பண்ணிக்குங்க.”

“இந்து...”

“ரமேஷ்... எதுவும் பேச வேண்டாம். நான் முவெடுத்துட்டேன். நீங்க உங்க வீட்டுக்குப் போங்க. நான் எங்க வீட்டுக்குப் போறேன். காதலை விட ஒரு உயிர் தான் முக்கியம்” என்று சொல்லி விட்டு இந்து வேகமாக நடக்க ஆரம்பித்தாள். அவள் திரும்பிக் கூட பார்க்கவில்லை.

ரமேஷ் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். அதே இடத்தில் நின்னு கொண்டிருந்தான். இந்துவிடம் சொன்ன பொய்யை நினைத்தபோது அவன் இதயம் வலித்தது. ஆறு மணிக்கு நடந்த சம்பவத்தை நினைத்துக் கொண்டான்.

ஆறு மணிக்கு வீட்டை விட்டு வெளியே வந்த ரமேஷை வாசலில் ஒரு குரல் அழைத்தது.

“ரமேஷ்...”

ரமேஷ் திரும்பினான்.

இந்துவின் அப்பா கோபாலன் நின்னு கொண்டிருந்தார். ரமேஷ் அதிர்ச்சியோடு அவரைப் பார்த்தான்.

“ரமேஷ்... உங்க கூட கொஞ்சம் தனியா பேசணும். போய்க்கிட்டே பேசலாம் வாங்க...” என்றார். —

ரமேஷ் குழப்பத்தோடு அவரைப் பின் தொடர்ந்தான்.

“ரமேஷ்... நீங்களும், இந்துவும் ஊரை விட்டு ஓடிப் போற விசயம் யாருக்கும் தெரியாதுன்னு நினைச்சுக்கிட்டு இருக்கறீங்க. ஆனா எனக்குத் தெரியும்...”

“சார்...” என்ற ரமேஷ் வார்த்தைகள் வெளிவராமல் தவித்தான்.

“என்ன ரமேஷ்...? அதிர்ச்சியா இருக்கா...?” அவனைப் பார்த்து விட்டு தொடர்ந்தார்.

“ரமேஷ்... இந்துவுக்குப் பின்னால மூணு பெண்ணுங்க இருக்கிறாங்க. இந்து ஓடிப்போயிட்டா அப்படின்னு தெரிஞ்சா அவளோட தங்கைகளுக்கு கல்யாணமே நடக்காமல் போயிடும். அவங்களோட எதிர்காலம் பாதிக்கும்...” என்று சொல்லி விட்டு அவனைப் பார்த்தார்.

“ரமேஷ்... நாங்க ஏழைகள்... நீங்க பணக்காரர். நாங்க மானத்தோட வாழ விரும்பறோம். இந்து ஓடிப்போயிட்டா, அந்த அவமானத்தில நாங்க வாழ விரும்பமாட்டோம். தற்கொலை செஞ்சுக்குவோம்.

தற்கொலையா?காதலா? முடிவு பண்ணிக்குங்க...”

கோபாலன் ரமேஷை நேருக்கு நேர் பார்த்தார்.

ரமேஷ் யோசித்தான். பிறகு நிதானமாகப் பேசினான்.

“சார்... இந்து... உங்க வீட்டுக்கு வருவாள்... வருவாள்... கவலைப்படாமல் போங்க..”

கோபாலன் முகம் மலர்ந்தார்.

“நன்றி...’ என்று சொல்லி விட்டு போனார்.

ரமேஷ் நினைவில் இருந்து மீண்டான். நடக்க ஆரம்பித்தான். தோள் மேல் யாரோ கை வைக்க திரும்பினான். அவனுடைய அப்பா நின்று கொண்டிருந்தார்.

“ரமேஷ்... எல்லாத்தையும் பார்த்துக்கிட்டு இருந்தேன். அந்த இந்து காதலை விட ஒரு மனித உயிர் தான் முக்கியம்னு சொல்லிட்டுப் போனாளே... இப்படிப்பட்ட பொண்ணுதான் எனக்கு மருமகளா வேணும். இந்துவுக்கும், உனக்கும் அடுத்த வாரம் கல்யாணம்... நாளைக்கே இந்து வீட்டுக்குப் போய் முறைப்படி பொண்ணு கேட்கலாம்...” என்றார்.

“அப்பா...” என்றான் நெகிழ்ச்சியுடன்.

## நகைச்சுவை முற்றம்

தொகுப்பு- வே.தமருகாறொபட், கல்லடி, வேலூர்

1. **ரவி** :- “நீ கோவப்படும் போது இரண்டு மடங்கு அழகுன்னு என் மனைவியிடம் சொன்னேன் ”

**புவி** :- “அப்புறம்”

**ரவி** :- “இப்ப நாலு மடங்கு அழகாய் இருக்கா”



2. **கணவன்** :- “யாருக்கோ விருந்து போல சாப்பாடெல்லாம் பிரமாதமாய் சமைக்கிறாயே உன் சொந்தக்காரங்க யாராச்சும் விருந்துக்கு வாராங்களா?”

**மனைவி** :- “என் சொந்தக் காரங்க இல்ல உங்க சொந்தக் காரங்கதான் வாராங்க”

**கணவன்** :- “என் சொந்தக்காரங்களா யாரு?”

**மனைவி** :- “உங்க மாமாவும் மாமியுந்தான்”

3. **பெண்மணி** :- “டாக்டர் என் கணவருக்கு உடம்புல எதிர்ப்பு சக்தி குறைஞ்சிட்டுச் சோன்னு ரொம்பக் கவலையா இருக்கு..........”

**டாக்டர்** :- “எப்படிச் சொலிறீங்க?”

**பெண்மணி** :- முன்னெல்லாம் சட்டி, பானைகளை அவர்மேலே விட்டெறிஞ்சாக் கூட பேசாம இருப்பார்........இப்ப ஒரு சின்னக் கரண்டியை எறிஞ்சாலும் பாவம் வலி பொறுக்க முடியாமா துடிக்கிறார்!”



4. **பெண்ணின் தந்தை** :- “பெண் பார்க்க வந்திருக்கும் மாப்பிள்ளை பயங்கர ரேஸ் பைத்தியம் போலிருக்கு.....”

**தாய்** :- “எப்படிக் கண்டுபிடிச்சீங்க?”

**தந்தை** :- “பெண்ணை ‘பைனாகுலர்’ வெச்சுப் பார்க்கிறாரே!”

# ஆடித்தீ

- நாவல் -

(10)

- ஓ.கே. குணநாதன் -

நாட்கள் பல நகர்ந்தன. வீட்டிலேயே முடங்கிக் கிடந்தான் மகேந்திரன். அதனால் தானே சமைத்து தானே சாப்பிடப் பழகிக் கொண்டான் . நித்தியா அடிக்கடி வந்து சந்தித்துச் செல்வது அவனுக்கு ஆறுதலாக இருந்தது. கள்ளத்தனமாக அவனைச் சந்திப்பது அவளுக்கும் ஒருவித இன்பமாக இருந்தது.

இருவரிடையேயும் ஏற்பட்ட பாசப்பசை நாட்கள் ஆக ஆக ஒருவித அன்பாக மலர்ந்து காதலாகப் பரிணமித்தது.

நீயின்றி நானில்லை......... நானின்றி நீயில்லை என்ற நிலை உருவாகியது. இருவர் இதயங்களிலும் நிரம்பிய அன்புக் காதலை இருவருமே வெளிப்படுத்தாது தத்தமது இதயத்திற்குள்ளேயே பூட்டி வைத்து வெளியிட நாதியற்றுச் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்துக் கிடந்தனர்.

சில சமயங்களில்.... சந்தர்ப்பம் கிடைத்தபோது அவன் காதலை எடுத்தியம்ப அவனுடைய மென்னுதடுகள் துடிக்கும். அச்சத்தினால் வார்த்தைகள் மழுங்கடிக்கப்பட்டுவிடும்.

இன்று வெள்ளிக்கிழமை.

நித்தியாவினுடைய பெற்றோர்கள் கோயிலுக்குப் போயிருப்பார்கள்.இன்று நிச்சயமாக நித்தியா என்னைத் தேடி வருவாள். எப்படியாவது காதலை வெளிப்படுத்தி விட வேண்டும் என நினைத்தான்.

எப்படி இதை வெளிப்படுத்தலாம்.........?

அவனின் ஊமை உள்ளம் அங்கலாய்த்தது.

இறுதியில்.........

ஒரு முடிவுக்கு வந்தவனாக. நீலப் பேப்பரில் சிவப்பு மையினால் காதல் கடிதம் ஒன்றை எழுதினான்.

அன்பே நித்தியா,
இதை எழுதுவதையிட்டு
வேதனையடையாதே!

முதலில் என்னை மன்னித்து விடு!
உன்னை என் இதயக் கோயிலிலே
பூசைக்குரிய தேவியாக்கி விட்டேன்.
காதல் என்ற மலர் ஒரேயொரு
முறைதான் மலரும்....
அது-
உன்னோடுதான்!
என் காதலை எடுத்தியம்ப நாவில்
வார்த்தைகளே வரவில்லை.
எனவேதான் -
இதை மடலாக வரைகிறேன்.
இப்படிக்கு,
நெஞ்சக் கோயிலில் வாழும்.........
மகேந்திரன்.

கடிதத்தை நான்காக மடித்தான். மேசையிலிருந்த ''பாரதியின் கவிதைகள்''புத்தகத்தை எடுத்தான். அதை விரித்தான்..........பார்த்தான்...............

''வீணையடி நீயெனக்கு மேவும் விரல் நானுனக்கு..........''

என்ற கவிதையிருந்தது.

அப் பக்கத்தில் கடிதத்தை வைத்து மூடினான். மீண்டும் புத்தகத்தை மேசையின் ஒரு மூலையிலே வைத்தான்.

இனி..........

நித்தியாவின் வரவை எதிர்பார்த்து வழி மேல் விழிவைத்துக் காத்திருந்தான்.

ஆனால்.... அவள் வரவேயில்லை.

மீண்டும் பேப்பர் ஒன்றை எடுத்துக் கவிதை ஒன்றை எழுத ஆரம்பித்தான்.

எல்லாவற்றையும் மறந்து
விடலாம்,
இந்தப் பாழும் உயிரை
அநாதரவாக இழப்பதை வெறுத்து
ஒரு கணப்பொறியில் தெறித்த
நம்பிக்கையோடு
காலி வீதியில்
திசைகளும், திசைகளோடு இதயமும்
குலுங்க விரைந்த போது,
கவிழ்க்கப்பட்டு எரிந்த காரில்
வெளியே தெரிந்த தொடை எலும்பை,
ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில்
எங்கோ ஒரு புள்ளியில் நிலைத்து
இறுகிப் போன ஒரு விழியை
விழியே இல்லாமல், விழியின்
குழிக்குள்
உறைந்த உலர்ந்த குருதியை,
''டிக்மண்ட்ஸ்''ரோட்டில்
தலைக் கறுப்புக்களுக்குப் பதில்
இரத்தச் சிகப்பில் பிளந்து கிடந்த
ஆறு மனிதர்களை,
தீயில் கருகத் தவறிய
ஒரு சேலைத் துண்டை




துணையிழந்து,
மணிக் கூடும் இல்லாமல்
தனித்துப் போய்க் கிடந்த ஒரு இடது
கையை, எரிந்து கொண்டிருக்கும்
வீட்டிலிருந்து
தொட்டில் ஒன்றைச்
சுமக்க முடியாமல் சுமந்து போன
ஒரு சிங்களக் கற்பிணிப் பெண்ணை
எல்லாவற்றையும், எல்லாவற்றையுமே
மறந்து விடலாம்.
ஆனால்-
உன் குழந்தைகளை ஒளித்து வைத்த
தேயிலைச் செடிகளின் மேல்
முகில்களும் இறங்கி மறைந்த
அந்தப் பின் மாலையில்
நீண்ட நாட்களுக்குப் பிறகு கிடைத்த
கொஞ்ச அரிசியைப் பானையிலிட்டுச்
சோறு பொங்கும் என்று
ஒளிந்தபடி காத்திருந்த போது
பிடுங்கி எறியப்பட்ட என் பெண்ணே
உடைந்த பானையையும்,
நிலத்தில் சிதறி
உலர்ந்த சோற்றையும்
நான் எப்படி மறக்க.........?
(யமன்-சேரன்)

கவிதையை எழுதி முடிக்கவும்,

''எழுத்தாளரே! என்ன பலமான எழுத்தாகக் கிடக்குது........! ''

என்றவாறு வந்தாள் நித்தியா.

''சும்மா இருக்க அலுப்பாகக் கிடந்தது. அதுதான்... கவிதை ஒன்றை எழுதிக் கொண்டிருந்தன்.........''

என்று கூறிக் கவிதையை அவளிடம் கொடுத்தான்.

''இது எப்படியிருக்கென்று கொஞ்சம் சொல்லன்...''

''எனக்குக் கவிதையென்றால் நல்லாப் பிடிக்குமே!தாங்க பாப்பம்.....''

வாங்கிப் படித்தாள்.

''மிகவும் நல்லாய் எழுதியிருக்கிறீங்களே!''

என்று கூறிக் கொண்டு கவிதையைக் கொடுத்தாள்.

அப்பொழுது அவளுடைய கண்கள் மேசையின் மேலேயிருந்த 'பாரதியின் கவிதைகள்' நூலில் பதிந்தது.

''என்ன நித்தியா அப்படியே அந்தப் புத்தகத்தையே பார்த்துக் கொண்டிருக்கின்றாய்....... தேவையெண்டால் அந்தப் புத்தகத்தைக் கொண்டுபோய்ப் படி.......''

புத்தகத்தை அவளிடம் நீட்டினான்.

கைகள் மெதுவாக நடுங்கின நாவில் உமிழ்நீர் வற்றிப் போனது. புத்தகத்தை வாங்கிக் கொண்டவள்,

''மகேந்திரன், இண்டைக்குச் சுணங்கேலாது. அப்பாவங்க நேரத்தோட வந்திடுவாங்க.... நான் போயிற்று நாளைக்குக் காலையில உங்களைச் சந்திக்கிறன்..''

என்று கூறிச் சென்றாள்.

அவனும் அவள் புத்தகத்தைத் திறந்து பார்த்து விடுவாளோ என்ற பயத்தில் 'ஆ.....' என்று தலையசைத்தான்.

மறுநாட் காலை.........

நித்தியாவின் வருகையை எதிர் பார்த்துக் காத்திருந்தான்.

கடிதத்தைப் படித்திருப்பாளோ....! என்னைத் தவறாகப் பரிந்திருப்பாளோ...!அல்லது பதில் எழுதியிருப்பாளோ...!என்றவாறு அவனுடைய மனம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தது.

கையில் புத்தகத்தடன் மெல்லியதான புன்னகையுடன் வந்தாள்.

வந்ததும் வராததுமாக புத்தகத்தை அவனிடம் கொடுத்து விட்டு,

''நல்ல கவிதைகள் ''

என்று கூறிய வண்ணம் நகர்ந்தாள்.

அவள் மறைந்து ஒரு நொடி கூட ஆகியிருக்காது. அப் புத்தகத்தை உடனே திறந்து பார்க்க வேண்டும் போல இருந்தது.

நிட்சயமாக உள்ளுக்குள்ளே பதில் கடிதம் எழுதி வைத்திருப்பாள் என்பதை நினைக்கையில் உடலெல்லாம் ஒருவித இன்பம் மின்னெனப் பரவியது.... நாவரண்டு எச்சிலே தொலைந்து போனது...நெஞ்சம் 'படக்படக்'கென்று அடித்துக் கொண்டது. உடல் மெதுவாக நடுங்கிக் கொண்டிருந்தது.

எச்சிலைத் தேடிப் பிடித்து மென்று விழுங்கிக் கொண்டு, புத்தகத்தைப் புரட்டினான்.

அங்கே-

அதே பக்கத்தில் கடிதம் இருந்தது. பிரித்துப் படித்தான். அவன் எழுதிய அதே கடிதமே !

பெரும் சுவாசத்தை உதிர்த்த வண்ணம், அப்படியே புத்தகத்தை மூடி, மேசையின் மூலையொன்றிலே போட்டான்.

புத்தகத்தை மேசையில் மூலையில் போட்டு விட்டு நிமிர்ந்தான் மீண்டும் நித்தியா திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

''என்ன நித்தியா....?''

பார்வையால் கேட்டான்.

''அந்தப் புத்தகத்தைக் கொஞ்சம் தாங்க .....திருப்பி ஒருதரம் பார்த்துப் போட்டு நாளைக்குத் தாரன்.....''

புத்தகத்தை அவளிடம் கொடுத்து,

''வீணையடி நீயெனக்கு.......என்ற கவித நல்ல கவித கட்டாயம் ஒரதரம் பாருங்க........''

என்றான் இரட்டை அர்த்தத்துடன்.

மறுநாட் காலை மீண்டும் வந்தாள்.

கையில் புத்தகம் இருந்தது. புத்தகத்தைக் கொடுத்து விட்டுப் போவதற்கு ஆயத்தமானாள்.

''நித்தியா, வீணையடி நீயெனக்கு......என்ற கவிதை எப்படி?''

அவன் கேட்டான்.

''வீணையடி நீயெனக்கு என்ற கவிதையும் பார்த்தன். மேவும் விரல் நானுனக்கு என்ற கடிதத்தையும் பார்த்தன்...........''

அவள் சொன்னாள்.

அவனுக்கோ அவனையும் அறியாமல் நெஞ்சம் படக்படக்கென வேகமாக அடித்தது. வாய் மௌனியாகியது.

மீண்டும் அவளே தொடர்ந்தாள்.

''மகேந்திரன், நான் நீங்க எழுதின உங்கட கடிதத்த நேற்றுப் பார்த்தன். ஆனா.............உங்கட கடிதத்திற்குப் பதில் எழுதல்ல. அக் கடிதத்த அப்படியே வைத்திருக்கன் தமிழனுடைய வாழ்க்கையே நிலையில்லாதது. இன்றைக்கு இருக்கிற நாம நாளைக்கு இருக்கிறது என்பது நிச்சயமல்ல. அதுக்காக நான் உங்கள விரும்பல்ல என்று சொல்லல்ல. உங்கள மனதாரக் காதலிக்கிறன். எனது நெஞ்சக் கோயிலில குடியிருக்கிற தெய்வம் நீங்கதான். உங்களுடைய காதல் ஸ்பரிசத்தை பூரணமாக உணருறன். இப்ப இருக்கிற நிலையில, காதல் கடிதம் எழுதவேண்டிய அவசியமில்ல. இப்ப நேரடியாகவே சோஷியலான காதலர்களாகப் பழகுவம். தேவையேற்பட்டால் நிச்சயமாக நானே கடிதம் எழுதுவன். ''

அவள் உண்மையிலேயே ஒரு விசித்திரமான பெண்தான். ஐந்தாம் வகுப்புப் படிக்கும் போதே காதல் கடிதம் எழுதி, காதல் ஸ்பரிசத்தை உணரும் இந்தக் காலத்திலேயா இப்படியொரு பெண்!

பாரதி உயிருடன் இருந்திருந்தால், நிட்சயமாக இருபதாம் நூற்றாண்டுக்குரிய புதுமைப் பெண்ணாகவே அவளை மதித்திருப்பார்!

அவள் வீட்டுக்குச் சென்று விட்டாள்.

அவள் மறைந்ததும் அவனுக்கு சோதனை ஒன்று நடந்தது.

தொடரும்......

# புல்லுமலை முதல் புனாணை வரை....

## தென் தமிழீழ படுகொலைகளின் இரத்தச் சுவடுகள்

எமது தாயகத்தைப் பொறுத்தவரை வட தமிழீழத்தில் நடந்த இன அழிப்புகள் கண்



மூடித்தனமான இலக்கில்லாத் தாக்குதல்களாகவே காணப்பட்டிருந்தன. அதாவது விமானப்படை விமானம், கடற்படையினரின் பீரங்கித் தாக்குதல்கள் மூலமே அதிகளவிலான அப்பாவிப் பொதுமக்களைப் பலியெடுத்தனர். ஆனால் தென் தமிழீழப் படுகொலையைப் பொறுத்தவரை நன்கு திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கையாகவே நேரடியாகக் கையாண்டவைகளாகும்.

போரினைச் சாதகமாகக் கொண்டு பேரினவாத சக்திகள் இயற்கை எழில் கொஞ்சும் வளம் மிகுந்த தமிழர் தாயகத்தை தன் வசப்படுத்தி அங்கு தமிழர் என்ற அடையாளமே இல்லாமல் செய்வதற்கு ஆடிய கோரத்தாண்டவங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. நினைத்துப் பார்க்கவே நெஞ்சம் உருகுகின்றது. அந்தவகையில் புல்லுமலை இன அழிப்பைப் பொறுத்தரை இது ஒருஎல்லைக் கிராமமாகக் காணப்பட்டதனால் நிலப்பறிப்பின் நிமித்தமே அத்தனை தமிழ் உறவுகளும் காலத்திற்குக் காலம் கொன்று குவிக்கப்பட்டனர்.

1990ம் ஆண்டு ஆடிமாதம் 09ந் திகதி இங்கு நடைபெற்ற மற்றுமொரு பயங்கரச் சம்பவத்தினை நேரில் கண்டவர்களில் ஒருவரான புல்லுமலையைச் சேர்ந்த பாக்கியராசா என்ற முதியவர் இப்படிக் கூறுகிறார்.

''அன்று திங்கட்கிழமை திடீரென லொறிகள், மெஷின்கள் போன்ற வாகனங்களில் கும்பக் கும்பலாக கிராமத்தினுள் புகுந்த சிங்க இராணுவத்தினர் கிராமத்தை வளைத்து ''ரவுண்டப்'' பண்ணினானுகள். ஏற்கனவே இவர்களின் அட்டுளியங்களை அறிந்திருந்த பொதுமக்கள் அனைவரும் நாலாபக்கமும் சிதறியோடினர். அப்போது அந்த நாசமாய்ப் போன சிங்கள இராணுவத்தினர் ஓடிய மக்களை நோக்கி கண்மூடித்தனமாகச் சுட்டனர். ஓடியவர்களில் சிலர் ''அம்மா! ஆண்டவா!'' என மரண ஓலத்துடன் சுருண்டு விழுந்தனர்.

இவ்வாறு ஓடியவர்களில் 40பேரைக் கைது செய்தானுகள். பெண்பிள்ளைகளைப் பிடித்து கதறக் கதறக் கற்பழித் தானுகள். ஓடியதனால் கண்ணால் காணமுடியவில்லை. ஆனால் அவர்கள் அலறிய சத்தம் அவர்களாலேயே தாங்க முடியாத அவலச் சத்தமாய் இருந்தன.

நானும் எனது மனைவி பிள்ளைகளைக் கூட்டித்து ஓடினேன். எங்களோடு சேர்ந்து சுமார் நாற்பது ஐம்பது பேர்வரை ஓடினோம் இவ்வாறு ஓடிப்போய் ஒரு காட்டுப் பகுதிக்குள் சென்றதும் அதற்குமேல் ஓட முடியாமல் செத்தால் இவ்விடத்திலே செத்துவிடுவோம் என்று நினைத்து ஒரு காட்டுப் பகுதிக்குள் ஒளித்துக் கொண்டோம். நாங்கள் இருந்த இடத்திலிருந்து கதைத்தால் கேட்கக் கூடிய தூரத்தால ஆமிக்காரனுகள் போய்க் கொண்டிருந்தானுகள். நல்ல வேளை எங்களைக் காணவில்லை. பொழுது மறையும் வரை அந்தக் காட்டுக்குள்ளேயே ஒளித்திருந்தோம். வெடிச்சத்தம் எல்லாம் நிண்ட பின் ஊருக்குள் போனோம்.

போனதும் அங்க என்னத்தப்பார்க்கிற சுமார் ஐம்பது அறுபது பேர்வரை ஆக்கினைப்படு த்தி சுட்டுப் போட்டிருந்தானுகள். பெண்களையெல்லாம் கற்பழித்து விட்டு நிர்வாணமாகச் சுட்டுப் போட்டிருந்தானுகள். பால் குடிக்கும் பச்சிழம் பாலர்களை தூக்கி வீசி சுவரில் அடித்து கொலை செய்திருந்தார்கள். எனது குடும்பத்தில் மூன்று குழந்தைகளை கால் இரண்டையும் பிடித்து இழுத்துக் கிழித்துப் போட்டிருந்தானுகள். இதனைக் கூறும் போது அந்த முதியவர் கையிரண்டையும் தலையில் வைத்து வேதனையுடன் கதறி அழுதார்.

தனது கணவனையும் இரு பிள்ளைகளையும் சிங்கள இராணுவத்திடம் பறிகொடுத்த க. இராசம்மா என்பவர் இவ்வாறு விபரிக்கின்றார். ''ஐந்தாறு வருஷமாக மாறி மாறி எங்கள் கிராமம் மீது சிங்களக் காடையர்களினால் நடாத்தப்பட்ட படுகொலையின் போது எனது கணவனையும் ஒவ்வொரு பிள்ளையுமாய் இரண்டு பிள்ளைகளையும் கொண்டு போய்ச் சுட்டுப் போட்டானுகள் அந்தச் சிங்களப் படுபாதகர்கள்.



எனது பிள்ளைகளைப் பிடிச்சித்துப் போனபோது நானும் பின்னால ஓடினன். அப்போது ஒரு சிங்கள ஆமி ''ஏய் கிட்டவராத சுட்டுப்போடுவன்'' என்று என் முன் துவக்கை நீட்டிக் காட்டினான் நான் கேட்காமல் போனேன். மறுபடியும் துவக்கை நீட்டி அவ்வாறு கூறினான் அந்தப் பஞ்சமாபாதகன். பிள்ளைகளைக் கேம்புக்குள் கொண்டு போனானுகள். நாங்கள் அங்கு போனதும் சொன்னானுகள் ''உங்கள் பிள்ளைகளைப் பிடித்த பெரிய மாத்தையா இன்னும் வரவில்லை போயித்து நாளைக்கு வாருங்கள்'' என்று.

பிறகு நாளைக்குப் போனால் மீண்டும் அதேவார்த்தை தான். அடுத்தநாள் போனோம். சொன்னானுகள் உங்கட பிள்ளைகளை காட்டில கொண்டு விட்டுத்தம் அங்கபோய்ப் பாருங்கள் என்று. நாங்கள் நடுங்கிப் பயந்து பிள்ளைகளுக்கு என்ன நடந்ததோ என்ற எண்ணத்தில் பதறினோம். ஆனால் உடனே காட்டுக்குள் போகவில்லை. இரண்டு நாட்கள் கழித்து தேடிப்போனோம் அங்கபோனா காட்டில நிறையச் சவங்கள் கிடக்குது. தலையில்லாமலும், காலில்லாமலும் கையில்லா மலும் திரும்பும் பக்கமெல்லாம் கிடக்குது யாருடைய பிள்ளைகள் என்று மதிக்க முடியாத மாதிரி ஊதி உருக்குலைந்து காணப்பட்டன. அங்கு மேலும் நிற்கப் பயத்தில அப்படியே வந்து விட்டோம்.

அதன் பின் குளத்திற்கு மீன்பிடிக்கப் போன எனது அடுத்த மகன் ஆறுமுகநாதனையும் சிங்களவன் பிடித்து வெட்டிப்போட்டானுகள். மீன் பிடிக்கப் போன பிள்ளைகளைக் காணவில்லையென தேடிப்போன போது அங்கேயும் கழுத்து, கைகள் வெட்டப்பட்ட நிலையில் சில சவங்கள் கிடந்தன.

எனது மகனின் உடலை அடையாளம் காணமுடியவில்லை. இனி அங்கிருந்த எல்லா உடல்களையும் அடக்கம் பண்ணிவிட்டு வந்துவிட்டோம். இது எங்கள் மனதில் என்றுமே மறக்க முடியாத வடுக்களாய் சிங்கள காடையர்கள் ஏற்படுத்தி விட்டார்கள் என்று கண்ணீர் குளமாகி வழிந்தோட கவலையுடன் கூறினார் அந்த மூதாட்டி.

இவ்வாறு 1983ம் ஆண்டு தொடக்கம் அடியெடுத்து 1990ம் ஆண்டு வரை ஐந்தாறிற்கும் மேற்பட்ட தடவைகள் இக்கிராமத்தினுள்ள அப்பாவிப் பொதுமக்களை விரட்டி விரட்டி வேட்டையாடினார்கள் சுமார் நானுற்றிற்கும் மேற்பட்ட தமிழ் உறவுகள் அப்படியும் இப்படியுமாக கொலை செய்யப்பட்டனர்.

*சுவடுகள் தொடரும்....*

தருவது எம்.யுவராஜ்

---

போட்டியில் பங்குபெற விரும்புவோர் விடைகளை இடமிருந்து வலம், மேலிருந்து கீழ் என வகைப்படுத்தி ஒரு தபாலட்டையில் எழுதிக் கீழே காணப்படும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்பிவைக்கவும். சரியான விடைகளை அனுப்பும் வாசகர்களில் அதிஸ்டசாலிக்கு 100 ரூபா பணப்பரிசும், பாராட்டுப்பெறும் மேலும் 10 பேரின் பெயர் விபரங்கள் அலையிலும் வெளியாகும். விடைகள் வந்து சேரவேண்டிய கடைசித் திகதி 10-02-2004 ஆகும். எங்கே முயற்சி செய்யுங்கள் பார்ப்போம்.

*முகவரி*

**குறுக்கெழுத்துப்போட்டி-30**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை**

## குறுக்கெழுத்துப் போட்டி -30

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | | ■ |
| | ■ | 4 | | ■ | 5 |
| 6 | 7 | | | ■ | |
| 8 | | | ■ | 9 | |
| ■ | | ■ | 10 | | |
| 11 | | 12 | | ■ | |
| | ■ | 13 | | 14 | |
| 15 | | | | | ■ |

### இடமிருந்து வலம்

01. ஒன்றை இன்னொன்றுக்கு ஒப்பிடல் இப்படியழைக்கப்படும்.
04. தெரு
06. கிராமிய நடனமுறைகளில் ஒன்று (குழம்பியுள்ளது)
08. சிறுபற்றை
09. நெல்விளையும் இடம். இறுதி எழுத்தை இழந்து வருகின்றது.
10. சிறு போத்தல்.
11. மகிழ்வூட்டும் நிகழ்வு
13. மிகக்குறுகிய கால அவகாசத்தில் தப்பியவர்களை இதில் தப்பியதாகக் கூறுவர்.
15: துஷ்யந்தனின் காதலி (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. உறுதியான பிடிக்கு இந்தப் பிராணியை ஒப்பிடுவர்
02. விதையாய் வீழ்ந்து எம் மனங்களில் விருட்சமாய் எழுந்து நிற்பவர்கள்.
03. பெறுமானம் மிக்க புத்தகங்களை இது மிகுந்த நூல்கள் எனக் கூறுவர். (குழம்பியுள்ளது)
05. பரம்பரை பரம்பரையாக என்பதற்குப் பயன்படுத்தப்படும் இணைமொழி
07. மலையாளத்தில் பிரபல்யமான நாட்டிய முறையிலொன்று.
09. இதைப் பெறுவதற்காக சிலர் பணத்தைக் கடன் கொடுப்பார்கள் (இறுதி எழுத்தை இழந்து வருகின்றது)
10. சிகரெட்டின் மூலப் பொருளான தாவரம்.
11. தலைமுடியை இவ்வாறும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
12. முட்டாள் (குழம்பியுள்ளது)
14. ஒரு இடத்தில் நிலைத்து நில் என்பதைக் குறிக்கும் வினைச் சொல்லின் வினை அடி (தலைகீழ்)

## குறுக்கெழுத்துப் போட்டி 28ற்கான விடைகள்

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 01. அரசியல் | 01. அர்ப்பணிப்பு |
| 05. இறுங்கு | 02. சிங்காரம் |
| 06. காப்பகம் | 03. பயறு |
| 08. பரம் | 04. இல்லம் |
| 09. (ப)லம் | 07. கம்மல் |
| 11. செம்மணி | 10. அம்பலம் |
| 13. பப்பி | 12. செப்பலி |
| 15. கபடம் | 14. பிடரி |
| 16. கதலி | 15. கதவு |

## பரிசு பெறும் அதிஸ்டசாலி

**இ. தனுஜியா**
**மண்டூர்.**

## பாராட்டுப் பெறும் அதிஸ்டசாலிகள்

01. ஏ. ஜெயப்பிரியா, திருமலைவீதி, வாகரை- 05.

02. கே. சண்முகம், நடுவில் தம்பிவீதி, வந்தாறுமூலை.

03. டன்ஸ்ரன் டிலக்ஷினி சாமல், இலங்கை மாதா ஆலயவீதி, தன்னாமுனை.

04. ஜெ.ஜெயந்தினி, விபுலானந்தக் கல்லூரி, வவுனியா.

05. ரீ. தமிழ்வாணன், பிரதேச செயலகம், ஆரையம்பதி.

06. எஸ். றேகநந்தினி, பாலையடி ஆலய வீதி, காரைதீவு (09).

07. ம. கோகுலராஜ், சிவன்கோவில் வீதி, தம்பிலுவில்- 02.

08. கி. அருட்செல்வி, தம்பலவத்தை, மண்டூர்.

09. ச. விதுர்சன், மட்/ கோட்டமுனை க.வி. மட்டக்களப்பு.

10. எஸ். சுகந்தினி, இல 62, சுகந்தி வாசா, கூளாவடி, மட்டக்களப்பு.

# உலகில் மனித இனம் அழியும் நாள் நெருங்கி வருகிறதா?

சண். தவராஜா

சீனாவில் சார்ஸ் நோய் மீண்டும் பரவி ல்ட்சக்கணக்கான பூனைகள் கொன்றொழிக்கப்பட்டதாக செய்திகள் வெளியாகி அவை மக்கள் மனதை விட்டு அகலுவதற்கு முன்பாகவே தாய்லாந்து, வியட்நாம் ஆகிய நாடுகளில் கோடிக்கணக்கான கோழிகள் ''பறவைக் காய்ச்சல்'' நோயினால் பாதிக்கப்பட்டதால் அழிக்கப்பட்டுள்ளன. சிலவாரங்களின் முன்னர் கனடாவிலும், பிரித்தானியாவிலும் 'மட்கவ்' (MAD COW) எனப்படும் நோய் மாடுகளைப் பீடித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

உண்மையில் உலகில் என்னதான் நடைபெறுகின்றது? 'எய்ட்ஸ்' போன்ற கொடிய நோய்களினால் மனிதன் பாதிப்புக்குள்ளாகி வருவது ஒருபுறமிருக்க, தற்போது விலங்குகளும், பறவைகளும் கூட பாதிப்படையத் தொடங்கியுள்ளன. நோய்கள் மனிதனை நேரடியாக வந்தடைவது ஒருபுறமிருக்க, தற்போது அவன் உண்ணும் உணவினூடாகவும் அது கடத்தப்படும் நிலை உருவாகியுள்ளது.

விலங்குகளும், பறவைகளும் பல்வேறு நோய்க் கிருமிகளைக் காவி வருகின்ற போதிலும் இறைச்சிகளை அவிப்பதனுடாகவோ அன்றி அதீதமாகக் குளிரூட்டப்படுவதன் ஊடாகவோ நோய் அபாயத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இதுவரை இருந்து வந்தது. ஆனால், தற்போது உருவாகியுள்ள நிலையில் பறவைகளையும் மிருகங்களையும் கொன்றொழிப்பதன்னூடாகவே இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக் கூடியதாகவுள்ளது.

இந்து சமயத்தில் கூறுவதைப்போன்று 'கலிகாலம்' முற்றிவிட்டதா? உலகம் அழியப்போகின்றதா? ஏன் இவ்வாறு முன்னெப்போதும் அறியப்படாத நோய்கள் மனிதனை வந்தடைகின்றன?

அல்லது சூழலியலாளர்கள் கூறுவதைப்போன்று இயற்கைக்கு முரணான மனித வாழ்வும், சகல துறைகளிலும் காணப்படும் இரசாயனப் பயன்பாடுகளும், செயற்கையான அணுகு முறைகளுமே இதற்குக் காரணமா?

இறைவனே உயிர்கள் அனைத்தையும் ஆதியில் படைத்தவன் என ஏற்றுக்கொண்டால் 'சார்ஸ்' நோய்க்கு காரணமான கொரோனோ வைரஸ் (Coronovirus) ஏற்கனவே படைக்கப்பட்டு இன்றுவரை கண்ணுக்குத் தெரியாமல் எங்காவது மறைந்திருந்ததா? அன்றி பரிணாம வளர்ச்சிக் கோட்பாடுகளின் பிரகாரம் இன்றும்கூட புதிய உயிரினங்கள் உருவாகி வருகின்றனவா? அவ்வாறாயின், பரிணாம வளர்ச்சியின் உச்சியில் இன்றுவரை உயர்ந்த இடத்தில் உள்ள 'சிறப்படைந்த விலங்கான' மனிதனை விடவும் சிறப்பான விலங்கு ஒன்று எதிர்காலத்தில் உருவாகும் வாய்ப்பு உள்ளதா?


இவை ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய விடயங்கள். ஆனால், மனிதனைப் பாதிக்கும் இத்தகைய கொடிய நோய்களில் கலக்கும் அரசியலையும் நாம் அவதானிக்க வேண்டும்.

2002ம் ஆண்டின் பிற்பகுதியில் சீனாவில் முதன் முதலாக சார்ஸ் (Sars- severe Acute Respiratory Syndrome) என்ற கொடிய நோய் அடையாளம் காணப்பட்ட போது அது சம்மந்தமான செய்திகளை மறைத்துவிடவே முதலில் சீனா முயன்றது. உல்லாசப் பிரயாணிகளின் வருகையும், வெளிநாட்டு முதலீடுகளும் பாதிப்புறக் கூடும் என்ற சிந்தனையின் வெளிப்பாடே இந்தநடவடிக்கைக்கு காரணம்.

ஆனால் மறுபுறம் மேற்குலகோ, இந்த விடயத்தை மிகவும் பிரமாண்டப்படுத்தி உண்மைக்கு மாறான பூதாகரமான செய்திகளை வெளிக்கொணர்ந்தது. சீனாவின் அரசியற் கொள்கையான கம்யூனிசமே இதற்குக் காரணம் எனும் பாங்கில் செய்திகள் வெளியிடப்பட்டன. இத்தகைய பிரசாரத்தின் மூலம் கம்யூனிசம் உலகில் தீண்டத் தகாத ஒரு விடயம் எனும் பிரசாரத்தை மேலும் வீறுடன் முன்னெடுப்பதில் மேற்குலகு முனைப்பாக நிற்கின்றது.

இதேவேளை பல்நாட்டுக் கம்பனிகளும் இந்த விடயத்தில் தத்தம் பங்களிப்பைச் செய்தே வருகின்றன. தமது வியாபாரத்தைக் கைவிடவிரும்பாத கம்பனிகள் இவ்வாறான நோய்களை மறைப்பதற்கு முயற்சித்து வருகின்ற அதே வேளை போட்டிக் கம்பனிகள் இவற்றை வெளிப்படுத்துவதில் ஆவலாய் உள்ளன. அவற்றின் நோக்கம் வியாபாரத்தைத் தவிர வேறில்லை.

ஆனால் இத்தகைய நோய்கள் தொடர்பாக எமது முன்னைய சந்ததிகளின் அணுகு முறையோ மேலும் வித்தியாசமானதாக இருந்தது. மத்திய காலப்பகுதியில் ஐரோப்பாவில் 'பிளேக்' நோய் பரவியபோது இத்தகைய இந்த நோயைப்பரப்பும் எலிகள் வாழும் பிரதேசத்தில் வசித்து வந்த யூதர்களே இதற்குக் காரணம் என கருதிய மக்கள் எலிகளோடு சேர்ந்து யூதர்களையும் ஆயிரக்கணக்கில் கொன்றொழித்தனர். சின்னம்மை, மலேரியா, கொலரா போன்ற கொள்ளை நோய்கள் மக்களைத் தாக்கியபோது சூனியக் காடுகளே இவற்றைற ஏவிவிடுவதாக் கருதிய மக்கள் அவ்வாறு சூனியக்காடுகள் எனக் கருதப்பட்டோரைக் பிடித்து உயிருடன் தீமூட்டிக் கொழுத்தினர்.



இன்று விஞ்ஞானமும் மருத்துவமும் முன்னேறியுள்ள நிலையில் நோய்களைப் பரவாமல் கட்டுப்படுத்தக் கூடிய நிலை ஓரளவு உள்ளது. ஆனால், நோய்களைக் கட்டுப்படுத்த முடியாத ஒருநிலை உருவாகுமானால் 'பயங்கரவாதத்தைக்' கட்டுப்படுத்த இன்று எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளைப் போன்று ஒரு நாட்டையோ அன்றி நாட்டு மக்களையோ அழித்துவிட நடவடிக்கைகள் எடுக்கபடலாம் என்று அச்சமும் உருவாகியுள்ளது. தமது அரசியல் எதிரிகளை அழித்துவிட வழிதேடிக் கொண்டிருக்கம் வல்லரசு நாடுகள் தாமாகவே கூட ஒரு நோயைப் பரப்பிவிட்டுக் இத்தகைய நடவடிக்கையிலும் ஈடுபட வாய்ப்பு உள்ளது.

உலகம் என்பது உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்குமானது. ஆனால் மனிதனோ தனக்குத் தேவையான நேரங்களில் மட்டும் ஜீவகாருண்யத்தைப் பற்றிப் பேசிக் கொண்டு வசதியான நேரங்களில் அதனை மறந்து விடுவதுண்டு. நோய்கள் காரணமாக கால்நடைகளையும், பறவைகளையும் கொன்றொழிக்கும் மனிதனின் நடத்தை இத்தகைய இரட்டை வேடத்தை நன்கு புலப்படுத்துகின்றன.

உலகம் அனைத்து ஜீவராசிகளுக்குமான வாழ்விடம் என்பதை ஏற்றுக் கொண்டால் அங்கே தக்கென மாத்திரமே பிழைக்கும். இன்று மனிதகுலம் அச்சுறுத்தலை எதிர் நோக்கியுள்ளதென்றால் 'டைனோசர்' என்ற உயிரினம் உலகைவிட்டு அழிந்துவிட்டதைப் போல மனிதகுலம் உலகை விட்டு அழிந்துவிடும் காலம் நெருங்கிவிட்டதோ என எண்ணத்தோன்றுகிறது.

---


## செவ்வாய்க்கிரகத்தில் உயிர்வாழ முடியுமா?

அமெரிக்க விஞ்ஞானிகள் இரண்டாவது முறையாக செவ்வாய்க் கிரகத்திற்கு அனுப்பிய 'ரோவர் ஆப்பர்சூனிட்டி' என்ற ராக்கெட் பத்திரமாக செவ்வாயில் தரையிறங்கியுள்ளது. தங்களுடைய ஆண்டனாக்களை பூமியை நோக்கி திருப்பியுள்ளது. செவ்வாய் கிரகத்தைப் பற்றி அமெரிக்க நாசா விஞ்ஞானிகள் ராக்கெட் அனுப்பி ஆய்வு செய்து வருகின்றனர். ஏற்கனவே அனுப்பிய ராக்கெட்டிலுள்ள செவ்வாய் ரோபோட் கிரகத்தின் மேற்பரப்பில் ஊர்ந்து சென்று செவ்வாய் கிரகத்தைப் பற்றிய படங்களை அனுப்பிவைக்கின்றன.

இந்நிலையில் செவ்வாய் கிரகத்தின் மறுபுறத்தை ஆய்வு செய்ய ஜூன் மாதத்தில் அனுப்பி வைக்கப்பட்ட ராக்கெட் நேற்று செவ்வாய் கிரகத்தில் பத்திரமாகத் தரையிறங்கியது.

ரோவர் ஆப்பர்சூனிட்டி என்ற ராக்கெட் தரையிறங்கியதும் அதிலிருந்த ஆண்டனாக்கள் விரிந்து பூமியை நோக்கித் திரும்பியுள்ளன. செவ்வாய் கிரகத்தின் மறுபுறத்தை இந்த ராக்கெட் படம்பிடித்து விரைவில் அனுப்பி வைக்கும்.

ராக்கெட்டின் மேல் அமைக்கப்பட்ட ஆறு சக்கரங்கள் கொண்ட ரோபோட் தரையில் இறங்கி செவ்வாய் கிரகத்தைப் படம் எடுக்கும். இந்த ராக்கெட் எடுக்கும் படம் மண்ணின் தன்மையை வெளிப்படுத்துவதாக அமையும். இதைவைத்து செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருந்ததா என கண்டுபிடிக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர்.




ரோவர் ஆப்பர்சூனிட்டியில் உள்ள கேமரா, மற்ற அறிவியல் நுட்ப கருவிகள் அனைத்தும் நன்றாகச் செயல்பட்டு வருகின்றன. எனினும் ராக்கெட்டில் 15 வாட் மின்சாரம் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதனால் நாசா விஞ்ஞானிகள் கவலையடைந்துள்ளனர். ரோபோட்டின் ஒரு கையிலுள்ள ஹீட்டர் செயல்படாததால் வெப்பம் குறைவதாக விஞ்ஞானிகள் நம்புகின்றனர். எனினும் அதை சரிசெய்ய விஞ்ஞானிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

---

## பொங்கி எழுகின்றன

நாம் இன்று
சொந்தங்களை இழந்து
கொண்டு
சொத்துக்களை இழந்து
கொண்டு
உறவுகளைப் பிரிந்து
கொண்டு
தங்கத் தமிழ் மண்ணுக்காக
தன் உயிரேயே
தானமாக்கிய
தங்கங்களை
எங்கள் நெஞ்சங்களில்
வைத்து நாம் இன்று
வெற்றிப் பாதையினைத்
தொட்டு நிற்கின்றோம்.
எம் உள்ளங்களில்
ஊற்றெடுக்கின்ற
எம் உணர்வலைகள்
இன்று பொங்கி
எழுகின்ற
பொங்குதமிழலையில்
மோதுகின்ற போது
எம் உள்ளங்கள்
கேட்கின்ற உரிமைகள்
நிச்சயம் தரப்படும்.
தரப்பட வேண்டும்..

லத்தீபன்
மீனகம்.

# கவிதைக் களம்

## ஈழத்தாய் சபதம்

### எண்பத்தி மூன்றினிலே

எண்பத்து மூன்றினிலே
இந்துமா கடலுக்கு நடுவினிலே- ஆடி
இருபத்து நான்கிற் தொடங்கியதே துயர்
இலங்கைத்தீவினிலே

கண்பட்டதோ இத் தமிழினத்திற்கென
கண்டவர்யாரும் வருந்திட எங்களைப்
புண்படச் செய்தனரே- ஒரு
போக்கிடமற்ற அகதிகளாகியே
எண்பட்ட யாவரையும் தமிழ்
என்றறிந்தால் உடன்
கொன்றெறிந்தார் அந்தோ!

நெஞ்சங் குமுறிடவே- கற்பு
நீங்கிடச் செய்த கொடுமையிலே- அந்தப்
பஞ்சைத் தமிழ் மகளிர் கொடும்
பாவிகளாற் தங்கள் ஆவியை விட்டிட
அஞ்சிய பாலகர்கள் தங்கள்
அன்னையர் மார்பில் அமுதமருந்தியே
துஞ்சிய செய்திகளும் பல
துயரக் கதைகளும் மறந்திடுமோ?

(தொடரும்...)

எஸ்.கருணாநந்தராஜா(யுகசாரதி)

## பாழ்



பெற்றோர் இல்லாத
பிள்ளை பாழ்!
பணம் இல்லாத
பெண் பாழ்!
மணம் இல்லாத
மலர் பாழ்!
மதிப்பில்லாத
மங்கை பாழ்!
மரியாதை இல்லாத
மனிதன் பாழ்!
குழந்தை இல்லாத
வீடு பாழ்!
குரு இல்லாத
வித்தை பாழ்!
குருவை மிஞ்சிய
சீடன் பாழ்!
ஆறில்லாத
ஊர் பாழ்!
அமைதி இல்லாத
நாடு பாழ்!
நல்லாட்சி இல்லாத
மக்கள் பாழ்!

சவுந்தரநாயகம் சந்தியா,
குறிஞ்சாமுனை,கன்னன்குடா.

## நம்பலாமா?

அவள்மீது நான்வைத்த
அன்பின் காரணமாக
அவள் சொன்னதையெல்லாம்
நம்பினேன்
''மேற்கிலே உதிக்கும் சூரிய
அமாவாசையில் தான் நிலவு'
என்றெல்லாம் சொன்னாள்
நம்பினேன்.
இப்போது அவள்
என்மீது காதலில்லை
என்கிறாள்
என்ன செய்வது நம்பலாமா?

சுரேஸ்கோபி
ஆரையம்பதி

## சங்கமம்!

கண்ணோடு இமை சங்கமித்த
காலம் முதல்
கனவோடு உன் உருவமும்
சங்கமித்து
தடம் புரள்கிறது!
இடம் மாறிய என் இதயம்
தடம் மாறி
உன் வலையில்
சிக்கித் தவிக்கிறது!
என் காதல் வாழ்க்கைப் பயணத்தில்
உன்னைக் கடைசிவரை
தொடர முயல்கிறேன்!
சொந்தங்கள் நிலையில்லாத தென்று
தொலைதூரம் போகிறாய் நீ!
ஏன் என்னை வெறுக்கிறாய்?
என்னுயிராக நீ இருப்பதனால்
உன்னில் நான் சங்கமம்!

பா.லக்ஷி
மட்டக்களப்பு.

## ஏன் இந்த ராகங்கள்

விழித்துக்கொண்டே உறங்கிப் போனோம்
எங்கள் சுதந்திரக் காற்றில் ஜன்னி பிடித்தது
அறையப்படாத விம்பமாய்......
இறக்கப்படாத சிலுவையாய்......
எங்கள் உரிமைகளின் ராகங்கள்.
புனையப்படாமலே ஊமையாய்......
எப்போது தூங்கிப்போனோம்?
எப்போதுதான் விழித்திருந்தோம்?
எங்கள் உணர்வுகள் களவு போகும் வரை
சத்தியமாய்த் தெரியவில்லை.
எங்கள் மயானத்து பெருமணலில்
உயிர்களின் சிதை மிச்சமாய்......
எங்கள் சுதந்திரத்தின் ஓரங்கள் எச்சாய்....
புரிந்து கொண்டவர் புரியாமல் உச்சரிக்க
புரியாமல் நின்றவர்கள் புரிந்து கொள்ள உச்சரிக்க....
இப்போதும் எங்கள் உரிமைகளின் ராகங்கள்
யாருமின்றி.... தனியாய்..... ஊசலாய்....

எம்.பிரியவதனா
களுவன்கேணி.

## காதல்


நிஜங்களைத் தொலைத்து
வீட்டு
நிழலைத்தேடும் நிம்மதியற்ற
பயணம்!
தொடமுடியாத சிகரமும்
தொட்டுவிட்டால் விட
முடியாத
தொலையுணர்வும் தான் காதல்!

பொ.வாணி
மண்டூர் - 01

## அதுவரை...

தாகமிருக்கிறது
பக்கத்தில்
நீரோடையும் இருக்கிறது!
என்றாலும் என்னால்
நீரருந்த முடியாது!
சுட்டெரிக்கிறது வெயில்
தலைவெடிக்கும் நிலை!
கால்கள் தளர்கின்றன.
என்றாலும் நிற்கமாட்டேன்!
தமிழினத்தின் உரிமைகள்
கிடைக்கும் வரை!

கே.பத்மப்பிரியன்
வவுணதீவு



## கற்பனை

கற்பனைகளின் மறுபிறவி
நிறைவேறா ஆசைகள்
நிலைத்திருக்கும் சில நிமிடம்
நினைவுகளின் மிகுதியால்
நித்திரையில் தோன்றி
மறையும் நிலையற்ற வாழ்வு!

மு.வ.சுதா
பரந்தன்

# தேடலும் பகிர்வும் 23

இன்று பல்வேறு தரப்பினரும் மனித உரிமை பற்றி பரவலாகப் பலமாகப் பேசுகிறார்கள். குறிப்பாக ''சிறுவர் உரிமை தொடர்பான இத்தகைய அக்கறையாளர்களின் கரிசனை பின்னணி- கொண்டது என்பதைக் கவனத்தில் கொண்டாக வேண்டியுள்ளது. தமிழீழவிடுதலைப் பேராட்டத்தின் போரோய்வுக் காலத்திலும் சிறுவர்களைப் படையில் சேர்ப்பது தொடர்பான ஒரு பக்கக் குற்றச்சாட்டு தமிழர் தரப்பு மீது அடிக்கடி சுமத்தப்படுவது இவ்வாறான எண்ண ஓட்டத்துக்கு கொண்டு வருகின்றது.

தமிழர் தாயகத்தில் சிறுவர் நலன்கள் தொடர்பாகவும் போரினால் பட்ட துன்பதுயரங்கள் தொடர்பாகவும் புரட்டாதி- ஐப்பசி 2003 ''விடுதலைப்புலிகள'' ஏட்டில் ''அறிவான்'' எழுதிய ''போர்சிதைத்த வாழ்வு'' என்ற கட்டுரையில் இருந்து சில வரிகளை நன்றியுடன் பகிர்ந்து கொள்வோம்.

''அரசின் திட்டமிட்ட இன ஒடுக்குமுறையால் சிறுவர்களின் பெற்றோர்கள் அவர்கள் கண்முன்னாலே கொல்லப்பட்டுள்ளார்கள். இதனால் சிறுவர்கள் மன விரக்தி அடைந்ததுடன் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக புகலிடங்களைத் தேடிக்கொண்டனர்.

'' இராணுவ நடவடிக்கைகள் காரணமாக சிறார்களது கல்விச் சாலைகள் அழிக்கப்பட்டதும் அவர் தமது ஊர்களை விட்டு பல தடவைகள் துரத்தப்பட்டதும் அவர்களை மிகுந்த உளத்தாக்குதலுக்கு உள்ளாக்கியது. மேலும் பொருளாதாரத் தடை வறுமை காரணமாக உரிய போசாக்குணவின்றி தொற்று நோய்களுக்கு உள்ளாகினர். இவர்களிற்கு போதிய மருத்துவ வசதியின்மையால் உயிரிழப்பும் ஊனமுறுதலும் ஏற்பட்டன.

'' விடுதலைப்புலிகளின் முகாமிற்கு சிறார்கள் போவதென்பதனை, அவர்களின் பிரச்சினைகளை (பாதிக்கப்பட்ட சிறார்களின்) தீர்ப்பதன் மூலம் தடுக்க முடியுமே தவிர இடைத்தங்கல் முகாம் மூலமாகவோ அல்லது எல்லோரும் சேர்ந்து அதைப்பற்றி கதைப்பதன் மூலமோ தீரப்போவதில்லை. உண்மையில் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களிற்கான செயற்படுதிட்டம் (Actionplan) முற்றுமுழுதாக நடைமுறைப்படுத்தப்படும் போது அவர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படும்போது மட்டுந்தான் நீண்டபோரில் சிதைக்கப்பட்ட எம் சிறார்களின் வாழ்வு உண்மையான வசந்தத்தைக் காணும்''

தம்மை சிறுவர்நல அக்கறையாளர்களாகச் இனங்காட்டி செயற்படுவதாக காட்டுகின்றவர்களும் புத்திஜீவிகளும் இதர்தொடர்புடையவர்களும் இத்தகைய பயனுறுதியான கருத்துக்களை கவனித்து செயற்படுவார்களென நம்புவோம்.

'' மறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதனால்தான் மறுநாளும் வாழ்கிறது'' எனும் தலைப்பிலான தமிழகக் கவிஞர் இரும்பொறையின் கவிதைத் தொகுப்பின் ஒரு கவிதையிலிருந்து சில வரிகளை நன்றியுடன் பகிர்ந்து கொள்வோம்.

''....................................

...............................................

பால்வடியும் முகத்தில்
படைத்தனம் குடியேறியது
உன் நெஞ்சில் விரவிய
விடுதலை வேட்கையின்
வெளிப்பாடுதானே!

'' இந்த அகவையில் (வயது)
நாட்டுப்பற்றா!,
வியப்புக்குறிகளுக்குச் சொல்,
''தாயை நேசிக்க
மீசை முளைக்கத் தேவையில்லை'' என்று

உன் அன்னை
பாலைப்புட்டியில் அடைக்காமல்
தன்சிவப்பு இரத்தத்தை
வெண்மையாக்கி ஊட்டினாள்;

இன்று நீ
தாய்மண் மீட்க
சாவைக் குப்பியில் அடைத்துச்
சரித்திரம் படைக்கின்றாய்

அடக்கு முறையாளர்களால்
முதிர்ந்தது
உன் அறிவுமட்டுமல்ல,
பிஞ்சுக்கைகளும் தான்

ஓங்கிய
உன்கை முட்டினால்
உடைபடுவது
பூட்டிய விலங்குகள் மட்டுமல்ல,
இனவெறிக் கோட்டையும் தான்

உன் நெஞ்சுக்கனலை
ஆதிக்கச் சருகின்மேல்
வாரி வீசு

துணிந்தால்.....
எதிரியின் எலும்பெல்லாம் தூசு,

மறைகின்ற சூரியன்
இரத்தம் சிந்துவதால் தான்
மறுநாளும் வாழ்கிறது.......
விடுதலைப் போராளியைப் போல!''

த.வசந்

மிகவும் அர்த்தம் நிறைந்த வரிகள் இவை. ''தாயை நேசிக்க மீசை முளைக்கத் தேவையில்லை'' என்ற இக் கவிதை பல்வேறு மொழிகளிலும் காத்திரமான முறையில் மொழி பெயர்ப்புச் செய்யப்பட வேண்டும் என்பது காலப் பொருத்தம் கருதிய எமது வேண்டுகோள்.

தமிழீழத் தேசியத்தலைவர் அவர்களின் உள்ளத்துச் சிந்தனையிலிருந்து:- ''இது ஒரு தேசிய விடுதலைப்போர் என்பதால் சுயவிருப்பிலேயே இளம் போராளிகள் எமது இயக்கத்தில் இணைந்து கொள்கிறார்கள். தமது சுயத்தைத் துறந்து, தமது சொந்த வாழ்வின் சுயபோகங்களைத் துறந்து, பந்தத்தின் பற்றுறவுகளைத் துறந்து, தமது மண்ணையும், மக்களையும் நேசிக்கும் விடுதலைப் பற்றாளர்கள் எம்முடன் இணைகிறார்கள். இந்தப் போராளிகளின் இலட்சிய வாழ்க்கையையும், அர்ப்பணிப்பையும் நாம் போற்ற வேண்டும்: கௌரவிக்க வேண்டும்.''

தமிழீழப் பொதுக் கல்வித்தேர்தலில் சித்தி எய்திய மாணவர்களைப் பாராட்டி 13. 02. 1993இல் வெளியிட்ட அறிக்கையிலிருந்து நன்றியுடன் இக்கருத்து பெறப்படுகின்றது.




# அம்மா திரும்பவும் வருவேன்

''வாருங்கோ தம்பி இருங்கோ'' சிறிய குடிசை, குடிசையின் முன்னே அதேயளவு கொட்டில், கொட்டிலின் உள்ளே இரண்டு கதிரைகள். அவற்றில் ஒன்றை எனக்காக நகர்த்திவிட்டார் சபாவின் அப்பா கந்தையா. கதிரைக்குள் சிலநிமிடம் மௌனமாக இருந்தேன். கதையை எங்கே தொடங்குவது, எப்படித் தொடங்குவது. சிலகணம் சிந்தித்தேன். இந்த மண்ணை நேசித்த அவரின் மனைவி, இலட்சியப் பாதையில் பயணத்தை முடித்துக் கொண்ட மாவீரன் சபா, விடுதலையை நேசித்து கைகொடுக்கும் உறவுகள் மொத்தத்தில் கந்தையாவின் குடும்பம் விடுதலைப்பசி நிறைந்த குடும்பம். சிறிலங்காவின் கடற்படை வீரராக இருந்தவர் கந்தையா. நேர்மையும் உண்மையும் அஞ்சாமையும் அவருக்கு விருப்பமானது. ஈழவிடுதலைப் போரினை வழிநடத்தும் தலைவர் பிரபாகரன் அவர்களிடம் இக்குணங்கள் நிறைந்திருப் பதை உணர்ந்தும், காலங்காலமாக தமிழர்கள் இனவாத பசிக்கு இரையாவதும் கந்தையாவை சிறிலங்கா கடற்படை யிலிருந்து வெளியேற வைத்தது. உறுதிமிக்க உடல் உழைப்பாளி. ஆனால் மனைவி பூமணியின் மறைவுக்குப்பின் நன்றாக இளைத்துப் போய்விட்டார். இப்பொழு தெல்லாம் ஒருவரிடமும் அதிகம் பேசவிரும்பமாட்டார்.

''தம்பி என்ன பேசாமல் இருக்கிறியள்'' பேச்சைத் தொடங்கினார். 'ஒன்றுமில்லையப்பா அம்மாவைப் பற்றி கொஞ்சம் கதைப்பமெண்டு வந்தனான்' தம்பி அம்மாவைப் பற்றி சொல்ல முதல் உங்களுக்கு சிலதைச் சொல்ல வேணும், கோவிக்க மாட்டியள்தானே' சொல்லுங்கோப்பா என்றேன். ''நான் இப்ப கடவுளை வழிபடுறதை விட்டிட்டன். நீதிக்காய்ப் போராடி எத்தனை பிள்ளையள் இறந்திட்டுகள். இறைவன் இதுகளின்ர பக்கம் நிக்கேல்லை யென்றால் ஏன் அந்தக் கடவுளை வழிபடோ ணும். களவு, பாலியல் வல்லுறவு எந்த அநீதிகளிலையும் எங்கட பிள்ளையள் ஈடுபட்டது கிடையாது. அப்படியிருக்க அதுகள் ஏன் இறங்கோணும்' அப்பாவின் கண்கள் மெல்லக் கலங்கியிருந்தன. இன்னு மொண்டைச் சொல்லிப்போட்டு அம்மாவைப் பற்றிச் சொல்லுறன் தம்பி. அள்ளுவாரோட இருந்தாலும் கிள்ளுவாரோட இருக்க முடியாது. பிள்ளை இயக்கத்துக்குப் போட்டு தெண்டு சொல்லி, சாப்பிடச் சோறில்லை, உடுக்கத் துணியில்லை எண்டு ஒவ்வொரு நாளும் போய் சண்டையில களைச்சு வந்து நிக்கிற பிள்ளையிட்டக் கேக்குதுகள். எப்படி மனம் வரும் எல்லாப் பெற்றாரும் இப்பிடிப் போய் உதவி கேட்டால் எவ்வளவு செல வாகும்? எந்த இலட்சியத்துக்காய் அந்தப் பிள்ளையள் சாகுதுகளே அந்த லட்சியம் நிறைவேறின பிறகு கேட்கலாம். அவர்களும் உதவி செய்யத்தான் வேணும். இப்ப போய் அவர்களுக்கு தொல்லை கொடுக்கிறதை நான் விரும்பேல்லைத் தம்பி. ஆழமான கருத் தொன்றை சொல்லி விட்டு மகளிடம் தேநீர் எடுத்து வரும் படி கூறினார்.

''தெய்வங்கள் சாப்பிட வந்தாலும் வருங்கள் ''என்று கூறி ஒரு பிடி அரிசியை தனியொரு பானையில் எடுத்து வைப்பார் பூ மணி. இயக்கப் பொடியள் புலிகள் என்று மற்றவர்களை போல சொல்லமாட்டாள். ''தெய்வங்கள்'' என்றே அழைப்பார் அதில அவளுக்கொரு இன்பம் என்று மனைவி பூமணியம்மாவைப் பற்றிச் சொல்லத் தொடங்கினார். 1977ம் ஆண்டு தமிழருக்கு உரிமை வேண்டி தமிழர் விடுதலைக் கூட்டணி தேர்தல் களத்தில் நின்றது. தமிழன் மானத் தோடு வாழ வேண்டும்மென்று விரும்பின என்ற விருப்பத்தை நிறைவேற்றலாம் என்ற ஆசையில் கூட்டணியினர் வெற்றிக் காய் கடுமையாக உழைச்சன். ஐக்கிய தேசியக் காட்சிக்காய் வக்கலாத்து வாங்கிய தமிழர்களை நினைச்சுக் கவலைப்பட்ட இவர்கள்ளெல்லாம் சேர்ந்து வந்து எம்மைத் தாக்கினார்கள் மானத்தோடு வாழ விரும்பியதற்கு எனக்கு கிடைத்த பரிசாய். பொது வாழ்வுக்காய் கிராமத்தில் இனி உழைப்பதில்லை என அன்றே முடிவு வெடுத்தன். என்ர மனிசி அதுக்கு மாறான முடிவை எடுத்தாள். எடுத் தது மாத்திரமல்ல அதுக்கான முயற்சியிலும் இறங்கி விட்டாள். இதனை நான் தடுக்க வில்லை. கண்டும் காணாததும் போலிருந்தேன் தாயின்ர உணர்வுக்கு மகன் செயல் வடிவம் கொடுத்தான்.

தேர்தல் வன் செயலில் ஐ.தே.க ஆதரவாளர் ஒருவரின் கடை தீக்கிரையானது சிங்கள கட்சி யோடு நிண்ட துரோகிகள் எங்களில் பழியைப் போட்டர்கள். 1977ம் ஆண்டு ஆடி மாதம் 30ம் நாள் நானும் கைதாகி முல்லைத் தீவு சிறைச்சாலையில் அடைக்கப்பட்டோம். என் மனைவிக்கு கிடைத்த சிறை வாழ்க்கை அது. ஒரு மாதச் சிறைவாழ்வின் பின் ஒவ்வொரு மாதம் குறைந்தது ஒரு தடவையாவது இராணுவ பொலிஸ் சுற்றி வளைப்புக் குட்படும் இது அம்மாவினர் தேசப்பற்றின் ஆரம்ப காலம் என்று கூறியவர் சில கணம் மௌனமாக இருந்தார் மீண்டும் அவரே தொடங்கினார்.

1982 ற்குப் பிறகு பூமணியின் போக்கிலும் மகன்ர போக்கிலும் நிறைய மாறுதல்கள் கண்டேன். மகன் சில இளைஞர்களோட சேர்ந்து கொக்கிளாய்க்கு வாற பஸ் வண்டிக்கு தீயிட்டு கொழுத்தினான். முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரி நவரட்ணம் தலைமையில் வந்த பொலிஸ் அணி இரவுப் படுக்கையில் வைத்து அனைவரையும் கைது செய்தது. எல்லாம் தெரிஞ்ச பூமணி வாய் திறந்து ஒரு உண்மையைக் கூட எனக்குச் சொல்ல வில்லை. இப்ப நினைச்சாலும் எனக்கு வியப்பாய் இருக்குது

1983க்குப் பிறகு தெரியாத பல புது முகங்கள் வீட்டுக்கு வந்து சொல்வதை தெரிந்தும் மௌமாக இருந்தேன். வாருங்கோ தெய்வங்கள் சாப்பிடுங்கோ என அம்மா வாய் நிறைய அழைத்து சாப்பாடு போடுவாள். இவர்கள் யாராய் இருக்கும் ? எண்டு என் மனதில் கேட்டுக் கொள்வதுண்டு. ஒரு தடவை என்ற சந்தேகத்தை அம்மாவிட்ட வெளியிட்டன்.

உவனோடு வாறாங்கள் போறாங்களஆர் பொடியாள் உவங்கள்? எனக் கேட்டு விட்டேன். ''அது அவனோட படிக்கிற பொடியாளம் அது தான் அடிக்கடி வாறாங்கள்'' எண்டு அம்மா பூசி மெழுகினாள் எனக்கே புலிகள் வருவதை அம்மா மறைத்த அந்த நாட்களை நினைக் கும் போது சிரிப்பு வரும்.

எனக்கு மேலாக மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் தேசப்பற்றும், இனப்பற்றும் வளர்வதைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தேன். ஆனால் மௌனமாகவே இருந்தேன்.

1983இல் வெலிக்கடைச் சிறைச்சாலை யில் குட்டி மணி தங்கத் துரை முதலியோர் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சில தினங்களில் எங்களின்ர விடு சுற்றி வளைக்கப் பட்டது. துண்டுப் பிரசுரங்கள் சிலவற்றை எரிப்பதற்காய் அம்மா கதவைப் பூட்டிக் கொண்டாள். கதவை உடைத்துக் கொண்டு உள்ளே வந்த படையினர் தளபாடங்களை அடித்து நொருக்கினர். புத்தகங்களை அள்ளி வெயியே வீசினர் சில புகைப் படங்களை யும் விடுதலைப் போராட்டம் சார்ந்த சில புத்தகங்களையும் எடுத்தவர்கள் மகனைக் கொண்டு வந்து ஒப்படைக்கோணும் இல்லை யெண்டால் நாயைச் சுட்ட மாதிரி எல்லாரை யும் சுடுவம் என்று மிரட்டி விட்டுச் சென்றனர்.

1984ம் ஆண்டு மார்கழி மாதம் 8ம் நாள் சமரவீர என்னும் இராணுவ அதிகாரியின் தலைமையின் கீழ் பதவியாவி லிருந்து வந்த இராணுவத்தினர் எமது வீட்டை தீக்கிரையாக்கினர். இராணுவ த்தினர் வரப் போவதை முதலிலே அறிந்து கொண்டதால் கையில் கிடைத்த பொருட்களுடன் அங்கிருந்து வெளியேறினோம். கோட்டக் கோணியில் தங்கியிருந்த சில நாட்கள் லெப்.கேணல் புலேந்திரனின் தலைமையில் வந்த வீரர்களுக்கு சமைத்துக் கொடுப்பதிலேயே முழு மூச்சாக இறங்கினாள் அம்மா. பராக்கிரமச் சந்தியில் இராணுவத்தைத் தாக்கிய மறு தினமே



அங்கிருந்து வெளியேற்றப்பட்டோம். மகன் தாயிடம் அறுதியாகச் செல்லி விட்டுப் போன வார்த்தைகளை அப்படியே செயல்ப் படுத்தினாள். ''அம்மா பொடியள் வந்தால் என்னைப் போல நினைத்து உதவி செய் யோணும். பேரென்ன ஊரென்ன என்ற கேள்வியெல்லாம் கேட்கக் கூடாது. ஆமி, பொலிஸ் வந்தால் எப்படியாவது பொடியளைக் காப்பாற்றி விட்டிடு'' அவன் சொல்லிப் போட்டுப் போனதை அப்படியே செய்யத் தொடங்கிவிட் டாள் என்று கூறிய போது அப்பாவின் குரல் தளதளத்தது.

1984ம் ஆண்டு, மார்கழி மாதம் 22ம் நாள் மணலாற்றுக் கிராமமக்கள் அவர்கள் கிராமத்திலிருந்து இராணுவத்தால் கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அளம்பில் கிராமத்தில் வந்து தற்காலிகமாக ஒரு குடிசை அமைத்துக் கொண்டோம். அளம்பிலுக்கு வந்த நாளிலிருந்து அம்மாவின் கை ஓயாமல் சமையல் செய்தது. பிள்ளையள் இரவு பகலாக வந்து சாப்பிட்டுச் சென்றார்கள். போராளிகள் மக்கள் கண்ணில் படாமல் மறைந்து வாழ்ந்த நெருக்கடியான அக்காலத்தில் வெளிப்படையாகவே சமைத்துக் கொடுத்து விடுதலைப்புலிகளுக்கு மக்களுடன் நெருங்கிய இரகசியத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்ததில் அம்மாவுக்குப் பெரும் பங்குண்டு.

1986ல் மகன் மாவீரனாகிய பின்னர், அம்மாவின் பணி அதிகமாகியது. தன் மகளை விடுதலைப் போருக்கு ஆட்சேர்க்கும் பணிக்குத் தூண்டினாள். தாயின் விருப்பையும், உணர்வையும் அறிந்த மகள் அதற்காக முழுமுயற்சியில் இறங்கினாள். இன்று அவருடைய பிள்ளையும் யுத்தத்தில் நிற்பது இந்த உணர்வின் வெளிப்பாடே.

1987ம் ஆண்டு இந்தியப் படைகள் ஈழமண்ணை மாசுபடுத்திய காலத்தில் அம்மாவின் பணி ஆபத்தானதாக ஆனால், துணிவானதாக அமைந்தது. மேஜர் தனம் துரோகிகளால் சுடப்பட்டபோது அவனது உடலைச் சுமந்துகொண்டு ஆவேசத்துடன் புறப்பட்ட மக்கள் கூட்டம் முல்லைத்தீவு இந்தி யப்படை முகாமிற்குள் புகுந்தது. இராணுவ முகாமுக்குள் வேலியைப் பிரித்துப் புகுந்த மக்கள் திரளில் அம்மாதான் முன்னணியில் நின்றார். இதுபோன்று அன்னை பூபதி உண்ணாவிரதம் இருந்தபோது அதற்கு ஆதரவாக அளம்பில், செம்மலை மக்களை அணி திரட்டி அவரது படத்தைக் கையில் தாங்கி இந்தியப் படைமுகாமுக்குள் தடைகளையும் மீறிச் சென்றது இன்று கண்ணில் நிற்கிது. அந்த அபார துணிவை நினைத்து பல தடவைகள் மகிழ்ச்சியால் கண்கலங்கியிருக்கிறேன்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

*331. விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டு க் கழகம், ''நிதர்சனம்'' நிறுவனத்தையும், ''தமிழ்த் தாய்'' வெளியீ ட்டகத்தையும் இணைத்து, ஈழத்த மிழரின் தேசிய விழிப்பையும் போராட்ட எழுச்சி யையும் சொல்லும் நிகழ்வாக 2002இல் யாழ்ப்பாணத்தில் நடத்திய வரலாற்று நிகழ்வு எது?*

''மானுடத்தின் தமிழ்க் கூடல்- 2002''

*332. தமிழர் தாயகப் பொருண்மியத்தின் முக்கிய கூறான கடல் வளப் பயன்படுத் துகைக்குத் தடையாக அமைந்ததும். 1985 நவம்பர் 18ஆந் திகதி ஜே.ஆர். வெளியிட டதுமான சட்டம் எது?*

கடல் வலயம் பாதுகாப்புப் பிரகடனம்.

## ''தமிழீழத்தைத் தெரிந்து கொள்வோம்''

*333. சிங்களக் குடியேற்றங்களை விரிவு படுத்தும் நோக்கில் வன்னியின் நீர்ப்பாச னக் குளம் ஒன்றுடன் மகாவலி கங்கையை இணைக்கும் திட்டம் சிறிலங்காவின் அப் போதைய தேசிய படைத்துறை அமைச்ச ரான அத்துலத் முதலியிடம் இருந்தது. ஈழத்தமிழரது வரலாற்றுத் தொன்மை எச்சங்களைத் தனது சூழலில் கொண்ட அக் குளம் எது?*

கனகராயன் குளம்

*334. 20.04.2003 அன்று கிளிநொச்சியில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள், ஒடுக்குமுறைக்குட்பட்ட தமிழினத்திற்கு ஐம்பது வருடங்களாக மருத்துவப் பணியாற்றிய மருத்துவர் ஒருவரைப் பாராட்டிக் கௌரவித்தார். அவர் யார்?*

வைத்திய கலாநிதி கெங்காதரன் அவர்கள்

*335. இந்திய வன்கவர்வுப் படைகளை புறமுதுகிட்டோடவைத்த ''ஜொனி'' மிதிவெடிகளைத் தேசியத்தலைவர் அவர்களின் வடிவமைப்புக்கேற்ப உருவா க்கியதில் முக்கிய பங்காற்றியது உள்ளிட்ட பல்வேறு போரியல் சாதனை களின் இரகசிய ஆளுமையாய் இருந்த மூத்த தளபதி ஒருவர் புற்று நோயால் 25.08.2002 இல் வீரச்சாவடைந்தார். கேணல் கிட்டு பீரங்கிப் படையணியின் சிறப்புத் தளபதி யாகவும் தாயகப் பணியாற்றிய அந்த மூத்த தளபதி யார்?*



(து.கோமளமைந்தன்)

கேணல் ராயு/ குயிலன் (அம்பலவாணன் நேமிநாதன், ஏழாலை தெற்கு, சுன்னாகம், யாழ்)

*336. 1960களில் வடக்குக் கிழக்கின் ஆட்டுமந்தைகளை இனவிருத்தி செய்வதற்காக வெளிநாடு ஒன்று நல்லினக்கடாக்களை வழங்கிய போது, அனுராதபுர பாராளுமன்றஉறுப்பினர் அதைத்தடுத்து தமது தொகுதிகளுக்கு எடுத்தார். நல்லினக் கடாக்களைத் தமிழர் பகுதிக்கு வழங்கிய வெளிநாடு எது?*

மேற்கு ஜேர்மனி

தொடரும்...

# காத்திரன் பதில்

**கே. காத்திரனே! காதலியைக் கண்டவுடன் தாய், தந்தை எப்படிப் போனாலும் பரவாயில்லை என்று காதலியுடன் போனவர்களைத் திரும்ப சேர்க்கலாமா?**

குணரெட்ணம்~ சித்திரா
செங்கலடி.

ப. காதலுக்குக் கண்ணில்லை. அதனால் தான் பெற்றவர்களை மறக்கின்றனர். ஆனால் பெற்றோரின் நட்புக்கு கண் உள்ளது. அதனால் திரும்ப சேர்ப்பதில் தப்பில்லை.

**கே. காத்திரன் அவர்களே! யுத்தம் நடந்தபோது கைகட்டி வேடிக்கை பார்த்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தமிழ்மக்களைப் பூச்சாண்டியாகக் கருதுகிறாரே. தமிழ் மக்களை ஜனாதிபதி, பிரதமர் என்று இவர் நினைக்கிறாரா?**

சிவகலா. காரைதீவு.

ப. இவர்கள் நினைப்பதெல்லாம் நடப்பதற்கு தமிழர்கள் பொம்மை இல்லை, தமிழர்களுக்குக் கிடைப்பதெல்லாம் இவர்களுக்குக் கிடைக்க வேண்டுமெனக் கருதுபவர்கள் இதுவரையும் கிடைத்த அழிவுகளையும் பங்கு போடுவார்களானால் சரி.

**கே. உடலில் ஏற்படும் நோய்களுக்கு மருந்துகளும் மாத்திரைகளும் பாவித்துக் குணப்படுத்தலாம். ஆனால் காதல் நோயினால் பீடிக்கப்பட்டவர்களுக்கு என்ன மருந்து கொடுக்கலாம் என்று கூறுங்களேன் காத்திரனே?**

ஆர். நித்தி
கணேசபுரம்~ மண்டூர்.

ப. காதலிக்கத் தகுதியற்றவர்களுக்கு மட்டுமே இந்த வியாதி ஏற்படுகின்றது. இவ்வாறானவர்கள் காதலிப்பதைக் கைவிடுவதே சிறந்தது.

**கே. ஆண்பிள்ளை என்றாலும் வீண்பிள்ளை இல்லை என்கிறார்கள். அப்படியானால் பெண்கள் மட்டும் வீண்பிள்ளைகளா?**

சிவலிங்கம்~ சுமதி
ஏறாவூர்~ 04

ப. யார் சொன்னது பெண்பிள்ளைகள் வின் (WIN) பிள்ளைகள்தான்.

**கே. காத்திரனே காதல் அனுபவம் உண்டா?**

ஜெ.குமார் மட்டுநகர்.

ப. அனுபவம் இருந்ததால்தானே மண்ணையும், மக்களையும், தேசத்தையும், தலைவரையும் காதலித்துக் கொண்டே இருக்கிறேன்.

**கே. அன்பான காத்திரனே! சில கணவன்மார் தமது மனைவிகளை கொலை செய்கின்றார்கள். இவர்க்ளைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கானந் நிலோஜினி~ திக்கோடை.

ப. மனைவிஅமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம் என்று ஆண்கள் கூறியதால் இவ்வாறான அயோக்கியக் கணவன்மார் தோன்றுகின்றனர், கணவன் அமைவது இறைவன் கொடுத்தவரம் என்பதை இவர்கள் புரிய வேண்டும்.

**கே. ஆடிஅடங்கும் வாழ்க்கையடா, ஆறடிநிலமே சொந்தமடா. இந்த அடங்கும் சதாமின் வாழ்விற்கு ஒத்தபழமொழி அல்லது பொன்மொழி கூறுங்களேன் காத்திரனே?**

தங்க. நாகேந்திரன்
போரதீவு.

ப. யானைக்கும் அடிசறுக்கும்.
நடக்கும் என்பார் நடக்காது நடக்காதென்பார் நடந்துவிடும் கிடைக்கும் என்பார் கிடைக்காது கிடையாதென்பார் கிடைத்து விடும்.....

**கே. படுவான்கரையில் ஓடும் பேருந்துக்கள் எல்லாம் கரும்புகையைக் கக்கியபடி ஓடுகிறது. இதற்கு என்ன காரணம் காத்திரனே?**

த. லோகிதன்~ அரசடித்தீவு

ப. படுவான்கரை தேன்நாடு அல்லவா. இங்கு இனிப்பைத் தரும் வாழை, மா, பலா போன்ற முக்கனிகள் பழமாவதற்கு புகை தேவை. அதனால்தான் இவ்வாறான பேருந்துக்களின் புகை இவைகளுக்குப் பயன்படுகிறது.

**கே. அன்பின் காத்திரனே! எமது நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

கே. சுஹவா~ குறுமன்வெளி.

ப. நினைப்பதற்கு ஒன்றுமே இல்லை. சிங்களத் தேசத்தலைவர்கள் எல்லாருமே ஒருகுட்டையில் ஊறிய மட்டைகள் தான்.

**கே. கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் மூக்கையா ஏன் இராஜினாமா செய்தார்?**

க.மதியுகன்~ கி.ப.கழகம்
வந்தாறுமூலை.

ப. கிளிக்கென இருந்தபழம் அணிலுக்கும் போகலாம். அப்பழம் அழுகியும் விழலாம் அழுகாமலும் விழலாம்.

**உங்கள் கேள்விகளை:**

**காத்திரன் பதில்**
**தமிழ் அலை**
**கொக்கட்டிச்சோலை**
*எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்*

## தமிழ்அலை ஓராம் ஆண்டு அகவை விழாவையொட்டி அகில இலங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிகள்

**01. கட்டுரைப்போட்டி** *(உயர்தர மாணவ, மாணவிகள் மாத்திரம் பங்குபற்றலாம். கட்டுரைகள் யாவும் பாடசாலை அதிபரின் சிபார்சுடன் அனுப்பப்படல் வேண்டும்)*

தலைப்பு:- 1. நாம் எங்கே போகிறோம்.
2. தமிழர் உரிமையும், வாழ்வும்.
3. போரா சமாதானமா?
4. சமூக மேம்பாட்டில் தமிழ்அலையின் பங்கு

**02. கவிதைப்போட்டி** *(திறந்த போட்டி சகலருக்குமானது, வயதெல்லை கிடையாது)*

தலைப்பு:- புலிகளே தமிழர், தமிழரே புலிகள் (50வரி)

**03. சிறுகதைப்போட்டி** *(திறந்த போட்டி சகலருக்குமானது, வயதெல்லை கிடையாது, அவரவர் விரும்பிய தலைப்பில் சமகாலப் பிரச்சினையை மையமாக வைத்து எழுதப்படல் வேண்டும்)*

குறிப்பு:- ஒவ்வொரு போட்டியிலும், பரிசுபெறும் முதல் மூன்று போட்டியாளர்களுக்கும் பெறுமதிவாய்ந்த பரிசுகள் வழங்கப்படும். மேலும் ஐந்து பேருக்கு ஆறுதல் பரிசுகளும் வழங்கப்படும்.
இப்போட்டியில் தமிழ்அலை ஊழியர்களோ, அவர்களது பிள்ளைகள், உறவினர்களோ பங்குபெறமுடியாது. போட்டிகள் சம்பந்தமாக எந்தவித கடிதங்களும் தொடர்புகளும் கண்டிப்பாகத் தவிர்க்கப்பட்டுள்ளது.
நடுவர்களின் தீர்ப்பே முடிவான முடிவாகும்.

**அனுப்ப வேண்டிய முகவரி.**
**தமிழ்அலை**
**பிரதானவீதி, கொக்கட்டிச்சோலை.**

*கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் என்ன போட்டி என்பதை தெளிவாக எழுத வேண்டும்.*

**மாணவர்களின் ஆக்கங்கள் அதிபரால் உறுதிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.**

முடிவுத்திகதி:- 29.02.2004

## மணமகள் தேவை

1961இல் பிறந்த கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த மட்டக்களப்பில் Staff officer தரத்தில் கௌரவமான உத்தியோகம் பார்க்கும் குடிப்பழக்கமற்ற சகோதரனுக்கு 32-35 வயதுக்குட்பட்ட குடும்பப் பாங்கான அழகிய பெண்ணை லண்டனில் வசிக்கும் அவருடைய அக்கா தேடுகிறார். உத்தியோகமற்றவர்களும் தொடர்பு கொள்ளலாம். இரகசியம் காக்கப்படும். தொலைபேசி இலக்கம் உட்பட முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள்

முகவரி:- தி.கௌரி
மே/பா தமிழ்அலை
240, திருமலை வீதி,
மட்டக்களப்பு.

## அம்மா திரும்பவும்.....

18ம் பக்கத் தொடர்ச்சி.....
இந்தப் படுபாதகர் கண்களுக்குத் தெரியவில்லையா'? என்று கண்ணீர் விட்டு அழுத நாட்கள் பல. யுத்த முனையில் விடுதலைக்கு விழுதாகிய வீரர்களின் வீடுகளில் அம்மாவின் கால்கள் படாத வீடு முல்லை மாவட்டத்தில் இல்லையென்றே கூறலாம். லெப்.சபாவின் அம்மா என்றால் தெரியாத மக்கள் இல்லை. மாவீரர்களின் பெற்றோர்களுக்கு வீடு வீடாகச் சென்று ஆறுதல் கூறிய கருணைக் கடலை, வீரருக்கு ஓயாது உணவு சமைத்துக் கொடுத்து உணர்வூட்டிய தாய்மையை, பலமான இயக்கமான விடுதலைப்புலிகள் உருவாக பக்க பலமாக நின்ற வைரத்தை, போராளிகளின் பசி தீர்த்த சுமை தாங்கியை இந்த மண் இழந்த அந்த நாள் நெஞ்சை விட்டு அகலாது.

நோயுற்ற தன் இறுதிப் பயணத்துக்காய் படுக்கையில் கிடந்த அம்மாவைச் சுற்றி நின்ற பெண் போர்ாளிகள் வாய்விட்டு அழுதனர். சாவுக்கு அஞ்சாத அந்தப் பிஞ்சு உள்ளங்களின் கண்கள் கண்ணீர் சிந்தின. 'அம்மா உங்கட கையால எப்ப இனி சாப்பாடு வாங்கிச் சாப்பிடப் போறம்' என வார்த்தைகளைக் கொட்டி அழுதனர். அழாதேங்கோ பிள்ளையள், அம்மா திரும்பவும் வந்து சாப்பாடு சமைத்துத் தருவா என்று அவர்களை ஆறுதல்படுத்த பூமணியின்ர கைகள் மீண்டும் சரிந்தது. சொல்ல முடியாத அப்பா வேட்டித் தலப்பினால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டார். மனைவியினதும் மகனதும் தியாகத்தைச் சுமந்து வாழ்ந்த அப்பாவும் இன்று மறைந்து விட்டதாய் அறிகின்றேன். அவருடைய பேரப்பிள்ளையள் களத்தில் நிற்கின்றனர். நீண்ட இவர்களின் விடுதலை வரலாற்றை அவர்களிடமே கேட்டு அறியலாம்.

## தமிழ்அலை ஓராண்டு வெற்றிக் கிண்ணம்

*கிழக்கு மாகாணத்தின் ஒரே பத்திரிகையான தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையின் மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறையினரால் மட்டு. அம்பாறை மாவட்ட உதை பந்தாட்ட சங்கங்களினால் பதிவு செய்யப்பட்ட உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி*

- இச்சுற்றுப் போட்டியில் கலந்து சிறப்பிக்கவுள்ள மட்டு.அம்பாறை மாவட்ட உதைபந்தாட்டக் கழகங்கள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ இல. 46, பயனியர் வீதியில் அமைந்துள்ள மட்டு. அம்பாறை மாவட்ட விளையாட்டுத்துறை செயலகத்துடன் தொடர்வு கொள்ளவும்.
- போட்டி நுழைவு விண்ணப்பப் படிவங்களை 15.03.2004 முதல் அனுப்பி வைக்கவும்.
- இடம்:- மட்/இந்துக் கல்லூரி மைதானம்.
- காலம்:- (01.04.2004 முதல் 05.04.2004) வரை
- போட்டிகள் யாவும் விலகல் முறையில் (Knock out) இடம்பெறும்.
- போட்டிகள் யாவும் உதைபந்தாட்ட சட்ட விதிகளுக்கு அமைவாக நடாத்தப்படும். (சீருடை, காலுறை என்பன கண்டிப்பாக ஒரே நிறத்தினையுடையதாக இருக்க வேண்டும். இலக்கம் தெளிவாக இருக்க வேண்டும்.
- இச்சுற்றுப் போட்டியில் பங்கு பற்றி வெற்றி பெறுகின்ற அணிகளுக்கு
  - முதலாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம்ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - இரண்டாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - மூன்றாம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - நான்காம் இடத்திற்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - நன் நடத்தை அணிக்கு:- தமிழ்அலை முதலாம் ஆண்டு நிறைவு வெற்றிக் கிண்ணமும், பரிசில்களும் வழங்கப்படும்.
  - இது தவிர சிறந்த வீரர், சிறந்த கோல் காப்பாளர், சிறந்த தொடர் வீரர் ஆகியோருக்கு விசேட பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்படும்.
- போட்டி நுழைவுக் கட்டணமாக 250 ரூபா அறவிடப்படும்.

Regd. as a News Paper at the G.P.O.(QD/25/NEWS/2004)

# அலையின் பார்வையில்





சிங்கள இனவெறியர்களின் கொடூரத்தால் கொக்கட்டிச்சோலை பிரதேசத்தில் படுகொலை செய்யப்பட்ட 185 பொதுமக்களின் 17வது ஆண்டு நினைவுகூரல் காட்சிகள். ஆண்டுகள் 17கடந்த போதும் தமிழ் மக்களின் மனங்களில் இப்படுகொலைகள் மாறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது.





இரண்டாம் லெப்ரினன் மாலதி படையணியின் ''விழுதாகி வேருமாகி'' நூல் அறிமுக நிகழ்வு அண்மையில் வவுனியா கூட்டுறவு திணைக்கள வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நூலாசிரியர்களில் ஒருவரான மலைமகள் சிறப்புரையாற்றுகின்றார். நூல் அறிமுக நிகழ்வில் கலந்து கொண்ட ஒரு பகுதி மக்கள்.
(படம், தகவல்:- கனகரவி)




களுவாஞ்சிகுடி சக்தி இல்ல மாணவர்களுக்கு சுவிஸ்லாந்து சக்தி சமூக நலன்புரி நிலையத்தினால் பாடசாலை போக்குவரத்திற்காக 15 துவிச்சக்கர வண்டிகள் அன்பளிப்பு செய்யப்பட்டன. மாணவிகள் வழிபாட்டில் ஈடுபடுவதையும், துவிச்சக்கர வண்டியுடன் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்,தகவல்:-எஸ்.ரவீந்திரன்)


மட்டுநகரில் கோலகலமான திறப்பு விழா
05.02.2004
**Shakthi Ceramic**
சக்தி செரமிக்
உங்களுக்குத் தேவையான சகல விதமான
✓Wall tails
✓Floor tails
✓Bathroom fittings
✓Pipes & Fittings
இவற்றினை தரமாகவும், குறைந்த விலையிலும் பெற நாட வேண்டிய ஒரே இடம்
சக்தி செரமிக்
இல. 21, 2ம் குறுக்கு தெரு,
மட்டக்களப்பு.
Tel.077 6073768
071 2520536




அண்மையில் மன்னார் மாவட்ட அபிவிருத்தி தொடர்பாக மன்னார் அரச அதிபர் வி.விசுவலிங்கம் தல்லமையில் நடைபெற்ற கூட்டத்தில் அரச அதிபரும் திணைக்களங்களின் மேலதிகாரிகளும். (படம்:-கனகரவி)

இப்பத்திரிகை கொக்கட்டிச்சோலை பிரதான வீதியில் உள்ள நித்திபதிப்பகத்தில் அச்சிட்டு 01-02-2004 அன்றுவெளியிடப்பட்டது.